இறக்கை: 11 இறகு: 3

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

காக்கை கரவா கரைந்துண்ணும்


மார்ச் 2022 | விலை ₹40






## மணிப்பால் பல்கலைக்கழகத்தில் சித்தமருத்துவத்துடன் இணைந்த கூட்டுமருத்துவச் சிகிச்சை

# மடல் திறப்பு




காக்கை வந்து வாசித்து விட்டேன். வழக்கம்போல் சிறப்பாக வந்திருக்கிறது. கட்டுரைகள் நான்கு பக்க வரையறையில் வந்திருக்கின்றன. எப்போதும் இரண்டு பக்கம் எழுதும் ஆ.சி.சு. கட்டுரை மட்டுமே ஐந்து பக்கம். எப்போதும் பல பக்கங்கள் எழுதும் மோகன்ராஜன் கட்டுரை மூன்று பக்கம் என்பது வியப்பு. க.பழனித்துரை, தஞ்சாவூர் கவிராயர், சொல்லாக்கியன், ஆ.சி.சு., ஆகியோரின் கட்டுரைகள் குறிப்பிடப்பட வேண்டியவை. சங்க இலக்கியத்தில் ஊறுகாய் சிறுகதை, எள்ளல்.

–சு.இராமசுப்பிரமணியன், தோவாளை

காக்கை பிப்ரவரி-2022 இதழ் (இதழ்125) அட்டை தொடங்கி இதழின் பக்கம் தோரும் காத்திரமான செய்திகளை முன் வைத்துப் பேசுகிறது. ஒன்றிய அரசின் ‘தில்லிதர்பார்’ அதிகார அரசியல் பற்றிய டிராட்ஸ்கி மருது அவர்களின் ‘வடவர் அரசியல்’ வடவர் வன்முறை என்றே பார்க்க வேண்டும். கொடிகாத்த குமரனைவிட வடவர் வன்முறைக்கு கோட்சேக்களே தேவைப்படுவதாக இருக்கிறார்கள். ஆட்சிகள் மாறுகின்றன, காட்சிகள் மாறுகின்றன; அரசு அப்படியேதான் இருக்கிறது என்பதைத் தலையங்கம் அழுத்தமாகப் பேசியுள்ளது. காக்கைக்கு மட்டுமேயான அறத்துதுணிச்சல் அது. சொல்லாக்கியனின் கொரோனாவும் அறக்கட்டளை முதலாளித்துவமும், உலக முதலாளித்துவத்தின் கொரோனா முதலீட்டு அரசியல் குறித்த எள்ளலான விமர்சனத்தை முன்வைத்துக் கொண்டுள்ளது. நல்லதொரு எழுத்து நடை. அ.க.பெ.ருமாளின் கட்டுரைச் செய்தியை புனைப் பகடியாகச் சொல்லியிருக்கிறார் உத்திரபுத்திரன். ஆ.சிவசுப்பிரமணியன் கட்டுரை தேரிக்காட்டு வாழ்வை ஆவணப்படுத்துகிறது.

எதிலும் எப்பொழுதும் என்ன பயன் என்றே அளந்து/ அளந்து அளக்க முடியா வாழ்வை/அடக்கி ஒடுக்கி/ ஒழித்துவிட்டாய் நீ –என்ற பஞ்சு அவர்களின் கவிதை வரிகளில் நின்றே இவ்விதழ் மானுட வாழ்வை அலசுகிறது. காக்கை சிற்றிதழ், தன் பெருஞ்சிறகை வானளாவ விரித்துப் பறக்கிறது! வாழ்த்தும்,அன்பும்.

–இரா. மோகன்ராஜன். முத்துப்பேட்டை.

காக்கைச் சிறகினிலே
காக்கை கரவா கரைந்துண்ணும்

இறக்கை: 11 இறகு: 3

திருவள்ளுவராண்டு 2053

பங்குனி
மார்ச் 2022

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

பொறுப்பாசிரியர்
க. சந்திரசேகரன்
9715146652

ஆசிரியர் குழு
இரா. எட்வின்
முகிலன்
அமரந்த்தா
கசன்

தொடக்க கால நெறியாளர்கள்
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

நெறியாளர்கள்
டிராட்ஸ்கி மருது
க. பஞ்சாங்கம்
கே. எம். வேணுகோபால்

புலம்பெயர் நாடுகளுக்கான
தொடர்புக்கு:

கனடா:
மான்சிங்
T. Rajahmansinghe
aharaj34@yahoo.ca

ஐரோப்பா:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail. com

காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், கட்டுரையாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

# குரலற்றவர்களின் குரலாய்...

திராவிட இயக்கத்தின் மாபெரும் அரசியல் ஆளுமைகளாகத் தமிழ்நாட்டு மக்களால் இன்றளவும் கொண்டாடப்பட்டு வருகிற அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா உள்ளிட்ட தலைவர்கள் எல்லாம் எட்டிப்பிடிக்க முடியாத வெற்றிமுனைகளை எட்டிப்பிடித்திருப்பதன் மூலம் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளை மட்டுமன்றி வடக்கத்தியர்களையும் திரும்பிப்பார்க்க வைத்திருக்கிறார் மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின். ஒன்றிரண்டு நிகழ்வுகளில் கசப்புணர்வுகள் தலைதூக்கினாலும் கட்டுக்கோப்போடு களத்தில் நின்ற கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் இதில் உரிய பங்கு இருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை, சட்டமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை, பேரூராட்சி – நகராட்சி – மாநகராட்சித் தேர்தல்களில் அறுதிப் பெரும்பான்மை என மக்கள் வெற்றிக்கனிகளை அள்ளிஅள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். உழைக்கும் மக்களின் இந்த நம்பிக்கையையும் அவர்தம் எதிர்பார்ப்பையும் கவனத்தில் கொண்டு செயல்படவேண்டிய பெரும் பொறுப்பும் தார்மீகக் கடமையும் அரசுக்கு இருக்கிறது. ஊராட்சி தொடங்கி சட்டமன்றம் வரை ஒரு கூட்டணியினரே மக்கள் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற நிலையில் தப்பித்தவறி ஒரு சுட்டுவிரலை நீட்டினால்கூட எஞ்சிய நான்கு விரல்களும் அவர்களை நோக்கியேத் திரும்பும் என்பதையும் மக்கள் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் உள்ளத்தில் பதியவைத்துக்கொண்டு செயல்பட வேண்டும்.

இது ஒருபுறம் இருக்க இவ்வளவு தோல்விகளுக்கிடையிலும் சமூகநீதிக்கு எதிரான சாதி,மத, சனாதனங்களைத் தூக்கிப்பிடிக்கிற பிற்போக்கு சக்திகள் துவண்டுவிடவில்லை. எங்காவது புகுந்து, எதிலாவது நுழைந்து முண்டிக்கொண்டேதான் இருக்கிறார்கள். கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைபெற்றுத் தருவதாகக் களத்தில் இறங்கி மிகப்பிற்படுத்தப்போட்டோரிலும் மிகவும் பிற்படுத்தப்பட்டோராக வாழ்கிற விளிம்புநிலைச் சமூக மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையில் பகைமுரண்களை உருவாக்குகிற வேலைகளைத் தொடங்கியிருக்கிறார்கள்.

குறிப்பாக, 'தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நாவிதர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் முடிவெட்ட மறுக்கிறார்கள்' என்று சொல்லி ஊடகங்களில் வந்த செய்திகளின் அடிப்படையில் கோட்டாட்சியர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் எல்லாம் நிகழ்விடத்துக்குப்போய் வந்ததாகக் காட்சிகள் வெளியாகின. அதிலுள்ள உண்மைத்தன்மை என்ன என்பதெல்லாம் வெளியில் வரவில்லை. ஆனாலும் இதில் அரசு கவனம் குவிக்க வேண்டும்.

கிராமங்களில் சாதிச்சிறுபான்மையினராக, விளிம்புநிலைச் சாதியினராக, மிகப் பிற்படுத்தப்பட்டோரிலும் மிகவும் பிற்படுத்தப்பட்டோராக வாழ்நிலையில் உழல்கிறவர்கள்தான் வண்ணார், நாவிதர், குயவர், தச்சர், கொல்லர், ஒட்டர் உள்ளிட்ட எளிய மக்கள். ஊருக்கு ஒன்றிரண்டு குடும்பத்தினராக வாழ்கிற உதிரிச் சாதி மக்கள். ஆனால், குடிமைச் சமூகத்திற்கு உதவியாக நிற்கிறவர்கள்; வாழ்நிலையிலும் பொருளாதார நிலையிலும் கிராமங்களிலுள்ள ஆதிக்க சாதியினரை அண்டிப் பிழைக்கிற சாதாரண மக்கள். தாழ்த்தப்பட்ட மக்களில் அருந்ததிய மக்களுக்கென தனி உள் ஒதுக்கீடு இருப்பதைப்போல மிகப் பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீட்டிலிருந்து 'மிகப் பிற்படுத்தப்பட்டோரில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்' என உள்ஒதுக்கீடு பெறுவதற்கான எல்லாத் தகுதிகளும் இருந்தும் வாயில்லாப் பூச்சிகளாய் ஊர்ந்து கொண்டிருப்பவர்கள். அத்தகைய ஒடுக்குமுறைவாழ்வில் உழன்றுகொண்டிருக்கிற மக்களை வீதிக்கு இழுப்பதன்மூலம் விளிம்புநிலைச் சமூக மக்களையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் மோதவிட்டு இரத்தம் குடிக்கப் பார்க்கிறார்கள்.

எனவே, சாதியத் திரட்சியோ, அரசியல் பின்புலமோ, அதிகாரப் பின்பலமோ இல்லாத அந்த மக்களுக்கு அரசுதான் முன்கை கொடுக்கவேண்டும். குரலற்றவர்களின் குரலாய் நாம் இதனை கவனப்படுத்துகிறோம். அரசு கவனம் கொள்ளவேண்டும். •

காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி
உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே'
அஞ்சல் செய்யப்படுகிறது.
5ஆம் தேதிக்குள்
இதழ் கிடைக்கப்பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: **98414 57503**

**உறுப்பினர் கட்டணம்**

தனி இதழ் விலை ........................ ரூ. 40
ஆண்டுக் கட்டணம் ........................ ரூ. 400
இரண்டு ஆண்டுக் கட்டணம் ....... ரூ. 750
ஐந்தாண்டுக் கட்டணம் .................. ரூ. 2000
மாணவர் சந்தா ................................ ரூ. 300

(மாணவர்கள், கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

பணவிடை (மணியார்டர்) மூலமும் சந்தா செலுத்தலாம். காசோலைகள், வங்கி வரைவோலைகள் அனைத்தும்

KAAKKAI,
A/c No. **60111010005660**
CANARA BANK,
TRIPLICANE, CHENNAI - 5.
IFSC: **CNRB0016011**

என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

Google மூலம் செலுத்த: **98414 57503**

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

ஆண்டுக் கட்டணம் ......................... **$ 40**

உறுப்பினர் கட்டணத்தை

KAAKKAI,
A/C NO. **60111010005660**
CANARA BANK,
TRIPLICANE, CHENNAI - 5
என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்க வகையில் அனுப்ப வேண்டும்.

**தொடர்பு முகவரி:**

காக்கை, 22, MJB தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
செல்பேசி: 98414 57503,
தொலைபேசி : 04428471890

மின்னஞ்சல்:
**kaakkaicirakinile@gmail.com**

முகநூல்:
**www.facebook.com/kaakkai.cirakinile**

## சிறகுக்குள்ளே...

ஹிஜாப் உடையரசியல்..!
**இரா. மோகன்ராஜன்** ........................ 05

சோவியத் ஒன்றியத்துக்கு வருமாறு
பகத்சிங்குக்கு அழைப்புவிடுத்த ஸ்டாலின்
**பிரபால் சரண் அகர்வால், ஹர்ஷவர்தன்** ........................ 11

கிராமத்து மக்களின் பொறுப்பில்
கிராமங்கள் இருக்க வேண்டும்
**க. பழனித்துரை** ........................ 14

மணிப்பால் பல்கலைக்கழகத்தில்
சித்தமருத்துவத்துடன் இணைந்த
கூட்டுமருத்துவச் சிகிச்சை
**க. சந்திரசேகரன்** ........................ 18

மக்கள் நலனை மறந்த
ஒன்றிய அரசின் பட்ஜெட்
**நிகழ் அய்க்கண்** ........................ 21

பிங்கு மலையாளச் சிறுகதை
**சி.வி.ஸ்ரீ ராமன்** ........................ 24

ஆப்கனில் பெண்கள் படும் துயரம்
சர்வதேச சமூகம் தலையிட வேண்டும்
**சு.அழகேஸ்வரன்** ........................ 28

மாட்டு மருத்துவர் பரதேசியா பிள்ளையின் கதை
**அ.கா.பெருமாள்** ........................ 32

முலை அறுத்தலும் முலை பறித்தலும்
**சு.இராமசுப்பிரமணியன்** ........................ 36

கவிதா மண்டலத்தில் சித்தன்
**புதியமாதவி** ........................ 40

அமணமாகிய சமணம்
**தராசு ஷ்யாம்** ........................ 42

பச்சையம்
**ஜவ்வாது முஸ்தபா** ........................ 46

குறளும் பொருளும்
**டாக்டர் புதேரி தானப்பன்** ........................ 52

மருத்துவர், டாக்டர் அருள்அமுதன் நேர்காணல்
**நேர்கண்டவர்: க. சந்திரசேகரன்** ........................ 56

தலை கொய்தல்
**மொஹ்சின் ஹமித்** ........................ 64



வீரவணக்கம்

'முகம்' மாமணி; மூத்த இதழாளர்; திராவிட இயக்கச் சிந்தனையாளர்; முகம் இதழை பல பத்தாண்டுகளாய் தொய்வின்றி முன்னெடுத்துச் சென்றவர். இதழியல் தோழமை 'முகம்' மாமணிக்கு காக்கையின் வீரவணக்கம்.

கட்டுரை

இரா. மோகன்ராஜன்
mohanrajan.r@gmail.com

ஹிஜாப்

# உடையரசியல்..!

''நான் கவலைப்படவில்லை; புர்கா அணிந்ததால் என்னை நோக்கி ஜெய் சிறிராம் என்று முழக்கம் எழுப்பினர்; அதனைத் தொடர்ந்தே நான் 'அல்லாகு அக்பர்' என்று கூறினேன்!''
–முஸ்கான்.

கர்நாடகாவில் தான் பயிலும் ஹாசன் அரசுப்பள்ளிக்குள் நுழைந்த முஸ்கான் என்ற முஸ்லீம் மாணவிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வளாகத்திற்குள் எங்கிருந்தோ வந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் யாதொருவர் கழுத்திலும் காவித் துண்டு அணிந்திருந்தனர். முஸ்கானுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. திகைத்தார். அடுத்து அந்தக் கும்பல் முஸ்கானைச் சுற்றி வந்து ஜெய் சிறிராம் என்று கூச்சலிடத் தொடங்கிய போதுதான் அவளுக்கு நிலைமை உறைக்கத் தொடங்கிற்று.

அவர்கள் வழக்கமாகக் கிண்டல், கேலி செய்யும் சக மாணவர்கள் அல்லர். தன்னை விட்டுவிட்டுத் தான் அணிந்திருக்கும் உடையைச் சுட்டி மதத்தின் மீதானக் காழ்ப்பில் கூச்சலிடுகிறார்கள் என்பதை உணர்ந்தபோது அந்த சின்னஞ்சிறு பெண் திகைத்துப் போகிறாள். தான் அணிந்திருக்கும் உடை குறித்த ஆணாதிக்க, மத ஆதிக்க அரசியல் என்பதை உடனடியாக புரிந்து கொள்ள அவளுக்கு நேரமாகவில்லை.

வழக்கமானக் கிண்டலை ஒரு சிறு புன்னகையில் அலட்சியப்படுத்திச் செல்லும் அவளுக்கு இது அறச்சீற்றத்தை அளித்தது. எந்த கடவுளைக் கொண்டு என் உடைக்காகவும், அதன் உள்ளாக இருப்பதாகக் கருதும்; மதத்திற்கு எதிராகவும் கூச்சலிடுகிறாயோ அந்த மதமும், நீ ஆதரித்து கூச்சலிடும் மதத்தின் கடவுளும் உன்னைவிடப் பெரிய ஆள் என்ற தொனியில் பதிலுக்கு தனது கைகளை உயர்த்தி 'அல்லாகு அக்பர் என்கிறாள்.

இதை சற்றும் எதிர்பாராத அந்தகும்பல் வேறுவழியற்று ஊளையிட்டுத் திரும்புகிறது. இந்த காட்சிச் சமூக வலைதளங்களில் வெளிவந்தப் போதுதான் இப்படியான மதவெறி அராஜகம் கர்நாடக மாநிலப் பள்ளி கல்லூரிகளில் அரங்கேறிக் கொண்டிருப்பது வெளியுலகுக்குத் தெரியவந்தது.

பாஜக ஆளும் மாநிலங்கள் மட்டுமல்லாது ஒன்றியத்தில் அது ஆட்சி அமைத்ததிலிருந்து கல்வி, சமூக, கலாசார, வேலை வாய்ப்பு நிறுவனங்கள் என தொடங்கி பல தளங்களில் அது அரசியல் சட்ட விதிகளுக்கு முரணாக தனது நிழல் அமைப்புகளைக் கொண்டு பிளவு அரசியல் செய்து வருகிறது அவற்றில் ஒன்றுதான் தற்போது கர்நாடக மாநில அரசில் அங்கம் வகிக்கும் பாஜக அரசின் துணையுடன் கல்வி நிறுவனங்களுக்குள் நுழைந்து தனது மதவாத அரசியலை முன்னெடுப்பதாகும்.

கர்நாடகாவில் ஆளும் பாஜக அரசு பள்ளி சீருடை சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வந்தாலும் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் ஹிஜாப், புர்கா போன்றவற்றை முஸ்லீம் மாணவிகள் அணிந்துவர தடையேதும் விதிக்கவில்லை. மேலும் குறிப்பிட்ட முஸ்கான் பயிலும் பள்ளியில் அண்மையில்தான் அதற்குத் தடை விதிப்பதாகப் பள்ளி நிர்வாகம் அறிவித்துக் கொண்டுள்ளது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து கடந்த திசம்பரில் ஹசன் அரசு பள்ளி மாணவிகள் 6 பேர் தொடர்ந்து உள்ளிருப்புப் போராட்டம் ஒன்றை நடத்திக் கொண்டுள்ளனர். பள்ளிச் சீருடையை முற்றிலும் துறந்துவிட்டு புர்காகாவையோ அல்லது ஹிஜாபையோ அந்தமாணவிகள் அணிந்துவரவில்லை. இன்னும் சொல்லப்போனால் அவர்கள் சீருடைமீதே ஹிஜாபை அணிந்து கொள்ளும் உரிமையைக் கோரிக் கொண்டுள்ளார்கள். ஹிஜாப் என்பது முஸ்லீம் பெண்கள் தலையைச் சுற்றி கழுத்துவரை அணியும் ஓர் மறைப்புத் துணி. மேலும் சீருடை மீது புர்காவை அணிந்து வந்து அதைப் பள்ளியில் கழற்றி வைத்துவிட்டு மீண்டும் பள்ளிக்கு வெளியே வரும்போது அணிந்து கொள்ளும் ஒன்றாகவே இந்தியா முழுமையும் முஸ்லீம் பள்ளி கல்லூரி



**பெண்கள், தலித்துகள், விளிம்பு நிலையினர் கல்வி கற்பதை அடிப்படையில் ஏற்காத ஆர்.எஸ்.எஸ், சங்கபரிவாரம் மற்றும் பாஜகவினர் பெண்கள் கல்வி கற்பதை பொது வெளிக்கு வருவதை, விழிப்புணர்வு பெறுவதை தடுப்பதற்கு புர்காவையும், ஹிஜாபையும் ஒரு காரணமாக முன்வைக்கத் தொடங்கியுள்ளதன் பகுதி அரசியலாகவே இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.**

மாணவிகளுக்கான அனுமதியும், ஏற்பாடுமாக இருக்கிறது.

தற்போது ஹசன் பள்ளியில் திடீரென்று இதற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு எதுவித முகாந்திரமும் இருக்கவில்லை. ஆனால் பள்ளி நிர்வாக வளர்ச்சிக் குழுவில் ஆளும் பாஜக கட்சியிரின் பங்கேற்பும் தலையீடும் இருப்பதனால் ஹிஜாபிற்கு தடைவிதிக்கக் கோருகிறார்கள். இந்தியா முழுமையும் பாஜகவினரின் இந்த திட்டமிட்ட சிறுபான்மையினருக்கு எதிரானப் போக்குக் குறிப்பாக முஸ்லீம்களுக்கு எதிரானப்போக்கின் ஒரு பகுதியாகவே இந்த ஹசன் பள்ளி சிக்கலையும் பார்க்க வேண்டியுள்ளது. பள்ளி நிர்வாகமும், பெற்றோர்களும் பேசித் தீர்க்க வேண்டிய ஒன்றை மாநிலம் முழுமைக்குமான ஒன்றாக பாஜக வழமை போல மாற்றிக் கொண்டுள்ளது.

ஹிஜாப் என்பது பூணூலைப் போன்றோ அல்லது பட்டை, நாமம், சிலுவை போன்றோ ஓர் மதக் குறியீடு அல்ல. அது ஒரு சமூகப் பண்பாடு சார்ந்த உடையின் பகுதி. புர்காவும் அப்படியே. வேட்டி, லுங்கி, புடவை போன்றவை எங்கும் மத உடையாக, குறியீட்டுச் சின்னமாகக் கருதப்படவில்லை. மதத்தைப் பின்பற்றுவதனால் இவ்வுடைகளை யாதொருவரும் அணிவதில்லை. மாறாக அவ்வுடைகளை அணிபவர்கள் குறிப்பிட்ட மதங்களைப் பின்பற்றுகிறார்கள். கோட், சூட் போட்டவர்கள் கிருத்துவர்கள் என்று அடையாளப்படுத்திவிட முடியாது அது ஐரோப்பியப் புவிசார் சூழலுக்கேற்ற ஆடை அவ்வளவே. வேட்டி. சேலை என்பதும் அப்படியே. பொதுவாக உடைகள் புவிச் சூழலுக்கும் உடலுக்கும் ஏற்ப இசைந்துச் செல்லும் விதமாக உடுக்கப்படுகிறது. அதுவே அந்நிலம் சார் பண்பாடாகவும் வேர் கொள்கிறது.

இந்த மெய்மையின் அடிப்படையை வசதியாக மறந்துவிட்டு உடைகளை மத அடிப்படையில் அடையாளப்படுத்தும் அரசியல் மிகவும் ஆபத்தானதாகும். அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரானதாகும். அதைத்தான் வக்கிரமானப் பிளவு அரசியலில் ஈடுபடும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் சங்கபரிவாரம் தொடங்கி ஆளும் பாஜகவினர் வரை செய்து கொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டு சனவரியில் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராகத் தலைநகர் தில்லியில் போராடிக் கொண்டிருந்த முஸ்லீம்கள் குறித்துப் பேசியப் பிரதமர் போராட்டத்திலும்,வன்முறையிலும் ஈடுபடுபவர்கள் யார் என்பதை அவர்களது உடைகளை வைத்து அடையாளம் காணலாம் என்று மேம் போக்காக, பொறுப்பற்ற விதத்தில் பேசினார். அவர் வெளிப்படையாக இப்படிக் குறிப்பிட்டது முஸ்லீம்களைத்தான் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஒரு குறிப்பிட்ட ஆடைக்கு உரியவர்கள் ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு உரியவர்கள் என்று பொருள்படவே அன்றைக்குப் பிரதமர் சுட்டிக் காட்டிப் பேசியிருந்தார். ஒன்று அந்த மதத்தினர் வன்முறையாளர்கள் அல்லது அந்த வன்முறையாளர்கள் அவ்வித ஆடை

அணியக்கூடியவர்கள் என்றே பிரதமரின் அந்தக் கீழ்மையான வாதம் இருந்தது. இருக்கிறது. இது மோடி என்ற தனிப்பட்ட மனிதருடைய கருத்தோ அல்லது ஒரு நாட்டின் பிரதமர் என்பவரின் கருத்தோ மட்டுமல்ல அவர் சார்ந்த கட்சி, அதன் பின்னிருக்கும் நிழல் அமைப்புகள் என அந்த குறுங்குழுப் பண்பாட்டையே அவர் பிரதிபலிப்பவராக இருக்கிறார்.

இன்றைக்கு கர்நாடகாவில் நடப்பதும் பிரதமர் மோடி அவர்களின் பயங்கரவாதக் கருத்துத் தொடர்ச்சியின் செயல்வடிவமேயாகும். அடையாள அரசியலின் பாசிச வடிவங்களில் ஒன்றே உடை, பண்பாடு, வழிபாடு, தனிமனித உரிமை என்பவற்றை மறுப்பதாகும். ஹஜாப் என்பதை முதலில் ஒரு மதத்திற்குரியதாக அடையாளப்படுத்துவது. அடுத்து அப்படி அடையாளப்படுத்தப்படுபவர்கள் வன்முறையாளர்கள், சமரசமற்றவர்கள், பயங்கரவாதிகள் என்று பொதுமைப்படுத்திப் பொது சமூகத்திலிருந்து பிரித்துவிடுவது விலக்கிவிடுவது என்பதாகவே அண்மைகாலப் போக்குகள் இருக்கின்றன.

முஸ்கான் போன்றவர்களை, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு அதன் வழி நடப்பவர்களை சமரசமற்றவர்களாக, சகிப்புத்தன்மையற்றவர்களாக, பொது சமூகத்துடன் கலக்க விரும்பாதவர்களாக சனநாயகத் தன்மைகளை ஏற்க மறுப்பவர்களாகப் பயங்கரவாதிகளாக, வன்முறையாளர்களாக பொது வெளியில் சித்திரிக்க முயலும் காட்சிகளின் ஒரு பகுதியே அந்தச் சிறுமியை சீண்டலுக்குள் இழுக்க முயன்றதாகும்.

அந்த கும்பல் சீருடை அணிய வேண்டும், ஒழுங்காக பள்ளிக்கு வரவேண்டும் என்ற கரிசனையில் தமது எதிர்வினையை ஆற்றியிருந்தால். வலியுறுத்தியிருந்தால் அது வேறு. நீ இசுலாமிய அடையாளத்துடன் வந்தால் நாங்கள் உன்னை பள்ளிக்குள் நுழைய விட மாட்டோம் என்பதாகவே அவர்களது கூச்சலும், ஊளையுமிருந்தது. இது மிகத் தவறான புரிதல் மட்டுமல்ல. மிக தெரிந்து செய்த எதிர்வினை என்றே கருத வேண்டியிருக்கிறது.

முதலில் ஒரு பெண் பள்ளிக்கு கல்வி பயில வரும் சூழலே அரியதாக இந்த இருத்தியோராம் நூற்றாண்டிலுமிருக்க அதிலும் சிறுபான்மை மற்றும் விளிம்பு நிலையில் உள்ளோர் ஒடுக்கப்பட்டோர், பெண்கள் கல்வி கற்கும் சூழல் கடும் சோதனையில் இருக்கும் அதே நேரத்தில் பரவலான வாசிப்பும், தவிர்க்க முடியாத சமூக மாற்றங்களும் அவர்களைப் பள்ளி நோக்கி இழுத்து வருவதை தவிர்க்க இயலாது. இந்தச் சூழலில் பெண்கள், ஒடுக்கப்பட்டோர், சிறுபான்மையினர் தலித்துகள் கல்வி பெறுவது என்பதை மத சாதியவாத சக்திகளால் செரித்துக் கொள்ள இயலாததாக இருக்கிறது.

பெண்கள், தலித்துகள், விளிம்பு நிலையினர் கல்வி கற்பதை அடிப்படையில் ஏற்காத ஆர்.எஸ்.எஸ், சங்கபரிவாரம் மற்றும் பாஜகவினர் பெண்கள் கல்வி கற்பதை பொது வெளிக்கு வருவதை, விழிப்புணர்வு பெறுவதை தடுப்பதற்கு புர்காவையும்,ஹிஜாபையும் ஒரு காரணமாக முன்வைக்கத் தொடங்கியுள்ளதன் பகுதி அரசியலாகவே இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வன்முறையாகத் தடுப்பது அதற்கு மத, பண்பாட்டு, சாதிய வண்ணங்களைப் பூசுவது அவர்களது வழக்கமான அணுகுமுறையாகும். இன்றைக்கு பள்ளிக்குள் அச்சுறுத்தும் அவர்கள் நாளை பெண்கள் பொதுவெளியில் நடமாடுவதை இப்படியான பிளவு காரணங்களைச் சொல்லி தடை செய்யும் காலத்தை வலிந்து உருவாக்கவே செய்வார்கள். இத்தனைக்கும் முஸ்லீம் மாணவர்கள் துருக்கித் தொப்பி அணிந்து வந்ததை, வருவதை அவர்கள் கண்டு கொள்ளவில்லை என்பதிலிருந்து இது பெண்களைக் குறி வைத்து மத அரசியல் செய்யும் இலக்கைத் தெளிவுப்படுத்துவதாக இருக்கிறது.

காவித் துண்டை அணிந்துக் கொண்டு ஒற்றை இஸ்லாமியச் சிறுமியை எதிர் கொண்ட காவிக்கும்பலில் அதே பள்ளியின் பிற சிறுமிகளும் இருந்தார்கள். இன்றைக்கு ஒரு இசுலாமியப் பெண்ணுக்கு நடந்தது நாளை இந்து, கிருத்துவப் பெண்களுக்கும் எதிரான வடிவெடுக்கும் என்பதை அரசியல் புரியாத அந்த சிறுமிகளும் உணரத்தான் வேண்டும். ஏனெனில் இது இசுலாமியப் பெண்களுக்கு எதிரான கும்பல் அச்சுறுத்தல் அல்ல. ஒட்டுமொத்த பெண்களுக்கும் எதிரானது என்பதை பாஜக மற்றும் அதன் நிழல் அமைப்பைப் புரிந்தவர்களுக்கு தனியாக விளக்க வேண்டியதில்லை.

புர்காவோ, ஹிஜாப் போன்ற உடம்பை முழுமையாக மறைக்கும் உடைகளோ அவற்றை ஆப்கனின் தலிபான்கள் போல வலுவில் அணியக் கட்டாயப்படுத்துவதோ அல்லது இங்குள்ள ஏ.பி. வி.பி. இனரோ யாராக இருந்தாலும் பெண்களது ஆடை குறித்து அவர்களது விருப்பத்திற்கும், விடுதலைக்கும் எதிராகச் செயற்படுவதை ஏற்க முடியாது. தடுப்பதை எப்படி ஏற்க முடியாதோ அப்படியே அவர்கள் அவற்றை அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதையும் ஏற்க முடியாது ஏனெனில் இரண்டுமே வன்முறையின் இரு துருவ அரசியல்.

இந்த பெண் விடுதலைக்கும், அவர்களது சுதந்திரத்திற்கும் எதிரான செயல்கள் ஆகும். "எந்த உடையை பெண்கள் அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் உரிமை யாருக்கும் கிடையாது. அவர்களது அலமாரியில் உங்களுக்கு என்ன வேலை?!" என்ற பெரியாரின் கேள்வி முக்கியமானதாகும். ஒரு பெண்ணின் தனி மனுசியின் உரிமையில் மதங்களோ, நிறுவனங்களோ, சாதியோ அரசியலோ குறுக்கிடுவது மனித அடிப்படை உரிமைக்கு எதிரானதாகும். அதைத்தான் தற்போது கல்வி, சீருடை என்கிற பெயரில் பாஜகவினர் செய்து கொண்டுள்ளனர்.

கர்நாடகாவில் தொடங்கியுள்ள பெண் கல்விக்கு எதிரான இந்த மதவாதப் போக்கு பாஜக மற்றும் இந்து அடிப்படைவாதம் செறிவாக உள்ள கர்நாடகாவின் பிற கடற்கடையோர நகரங்களிலும் பரவிக் கொண்டுள்ளது. கடந்த சனவரி கடைசி வாரங்களில் மங்களூரு, குந்தாப்பூர், ஷிமோகா,

பத்ராவதி, சிக்மகளூரு போன்ற இடங்களில் ஹிஜாப் அணிந்து வந்த பள்ளி கல்லூரி மாணவிகள் வளாகங்களுக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டனர். இதனையடுத்தே உடுப்பி குந்தாபூரில் உள்ள பந்தர்கர் பி.யு. கல்லூரியில் அங்கு பயின்று வரும் மாணவிகள் ஹிஜாப் அணிந்து வருவதற்கு அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து மாணவிகள் தொடர் போராட்டத்தில் இறங்கினர். ஹிஜாப் அணிவது அரசியல் சட்டம் எங்களுக்கு வழங்கிய அடிப்படை உரிமை என்று வாதிட்ட அந்த சிறுமிகள் பள்ளிவளாகத்திலேயே போராட்டத்தில் அமர்ந்தனர்.

செய்முறைத் தேர்வுகள் பிப்ரவரி 17 ஆம் திகதி தொடங்குவதால் உடனடியாக தீர்வுகான மாணவிகள் வலியுறுத்தியதுடன், உயர்நீதி மன்றத்திலும் வழக்கு தொடுத்துக் கொண்டுள்ளனர். இதைச் சகித்துக் கொள்ள விரும்பாத இந்துத்துவ அமைப்புகள் ஷிமோகா கல்லூரி வளாகத்திற்குள் புகுந்துத் தேசியக் கொடியை இறங்கிவிட்டுக் காவிக் கொடியை ஏற்றிக் கொண்டுள்ளனர்.

பல இடங்களில் சிறுபான்மை மத பள்ளி, கல்லூரிகளுக்கு எதிரே வன்முறை மற்றும் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர். முஸ்கானின் பள்ளியில் திரண்ட மதவாதக் கும்பல் கல்வீச்சிலும் ஈடுபட்டுள்ளது. எனினும் அப்பள்ளியின் பிற இந்து மாணவர்கள் முஸ்கான் உள்ளிட்ட பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாகக் கைகோர்த்து நின்று அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்ததுடன், அவர்கள் இந்த பாசிச அரசியலுக்கு எதிரானவர்கள் என்பதையும் சொல்லாமல் சொல்லிக் கொண்டுள்ளனர். மேலும் அம்பேத்கர் அமைப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஏ.பி.வி.பி.இனரை வளாகத்திலிருந்து வெளியேற்றும் முயற்சியிலும், அவர்களுக்கு எதிரான பதில் ஆர்பாட்டத்திலும் ஈடுபட்டது குறிப்பிடத் தக்கதாகும் நமது நாட்டில் இன்னும் அடிப்படைவாதத்திற்கெதிரானக் குரல்கள் முற்றிலும் மவுனித்துவிடவில்லை என்பதையே இவை காட்டுகின்றன.

ஹிஜாப் அணிவது மதசார்பின்மைக்கு ஊறுவிளைவிக்கும் என்று ஆளும் பாஜக அரசு குற்றம்சாட்டுகிறது. மேலும் பிப்ரவரி 5 அன்று மாநில அரசு பிறப்பித்துள்ள ஒரு ஆணையில், கர்நாடகாவின் அனைத்து கல்வி நிறுவனங்களும் கல்லூரி வளர்ச்சிக்குழு வரையறுத்துள்ளபடி உடைவிதி முறைகளை பின்பற்ற வேண்டும் என்றும், அப்படி ஒரு விதிமுறை இல்லையென்றால் சமத்துவம், ஒருமைப்பாடு, , சட்டம் ஒழுங்கைப் பாதிக்காத வகையிலான உடைகளை மாணவர்கள் அணிந்து வர வேண்டும் என்கிறது.

ஹிஜாப் அணிவது தேசத்திற்கு எந்த வகையிலான அச்சுறுத்தல் அல்லதுக் கல்வி பயில்வதில் என்னவிதமானத் தடைகளை அது ஏற்படுத்துகிறது என்பதை உடை அரசியல் செய்யும் பாஜக அரசும், அதன் நிழல் அமைப்புகளும் பொது வெளியில் விளக்கத்தான் வேண்டும்.

உத்திரப்பிரதேசத் தேர்தலில் தோல்வியைத் தழுவக்கூடும் என்ற பயத்தில் இந்துக்களின் ஒற்றுமையை வழமைபோல சிறுபான்மை இசுலாமியர் மீது தாக்குதல் தொடுத்து உறுதிபடுத்திக் கொள்ள பாஜக விரும்புகிறது அதனை ஒட்டிய நிகழ்ச்சி நிரல்களாகவே இம்மாதிரியானப் பிளவு அரசியலை முன்னிலைப்படுத்தும் ஆபாசமான நடவடிக்கைகளை அது முயற்சிக்கிறது. கர்நாடகாவில் மட்டுமல்ல தமிழகத்திலும் அப்படியான முயற்சியில் ஈடுபட்டு மகா கேவலமாகக் கையைச் சுட்டுக் கொண்டதுதான் மிச்சம்.



அரியலூரைச் சேர்ந்த லாவண்யா என்ற மாணவியைத் தஞ்சையை சேர்ந்த ஒரு சிறுபான்மை பள்ளியில் மதம் மாற்ற கட்டாயப்படுத்துவதாகச் சொல்லி அம்மாணவி அதனால் தற்கொலை செய்து கொண்டதாகப் பரவியச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு இங்குள்ள இந்துத்துவ அமைப்புகள் செய்ய முயன்ற மதஅரசியல் எடுபடவில்லை என்பதையும் கர்நாடக ஹிஜாப் அரசியலுடன் சேர்த்து பார்க்கத்தான் வேண்டியிருக்கிறது.

மத பிளவு அரசியலை எதிர்க்கும் அரசிற்கும், அதை ஆதரிக்கும் அரசிற்குமான இடை வெளிகளிலேயே குருதிக் கொட்டும் அரசியலிலேயே பாஜக போன்ற கட்சிகள் ஊன்றி வளர்கின்றன. நேற்று தமிழ்நாடு இன்றைக்குக் கர்நாடகம். ஆனால் தமிழகம் அந்த அரசியலுக்கு சற்றும் இடம் கொடுக்கவில்லை என்பதைத்தான் கர்நாடகத்தில்

நடப்பது போன்ற விரும்பத்தகாத நிகழ்வுகள் இங்கு இடம் பெறவில்லை என்பதில் சற்றே ஆறுதல் கொள்ளலாம்.

ஆளும் பாஜக அரசு, ஒன்றிய பாஜக அரசு இவற்றின் ஆதரவுடனே மதஅடிப்படைவாத உதிரிக் குழுக்கள் ஒட்டுண்ணிக்குழுக்கள் இப்படி சிறுபான்மையினரின் குருதியை உறிஞ்சுக்குடிக்கின்றன. ஏற்கனவே ஏ.பி.வி.பி இனரின் இந்த ஜெய்சிறிராம் கூச்சலுக்கிடையேதான் கவுரி லங்கேஸ் போன்ற சமூக சேவகர்கள், முற்போக்காளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அப்படியானப் படுகொலைகளின் வெவ்வேறு வடிவங்களாகவே ஹாசன் கல்லூரி கும்பல் வன்முறையையும், தேசியக் கொடி இறக்கப்பட்டு காவி கொடி ஏற்றப்பட்டச் செயல்களையும் பொருத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஹிஜாப் அணிவது இசுலாமிய மதத்தின் ஒரு பகுதியாகும், அது இசுலாமியர் நம்பிக்கையின் பகுதியாகும், சீக்கியர் அணிந்திருக்கும் தலைப்பாகை எப்படி பொது ஒழுங்கை பாதிப்பதாகச் சொல்ல முடியாதோ அப்படியே ஹிஜாபிற்கும் பொருந்தும்.

சில நாடுகளில் எதிர் மறை மதசார்பின்மையைப் பின்பற்றுகிறார்கள். இது மத அடையாளத்தை பொதுவில் காட்ட அனுமதிக்காது. இந்தியாவில் கடைபிடிக்கப்படும் மதசார்பின்மை என்பது நேர்மறையானது நமது மதசார்பின்மை பொதுவில் அனுமதிக்கிறது மத சிறுபான்மையினருக்கு எதிரான இப்படியான செயல்கள் குறித்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தேவதத்காமத் அவர்களின் எடுத்துரைப்புக் குறிப்பிடத்தக்கதாகும் எனினும் இது குறித்த நீதிமன்ற தீர்ப்பை அம்மாநில உயர் நீதிமன்றம் தயக்கத்துடன் ஒத்தி வைத்துக் கொண்டுள்ளது. கார்நாடக மாநில அரசு பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அளித்து இந்த சிக்கலைக் கடக்க முயற்சிக்கிறது.

பள்ளி வளாகங்களில் ஹிஜாப் அணிவதற்கானத் தடையை நீக்க வேண்டும் என்று போராடிக் கொண்டுள்ள முஸ்லீம் சிறுமிகளை அச்சுறுத்தும் வேலையில் தற்போது மத அரசியல் கும்பல் இறங்கிக் கொண்டுள்ளது. அந்த சிறுமிகளின் முகவரி, அவர்களது பதிவு எண்கள், தொலைபேசி எண்கள் போன்றவற்றை அந்தக் கும்பல் சேகரிப்பதுடன், அவற்றை சமூக ஊடகங்களில் பகிர்ந்து ஊடகக் ‘குழு’ கும்பல்களைத் திரட்டுகின்றன.

ஆலியா அசாதி என்ற சிறுமிக்குத் தொடர்ந்து வசைக் குரல்கள் தொலைபேசி வழி வந்து அருவருக்க வைக்கின்றன. ஹஸ்ரா ஷிபா என்ற மாணவியின் படிப்புச் சான்றிதழ்கள் பள்ளியிலிருந்து பெறப்பட்டு அவரும் அச்சுறுத்தலுக்கு ஆளாகிக் கொண்டுள்ளார்.

பாஜகவின் சட்டப் பேரவை உறுப்பினரும், பள்ளி வளர்ச்சிக்குழு உறுப்பினருமான ரகுபதி பட் தனது அதிகாரத்தைப் பயன்படுத்திக் கடந்த திசம்பர் 2021லிருந்து இம்மாதிரியானச் சான்றிதழ் தகவல்களைத் திரட்டி முஸ்லீம் மாணவிகளை அச்சுறுத்தும் செயல்களுக்குப் பயன்படுத்தி வருவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஷிபா, “எங்கள் குடும்பம் பாதுகாப்பில்லாத நிலையை உணர்கிறோம்!” என்கிறார். எனினும் தமிழக உயர் நீதி மன்றமும், தலைநகர் உச்ச நீதிமன்றமும் தெரிவித்துள்ள கருத்துக்கள் நீதியின் மீதும், இந்திய அரசியல் சட்டவாக்கத்தின் மீதும் நம்பிக்கைக் கொள்ளத் தூண்டும் அதே நேரம் இவ்வாறன விடயங்களில் விரைந்து முடிவெடுக்கத் தயங்குவது எளிய மனிதர்களுக்கு நீதி குறித்தும் நீதி மன்றத்தின் மீதும் நம்பிக்கையின்மையை ஏற்படுத்துவதாக அமைந்துவிடக்கூடும்.

சென்னை உயர்நீதி மன்றம், ‘இந்தியா ஒரு மத சார்பற்ற நாடா? அல்லது மத வழியில் பிளவுப்பட்ட நாடா?’ என்று கேள்வி எழுப்பிக் கொண்டுள்ளது. நாட்டில் ஹிஜாப் அணிவதற்காகவும், கோவில்களில் வேட்டி கட்டுவதற்காகவும் போராடுவது அதிர்ச்சியளிக்கிறது என்று கூறிக் கொண்டுள்ளது. இந்துக்கள் அல்லாதோர் இந்து கோவில்களுக்கு வருவது குறித்த வழக்கொன்றிற்கு பதிலளித்த நீதிபதிகள் இவ்வாறு கருத்துத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

உச்சநீதிமன்றமோ கர்நாடகாவில் என்ன நடக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டுதானிருக்கிறோம். தேவைப்படும்போது தலையிட்டு நீதியை நிலைநாட்டுவோம் என்று எச்சரித்துக் கொண்டுள்ளது.

எல்லா மதங்களும், அதன் கொள்கைகளும் பெண்களை ஒடுக்குவதையும். மதத்தின் பெயரில் கட்டுப்பாடுளைத் திணிப்பதையும் இலக்காகக் கொண்டு இயங்குகின்றன. ஆணாதிக்கமும், பெண் ஒடுக்குமுறையும் மதத்தின் பெயரிலானவையாக இருக்கின்றன. இதில் எந்த மதமும் விலக்கல்ல. ஹிஜாப் சிக்கல் என்பது பெண் உரிமைத் தொடர்பானதல்லதாம். எனினும் பெண்கள் அவர்களது தேர்வின், தெரிவின் உரிமை என்ற அளவில் அவர்கள் கல்வி கற்க வேண்டியதன் அவசியம் கருதி அடிப்படை உரிமை என்ற அடிப்படையில் முற்போக்கு சக்திகள் ஆதரிக்க வேண்டும்.

மேலும் பெண்ணுரிமை என்பது வரையறுக்கப்பட்ட விதிகளைக் கொண்டிருப்பதல்ல. விடுதலை இறையில் கூட பெண் விடுதலையை மதசட்டகங்களின் வழி பேச முற்படுகின்றன. பல ஆயிரம் கோடி ரூபாய்களில் இராமானுசர் சிலையைத் திறந்து வைத்த மோடிக்கும் பாஜக பரிவாரங்களுக்கும் இராமானுசரின் விடுதலை இறையிலைக் கற்றுத்தரத்தான் வேண்டும். புர்காவோ, ஹிஜாபோ உடை உரிமை என்கிற அளவில் அதற்கு எதிரானப் போக்குகளை கண்டிக்க வேண்டியிருக்கிறது. வேண்டும்.

என்ன சாப்பிட வேண்டும்?, எங்கு வசிக்க வேண்டும், என்ன எழுத வேண்டும் என்ற மத அரசியலின் பகுதி அரசியலாகவே என்ன உடுத்த வேண்டும் என்ற அரசியல் தற்போது மேலெழுந்து கொண்டுள்ளது. இது பிறகு சொந்த மதத்தையும் பதம் பார்க்கும் குறிப்பாக பெண்களை மீண்டும் வீட்டுக்குள் மத்தின் பெயரில் ஒடுக்குவதில் சென்று முடியும்.

கவுரிலங்கேஸ் போன்றவர்களின் படுகொலையில் என்ன எழுத வேண்டும் என்பதை தீர்மானிப்பவர்களின் அரசியல் இருந்தது. அது போல தில்லி ஜவர்கலால் நேரு பல்கலை மாணவர் தற்கொலையில், நீட் தேர்வை எதிர் கொள்ள இயலாத அனிதா போன்றவர்களின் தற்கொலைகளில் யார் கல்வி கற்க வேண்டும் என்ற அரசியல் இருந்தது.

ஆண்டுக்கு ஒரு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாகச் சொன்ன மோடி, இந்திய இளைஞர்களைப் பிறகு பகோடா விற்க போகச் சொன்னார். உத்திரப்பிரதேச தேர்தல் பரப்புரையின் போது பாஜகவே இசுலாமியப் பெண்களுக்குப் பாதுகாப்பளிக்கும் கட்சி, ஆட்சி என்கிறார். அதாவது உங்கள் பாதுகாப்பை எங்களால்தான் உறுதிப்படுத்த முடியும். நாங்கள்தாம் உங்கள் பாதுகாப்பை உறுதிபடுத்துபவர்களாக இருக்கிறோம் என்ற தொனி அதில் இருப்பதை மறுத்துவிட முடியாது. மேலும் மோடியின் பாஜகவே லவ்ஜிகாத் செய்வோருக்கு பத்தாண்டுகள் கடும் சிறை தண்டனை என்று அறிவித்துக் கொண்டுள்ளது. இது எப்படி முஸ்லீம்களுக்கு பாதுகாப்பான சட்டம் என்பதை மோடிதான் விளக்க வேண்டும்.

, “அச்சத்திலிருந்து விடுபடும் நம்பிக்கையின் பெயரிலேயே அல்லாகு அக்பர் என்று முழங்கினேன்!” என்று முஸ்கான் சொல்வது ஆற்றில் தள்ளி விடப்பட்டவன் மரத்துண்டொன்றைப் பற்றிக் கொள்வது போன்றதே. ஒடுக்கப்பட்டவர்களிலும் ஒடுக்கப்பட்டவர் பக்கம் நிற்பதே மக்கள் கவிஞர் இன்குலாபின் அறப்பார்வை. காந்தியாரும், பெரியாரும் பல நேரங்களில் ஒடுக்கப்படுபவர்கள் சார்பில் வெகுண்டெழுந்து அறச் சீற்றம் கொண்டதை அறிவோம்.

இராமானுசரின் சிலையை பலகோடிகளுக்குத் திறக்கத் தெரிந்த பிரதமருக்கு அவரது மத குறியீடை வெளிப்படையாக அணிந்து கொள்வதில் இருக்கும் வெறி அவரது விடுதலை இறையியல் குறித்தப் பார்வையிலும் இருக்க வேண்டும். இருக்கவில்லை. எல்லோருக்கும் பொதுவான முதல்வர் உத்திரப்பிரதேசத்தில் காவி கட்டிக்கொண்டு வலம் வருகிறார். காவி உடை மத உடை இல்லை என்றால் மூவர்ணக் கொடியை இறக்கிவிட்டு ஏன் மத அடையாளத்துடன் கூடிய காவிக் கொடியைப் பள்ளி வளாகத்தில் ஏற்ற வேண்டும்?

“ஹிஜாப் உடையா அல்லது கல்லூரி படிப்பா என்று இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழலுக்கு இஸ்லாமியப் பெண்குழந்தைகளைத் துரத்துவது நியாயமில்லை!” என்று பாகிஸ்தானில் மலாலா தனது கவலையைப் பதிவு செய்கிறார். பாகிஸ்தானில் தடையை மீறி கல்வி கற்ற குற்றத்திற்காக மத அடிப்படைவாதிகளால் சுடப்பட்டவர் அவர். அங்கு அதிகாரப்பூர்வ மத அரசு செயல்படுகிறது. மத அடிப்படைவாதம், மத அரசியல் என்பது எல்லை கடந்தது ஒடுக்குதலில் வேறுபாடு அற்றது என்பதை அவரைப் போன்றவர் நன்கு அறிந்துள்ளனர்.

ஹிஜாப் தலையங்கியானது 140 நாடுகளில் பெண்களால் அணியப்படுகிறது. மேலும் நவம்பர் 1 ஆம் திகதி உலக ஹிஜாப் நாளாக ஏற்கப்பட்டுள்ளது என்பதை நமது கலாசாரக் காவலர்கள் அறியத்தான் வேண்டும். மேலும் ஹிஜாப் போன்ற முக்காட்டை ராஜஸ்தான், உத்திரபிரதேசம் மற்றும் குசராத் பெண்கள் அணிவதை இந்தக் கலாசார காவலர்கள் பொது வெளிக்கு அச்சுறுத்தலாக பார்க்கத்தவறிய அரசியலையும் இங்கே விளக்க வேண்டும்.

இந்து வருணாசிரமக் கொள்கை ஆடை குறித்து யார் என்ன அணிய வேண்டும் பிராமணர்கள், சத்திரியர்கள், சூத்திரர்களுக்கான உடை என்ன என்பதைத் தெளிவாக வரையறுத்து வைத்துக் கொண்டுள்ளது. இன்றைக்குப் பார்ப்பனச் சூழ்ச்சிக்குப் பலியாகிக் காவித் துண்டு அணிந்து கொண்டு கூச்சலிடும் சூத்திரர்கள் குறிப்பாகச் சூத்திரப் பெண்கள் ஒரு காலத்தில் மேலாடை அணியக்கூடாது என்று பார்ப்பனர்கள் விதித்த தடை குறித்தும், தமிழகத்தின் கன்னியாகுமரியில் சூத்திரப் பெண்களின் தோல் சீலைப் போராட்டம் பற்றியும் அறிதல் நன்று.

இன்றைக்கு முஸ்லீம் பெண்கள் ஹிஜாப் அணியக்கூடாது என்றவர்கள் அன்றைக்கு சூத்திரப் பெண்கள் மேலாடை அணிவதைத் தடுக்கும் விதமாக, மேலாடை அணியும் உரிமை கோரிப் போராட்டம் நடத்தியப் பெண்களை நையப்புடைத்தனர். கத்தியால் குத்திப் படுகொலை செய்தனர். அதன் மதஅரசியல், மத ஒடுக்குமுறையின் தொடர்ச்சியாகவே இன்றைக்கு ஹிஜாப் தடையைப் பார்க்க வேண்டும்.

இங்கு அதிகாரப்பூர்வ மத அரசு செயற்படுவதாக இருக்குமானல் விவாதிப்பதற்கு எதுவுமிருக்கப்போவதில்லை. சமத்துவம் குறித்து வகுப்பெடுக்கும் இவர்கள் சமத்துவத்தைப் போதிக்கும் தேசியக்கொடியை இறக்கிவிட்டு ஒரு மதத்திற்கு மட்டுமே உரிய காவிக் கொடியை ஏற்றுவது சமத்துவத்திற்கு எதிரானதில்லையா? பொது சமூகத்திற்கு அச்சுறுத்தல் இல்லையா?

இந்து தேசத்தைக் கட்டமைப்பதற்குச் சிறுபான்மை இசுலாமியர் என்ற எதிரி அல்லது அவர்களது குருதித் தொடர்ந்துத் தேவைப்பட்டுக் கொண்டே இருக்கிறது. எனவேதான் ஒவ்வொரு சிறு அசைவுகளிலும் அவர்கள் பிளவு அரசியலைக் கண்டுபிடித்துக் கொண்டுள்ளனர். குருதியில் பிளக்க நினைக்கும் தேசத்தையே இவர்கள் ராமராஜியம் என்கிறார்கள். நேற்று மாட்டுக்கறி இன்று ஹிஜாப்.. என்று தொடர்கிறது ராமராஜியத்தின் முன்னோட்டம்.

ஹாசன் கல்லூரியில் முஸ்கானுக்கு எதிராகக் காவித் துண்டு அணிந்து கொண்டு மாணவிகள் சிலரும் அவளைச் சூழ்ந்து கொண்டு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். முஸ்கான்; பெண் என்ற வகையில் அந்த காவித் துண்டு மாணவிகளுக்கும் சேர்த்துதான் போராடுகிறார் என்பதைப் புரிந்து கொள்வதே இம்மாதிரியான மத அரசியலின் அருவருப்பான ஆபாசத்திலிந்து நிரந்தரமாக விடுதலை பெற ஒரே வழி.

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

கட்டுரை | பிரபால் சரண் அகர்வால், ஹர்ஷவர்தன்

# சோவியத் ஒன்றியத்துக்கு வருமாறு பகத்சிங்குக்கு அழைப்புவிடுத்த ஸ்டாலின்

**தமிழில்: நிழல்வண்ணன்**

பகத்சிங், சுகதேவ், ராஜகுருவின் 90 ஆவது தியாகத் திருநாளில், கண்டறியப்பட்ட விடுதலை இயக்கத்தின் அறியப்படாத ஓர் அத்தியாயம், இந்தியப் புரட்சி இயக்கத்தின் வரலாற்றுப் பக்கங்களில் பெரிதும் அறியப்படாத ஒரு நிகழ்வு – சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டலின் பகத்சிங்குக்கு விடுத்த அழைப்பாகும். ஆனால், இந்த அழைப்பு பகத்சிங்கைச் சென்றடையவில்லை. எனவே அந்த அழைப்பு பெறப்பட்டு, ஏற்கப்பட்டிருக்குமானால் என்ன நிகழ்ந்திருக்கும் என்பதை வரலாற்றாசிரியர்களால் ஊகிக்கமட்டுமே முடியும்; அனைத்தும் திட்டமிட்டு நடந்திருக்குமானால், நமது விடுதலைப் போராட்டத்தின் போக்கையே மாற்றியிருக்கும் உள்ளாற்றல் கொண்டதாக அது இருந்திருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.


பகத்சிங்கையும் ஸ்டாலினையும் இணைத்த மனிதரின் பெயர் சவுகத் உஸ்மானி. அவர் 1920 இல் தாஷ்கண்டில் நிறுவப்பட்ட நாடுகடந்த இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவனத் தலைவர்களில் ஒருவர். உஸ்மானி, இந்திய தேசியவாதிகளுடன் தொடர்புகளை நிறுவிக்கொள்வதற்கு எம்.என். ராயால் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டவர். 1920 களில் கான்பூரிலிருந்து வெளியிடப்பட்டுவந்த பிரதாப் என்ற இந்தி நாளிதழின் புகழ்பெற்ற ஆசிரியர் கணேஷ் சங்கர் வித்யார்த்தி மூலம் புரட்சியாளர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டார்.

அப்போது, பகத்சிங் பிரதாப் இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அந்த நாளிதழில் பெஷாவரிலிருந்து மாஸ்கோவுக்கு: இந்திய முஹாஜிரீன் நாட்குறிப்பிலிருந்து சில பக்கங்கள் என்ற தலைப்பிட்ட உஸ்மானி எழுதிய அரசியல்—பயண நினைவலைகள் நூலுக்கு பகத்சிங் மதிப்புரை எழுதியுள்ளார். கம்யூனிஸ்டு இயக்கத்துடன் இணைந்திருந்தாலும் கூட, உஸ்மானி ஆயுதந்தாங்கிய புரட்சியாளர்களுடன் தீவிரத் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டிருந்ததோடு, கம்யூனிஸ்டு அகிலத்துக்கு அவர்களின் நடவடிக்கைகள் குறித்து அவ்வப்போது செய்தி அனுப்பிவந்தார்.

1928 இல், உஸ்மானி கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது பேராயத்துக்குப் புறப்படவிருந்த நேரத்தில், அவர் பகத்சிங்கையும் அவருடைய நெருங்கிய சகாவான பிஜாய் குமார் சின்ஹாவையும் தன்னுடன் சோவியத் ஒன்றியம் வருமாறு அழைத்தார். உஸ்மானி இந்த நிகழ்வு குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளார்:

“சர்தார் பகத்சிங்கை எப்போது முதன்முதலாக சந்தித்தேன் என்பது எனக்கு மிகச்சரியாக நினைவில் இல்லை. நான் அவரை லாகூரில் அல்லது கான்பூரில் சந்தித்தேன்... அந்தநேரத்தில், [இந்துஸ்தான் குடியரசு சங்கம்] இ.கு.ச. [இந்துஸ்தான் சோசலிசக் குடியரசு சங்கம்] இ.சோ.கு.ச. என்று மாற்றப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருந்தது. மேலும் புதிய அமைப்பு கம்யூனிஸ்டு அகிலத்துடன் ஒத்துழைத்து பணியாற்றும் என்று முடிவு செய்யப்பட்டது... அவர்கள் தனிநபர்கள் ஆயுதம் ஏந்துவதை கைவிடுவதற்குமுன்பு,சிலமுக்கியசெயல்திட்டங்களை ஒருங்கிணைக்க வேண்டியதிருக்கும் என்றும் அவை முன்பே அவர்கள் பட்டியலில் இருந்தவை என்றும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது... ‘வாருங்கள், நாம் மாஸ்கோ செல்வோம்’ என்று பிஜாயிடம் கூறினேன். பகத்சிங்கும் பிஜாய் சின்ஹாவும் மாஸ்கோவில் இருந்தால் சோவியத் ஒன்றியத்திடமிருந்து தீவிரமான ஆயுத உதவியைப் பெற்றிருக்க முடியும் என்று தனிப்பட்ட முறையில், நான் நம்பினேன்.”

பகத்சிங்குடன் பிஜாய் குமார் சின்ஹாவும் இ.சோ.கு.ச. வின் சர்வதேச உறவுகளுக்குப் பொறுப்பாக இருந்தார். சோவியத் ஒன்றியத்தில் புதிய மனிதர் என்ற அவரது நூலில் உஸ்மானி குறிப்பிட்டுள்ள அழைப்பை உறுதிப்படுத்துகிறார். ”இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதியாக சவுகத் உஸ்மானி கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது பேராயத்தில் கலந்துகொள்வதற்காக மாஸ்கோ புறப்படும் தருவாயில் இருந்தார், புரட்சிகர இயக்கத்தின் பிரதிநிதிகளாக அவருடன் சோவியத் ஒன்றியம் வருமாறு என்னிடமும் என்னுடைய சகாக்களிடமும் கேட்டுக்கொண்டார். அவருடைய அழைப்பை நான் பகத்சிங்கிடம் விவாதித்தேன், அது சரியான நேரமல்ல என்று நாங்கள் முடிவு செய்தோம். எங்கள் திட்டங்களை நடைமுறைப்படுத்திய பிறகு மாஸ்கோ செல்வோம் என்றும் முடிவு செய்தோம்.” என்று பிஜாய் எழுதுகிறார்.

**வேறு யாராவது ஒரு புரட்சியாளர் குண்டு வீச வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், சுகதேவின் வற்புறுத்தலின் பேரில் பகத்சிங் அந்தப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார், ஏனென்றால் அவரால்தான் கட்சியின் நிலைப்பாட்டை நீதிமன்றத்தின் முன்பும் ஊடகங்களின் முன்பும் சிறந்த முறையில் எடுத்துக்கூற முடியும் என்பதால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

இ.சோ.கு.ச. வின் பிரதிநிதிகளாக சோவியத் ஒன்றியம் வருகை தருமாறு உஸ்மானி பகத்சிங்கையும் சின்ஹாவையும் அழைத்தார் என்பது இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வல்லமைமிக்க தலைவர்களில் ஒருவரான முஸ்ஸாபர் அகமதுவாலும் உறுதிப்படுத்தப்படுகிறது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் நானும் என்ற அவரது தன்வரலாற்று நூலில் உஸ்மானி மற்றும் சின்ஹா சந்திப்புப் பற்றிக் அகமது குறிப்பிடுகிறார். சின்ஹா அந்தப் பயணத்தை மேற்கொள்வதற்காக உஸ்மானிக்கு ரூ..200/- கொடுத்தார் என்றும், அதேவேளையில் சோவியத் ஒன்றியத்திலிருந்து நிதி உதவி பெற்றுத் தருவதாக உஸ்மானி அவருக்கு உறுதியளித்தார் என்றும் அவர் கூறுகிறார்.

அடுத்து உஸ்மானி 1928 இல் சோவியத் ஒன்றியம் சென்றார், அங்கு கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது வரலாற்றுப் பேராயத்தின் தலைமையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்த மாநாடு 1928 ஜூலை 17அன்று தொடங்கி 1928 செப்டம்பர் 1 அன்று முடிவடைந்தது. அது காலனியப் பிரச்சனையை விவாதித்த போது இ.கு.ச. யின் நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்டது என்பது ஆர்வமூட்டும் விடயமாகும். அது இ.கு.ச. இந்திய தேசியக் காங்கிரஸ் போன்ற முதலாளித்துவக் கட்சிகளின் தோல்விக்குப் பதிலளிக்கும் விதமாக எழுந்துள்ளதை அங்கீகரித்தது. காங்கிரஸ் புரட்சிகர குடிமுதலாளிய கட்சியாகத் தொடங்கி, போராட்டம் தொடரத் தொடர, முதலாளித்துவ சீர்திருத்தவாதிகளின் கட்சியாக ஆகியிருந்தது.

கம்யூனிஸ்டு அகிலம் பின்வருமாறு அவதானித்தது, "இந்தியாவில் காந்தியம் ... போன்ற இயக்கங்கள் தொடக்கத்தில் புரட்சிகர குட்டி முதலாளிய சித்தாந்த இயக்கங்களாகவே இருந்தன, இருப்பினும், பெரு முதலாளிகளுக்கான அவற்றின் சேவையின் விளைவாக, அவை முதலாளித்துவ தேசியவாத சீர்திருத்தவாத இயக்கமாக மாறியிருந்தன. இதற்குப் பிறகு, இந்தியாவில் ... பல்வேறு குட்டி முதலாளிய குழுக்களிலிருந்து புரட்சிகரப் பிரிவு மீண்டும் துவக்கப்பட்டது (எடுத்துக்காட்டு: குடியரசுக் கட்சி ...) அக்கட்சி ஏறத்தாழ தேசியப் புரட்சிகரக் கண்ணோட்டத்தில் உறுதியாக இருந்தது."

துரதிர்ஷ்டவசமாக, உஸ்மானி மாஸ்கோவிலிருந்து திரும்பிய உடனே, 1929 மார்ச்சில் தொடங்கிய மீரட் சதி வழக்கில் கைதுசெய்யப்பட்டார். இதற்கிடையில் பகத்சிங்கும் அவரது தோழர்களும் 1928 டிசம்பரில் ஜான் சாண்டர்ஸை சுட்டுக் கொன்றுவிட்டு தலைமறைவில் இருந்தனர். மீரட் சதி வழக்குத் தொடங்கிய பிறகு, பகத்சிங்கும் பி.கே. தத்தும் தொழிலாளர் விரோத பொதுப் பாதுகாப்பு மற்றும் தொழில் தகராறு சட்ட முன்வரைவுகளை எதிர்த்து இ.சோ.கு.ச சார்பில் மத்திய சட்டமன்றத்தில் இரண்டு குண்டுகளை வெடித்துவிட்டு கைதாகினர்..

குறிப்பிடத்தக்க வகையில் மத்திய சட்டமன்றத்தில் குண்டுகள் வீசுவதற்கான முடிவெடுப்பதற்கு முன்பு, இ.சோ.கு.ச. தலைவர்கள் பகத்சிங்கை சோவியத் ஒன்றியத்துக்கு அனுப்ப வேண்டும் என்ற கருத்தை வைத்திருந்தனர், ஏனென்றால் அவர் ஏற்கெனவே லாகூர் சதி வழக்கில் தலைமறைவாளராக அறிவிக்கப்பட்டிருந்தார். வேறு யாராவது ஒரு புரட்சியாளர் குண்டு வீச வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், சுகதேவின் வற்புறுத்தலின் பேரில் பகத்சிங் அந்தப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார், ஏனென்றால் அவரால்தான் கட்சியின் நிலைப்பாட்டை நீதிமன்றத்தின் முன்பும்

ஊடகங்களின் முன்பும் சிறந்த முறையில் எடுத்துக்கூற முடியும் என்பதால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. சோவியத் ஒன்றியத்திலிருந்து உஸ்மானி அவர்களுக்காக ஒரு செய்தியைக் கொண்டுவருகிறார் என்பதை இ.சோ.கு.ச. உறுப்பினர்கள் அறிந்திருக்கவில்லை. அவர் கைது செய்யப்பட்டுவிட்டதால், அவரால் பகத்சிங்குக்கும் இ.சோ.கு.ச.க்கும் ஸ்டாலினின் செய்தியைத் தெரிவிக்க இயலாமல் போனது.

பின்னாளில், புது டெல்லியிலிருந்து வெளிவந்த நயி ஜமீன் என்ற இந்தி இதழுக்கு உஸ்மானி எழுதிய கட்டுரையில், தாம் இந்தியாவுக்குக் கிளம்புவதற்கு முன்னதாக, ஸ்டாலின் அவரிடம் பகத்சிங்கை சோவியத் ஒன்றியம் வருவதற்கு இணங்கச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார் என்று எழுதியுள்ளார். உஸ்மானியின் கூற்றுப்படி, ஸ்டாலினின் சொற்கள் இவ்வாறிருந்தன, "பகத்சிங்கிடம் மாஸ்கோ வருமாறு கேட்டுக்கொள்ளுங்கள்."

இப்போது கேள்வி எழுகிறது, ஸ்டாலினுக்கு பகத்சிங்கைப் பற்றி எப்படித் தெரியும்?

பகத்சிங்கின் உறவுப் பெண்ணும் பகத்சிங்கின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவருமான வீரேந்திர சிந்து கூற்றுப்படி, ஸ்டாலினும் கம்யூனிஸ்டு அகிலமும் பகத்சிங்கைப் பற்றி, பாபா சந்தோக் மற்றும் பாபா குருமுக் சிங் ஆகிய இரண்டு கத்தாரிய புரட்சியாளர்கள் மூலமாக அறிந்துகொண்டிருக்க வேண்டும், அவர்கள் பஞ்சாபில் கம்யூனிஸ்டு இயக்கத்துடன் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தனர் அவர்கள் பகத்சிங்கை அவர்களுடைய கிர்தி குழுவில் சேர்த்துக்கொள்ளவும் முயற்சி செய்திருந்தனர்.

இருப்பினும், பகத்சிங்கிடமும் இந்தியப் புரட்சிகர இயக்கத்துடனும் ஸ்டாலின் காட்டிய ஆர்வம் இந்தியா மற்றும் சீனா போன்ற காலனிகளில் தேசிய விடுதலை இயக்கங்களின் மூலஉத்தி மற்றும் செயலுத்தி குறித்து ஆறாவது பேராயத்தில் பின்பற்றப்பட்ட கொள்கை முடிவின் விளைவாகவும் இருந்திருக்க வேண்டும். கம்யூனிஸ்டு அகிலம் ஏற்கெனவே இந்துஸ்தான் குடியரசு சங்கம் பற்றி அறிந்திருந்தது, மேலும் அதை காங்கிரஸ் தலைமையிலான தேசிய சீர்திருத்தவாதிகளுக்கு மாறாக குட்டி முதலாளியத் தலைமையிலான தேசியப் புரட்சிகர அமைப்பு என்று கருதியது.

காலனிகளில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் செயலுத்தி மற்றும் மூல உத்தி குறித்து ஆறாவது பேராயம் மிகவும் குழுவாத நிலைப்பாட்டைப் பின்பற்றியது. இந்தப் பேராயம் காலனியமாக்கப்பட்ட நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் "தொடக்கத்திலிருந்தே தங்களை அரசியல் ரீதியாகவும் அமைப்புரீதியாகவும், அனைத்துக் குட்டி முதலாளிய குழுக்கள் மற்றும் கட்சிகளிலிருந்து மிகவும் தெளிவான முறையில் எல்லை வகுத்துக்கொள்ள வேண்டும்" என்று முன்மொழிந்தது.

இருப்பினும், குட்டி முதலாளிய வர்க்கத்தின் தலைமையிலான தேசியப் புரட்சிகர கட்சிகளைப் பொருத்தவரை, "(தேசியப் புரட்சிகர இயக்கங்களில்) உண்மையான புரட்சிகர இயக்கமாக இருந்தால், அது உண்மையாக ஆளும் அதிகாரத்துக்கு எதிராகப் போராடுமானால், விவசாயிகளையும் சுரண்டப்படும் பரந்துபட்ட மக்கள்திரளையும் புரட்சிகர உணர்வில் கற்பித்து, ஒருங்கிணைக்கும் கம்யூனிஸ்டுகளின் வழியில் அதன் பிரதிநிதிகள் தடைகளை ஏற்படுத்தாமல் இருப்பார்களானால்," அவர்களுடன் தற்காலிக ஒன்றிணைவு அல்லது ஒத்துழைப்பு சாத்தியம் என்று ஆறாவது பேராயம் கூறியது.

இந்துஸ்தான் குடியரசு சங்கம் இந்துஸ்தான் சோசலிசக் குடியரசு சங்கமாக மாறுவது குறித்தும் சோசலிசத்தின் குறிக்கோள்களுக்குப் பணியாற்றும் அவர்களின் முடிவு குறித்தும் உஸ்மானி அறிந்திருந்ததால், பகத்சிங்கைப் பற்றியும் இ.கு.ச. வை மாற்றியமைக்கும் அவரது திட்டங்களைப் பற்றியும் கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் குழுவுக்கு மதிப்பீட்டை அளித்திருப்பது மிகவும் சாத்தியம், அது ஸ்டாலினிடம் பகத்சிங் குறித்த ஆர்வத்தைத் தூண்டியிருக்கலாம்.

லாகூர் சதி வழக்கில் பகத்சிங்கும் சின்ஹாவும் கைதுசெய்யப்பட்ட பிறகு, சித்தாந்த மற்றும் இராணுவப் பயிற்சிக்காக கதார் கட்சி தலைவர் பிரிதிவி சிங் ஆசாத்தை சோவியத் ஒன்றியத்துக்கு அனுப்பலாம் என்று இ.சோ.கு.ச. முடிவு செய்தது, ஆனால் ஆசாத்தால் அங்கு உடனடியாகச் செல்ல முடியவில்லை. எனவே, அவருக்குப் பதிலாக சுரேந்திர பாண்டே மற்றும் யஷ்பால் (எதிர்காலத்தில் நாவலாசிரியராகப் புகழ்பெற்றவர்) ஆகியோரை இ.சோ.கு.ச தெரிவு செய்தது. இருப்பினும், 1931 பிப்ரவரியில் அதன் தலைமைப் படைத்தலைவர் சந்திரசேகர ஆசாத் இறந்து போனதால் கட்சியின் திட்டங்கள் செயலிழந்தன.

யஷ்பாலும் ஒரு சில மாதங்களில் கைதுசெய்யப்பட்டார், இறுதியாக பாண்டேயும் சிறையில் அடைக்கப்பட்டார். பாண்டே விடுதலையான பிறகு, கான்பூரில் இ.சோ.கு.ச. வைப் புதுப்பிக்க முயற்சி செய்தார், மேலும் கம்யூனிஸ்டுகளுடன் நெருக்கமான ஒத்துழைப்புடன் பணியாற்றினார். பகத்சிங்கும் அவரது தோழர்களும் 1930 ஜனவரி 21 அன்று லெனினின் நினைவு நாளில் தங்களின் மரியாதையையும் ஒருமைப்பாட்டையும் தெரிவித்து கம்யூனிஸ்டு அகிலத்துக்குத் தொலைவரிச் செய்தியை அனுப்பினார்கள்.

இந்துஸ்தான் சோசலிசக் குடியரசு சங்க உறுப்பினர்கள் சோவியத் ஒன்றியம் செல்வதற்கு முயற்சி செய்தபோதும், அந்தப் பயணம் கூடிவரவில்லை. இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் விலகிக்கொண்ட பிறகுதான் பிஜாய் குமார் சின்ஹா சோவியத் ஒன்றியத்துக்கு ஒரு பயணம் சென்றுவர முடிந்தது.

கட்டுரை ஆசிரியர்கள் பிரபால் சரண் அகர்வால் மற்றும் ஹர்ஷவர்தன் இருவரும் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர்கள். இவை அவர்களுடைய தனிப்பட்ட கருத்துக்களாகும்.

கட்டுரை

க. பழனித்துரை
gpalanithurai@gmail.com

# கிராமத்து மக்களின் பொறுப்பில் கிராமங்கள் இருக்க வேண்டும்


**கட்சிக்காரர்கள் செய்ய வேண்டிய பணியை கடைக்காரர்கள் செய்து விடுகின்றனர். அனைத்து அரசியல் பணிகளும் வணிகர்களால் நடத்தப்பட்டு வருவதால், கட்சிக்காரர்கள் பார்வையாளர்களாக மாற்றப்பட்டு விட்டனர். எல்லாக் கட்சிச் செயல்பாடுகளிலும் தங்கள் பங்களிப்பைச் செய்யும் நிலையிலிருந்து, கட்சியின் கூட்டங்களுக்கு தலைகாட்டினால் போதும், அதற்கும் ஊதியம் உண்டு என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டனர். இதன் ஒட்டு மொத்த விளைவு. பங்கேற்பு அரசியல் என்பது போய் பார்வையாளர் அரசியலுக்கு வந்து விட்டது நம் கட்சி அரசியல்.**

உலகின் போக்கை எத்தனையோ நிகழ்வுகள் மாற்றி அமைத்திருக்கின்றன. பல நிகழ்வுகள் மனித உயிர்களை கோடிக்கணக்கில் பலி வாங்கி இருக்கின்றன. மானுடம் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்துத்தான் இந்த நிலைக்கு வந்து நிற்கிறது. ஆனால் கடந்த 30 ஆண்டுகால நிகழ்வுகள் மனித குல வரலாற்றில் எவரும் எதிர்பார்க்காத மாற்றங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. அவை, மானுட சமுதாயத்தில் ஏற்படுத்தியிருக்கின்ற தாக்கங்கள் என்பது 300 ஆண்டுகளில் நடைபெற வேண்டியவை. ஆனால், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு அனுமானித்துத் திட்டமிடுவதே மிகப் பெரிய சவாலாக அமைந்துவிட்டது. அந்த அளவுக்கு மாற்றங்களின் வேகம் அதிகரித்துள்ளது.

நாம் இன்று பார்ப்பது மனித குல வரலாற்றில் ஒரு புதிய வரலாறு மற்றும் அத்தியாயம். இந்த மாறுதலுக்கு வித்திட்ட மூல காரணி என்பது செய்திப் பரிவர்த்தனையில் நடந்த தொழில்நுட்ப புரட்சி என்பதை எவரும் மறுக்க இயலாது. இந்தச் செய்திப் பரிமாற்றத்தின் வேகமும், செய்திப் பரிமாற்றத்திற்கான தொழில்நுட்பத்தில் நடந்த பெரும்கண்டுபிடிப்புக்களும் 24 மணி நேர வேலைக்கு மானுடத்தைத் தயார் செய்து, அதில் ஒரு புதிய பொருளாதாரத்தைக் கட்டமைத்து விட்டன. அதுதான் அறிவுப் பொருளாதாரம். இந்த அறிவுப் பொருளாதாரம் பிரதானப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை பொருளாதார வளர்ச்சி, சந்தைச் செயல்பாடு, பொருளாதார வளர்ச்சிக்கான போட்டி என்பன முன்னெடுக்கப்பட்டு வாழ்வியல் மேம்பாடு என்ற கருத்தாக்கம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

### நுகர்வும் சுரண்டலும்

புலன்களைத் தூண்டி நுகர்வில் எல்லாத் தரப்பு மக்களையும் சிக்க வைத்துவிட்டது இந்த புதிய பொருளாதாரக் கொள்கை. சந்தை என்பது பிரதானப்படுத்தப்பட்டு, பொருள்களை உற்பத்தி செய்வது, அதை சந்தைப்படுத்தி உலகம் முழுவதும் தங்கு தடையின்றி எடுத்துச் சென்று விற்பனை செய்து பொருள் ஈட்டுதல் என்பது முதன்மைப்படுத்தப்பட்டுவிட்டது. எங்கு எளிதாக இயற்கை வளங்களைச் சுரண்ட முடியுமோ, அங்கெல்லாம் மூலதனத்தையும் தொழில் நுட்பத்தையும் எடுத்துச் சென்று பொருள் உற்பத்தி செய்தல், அதேபோல் எங்கெல்லாம் தொழிலாளர்கள் குறைந்த கூலிக்குக் கிடைத்தார்களோ அங்கெல்லாம் மூலதனத்தையும் தொழில் நுட்பத்தையும் எடுத்துச் சென்று உற்பத்தி செய்து உற்பத்தி செய்த பொருள்களை பல நாடுகளுக்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்வதை கொள்கையாக்கிக் கொண்டுவிட்டன சந்தை நிறுவனங்கள். இயற்கையையும், தொழிலாளர்களையும் சுரண்டுவதற்கு, அந்தந்த நாட்டின் ஏழ்மையையும் கடன் சுமையையும் பயன்படுத்திக் கொண்டன பன்னாட்டு நிதி நிறுவனங்கள்.



### சந்தைக்கான அரசு

ஒரு காலத்தில் அரசு என்பது சமூகப் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று சமூகத்தைச் சுரண்ட சந்தைக்கு எல்லாவித உதவிகளையும் செய்கிறது பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு வருகிறோம் என்ற விவாதத்தை முன் வைத்து அரசே சந்தைக்காகச் செயல்படும் சூழலுக்கு வந்துவிட்டது. சந்தை மக்களுக்கு மயக்கம் விளைவிக்கும் நுகர்வுப் பொருள்களை அள்ளி வந்து கொட்டி பொருள் நுகர்வில் தோய வைத்துவிட்டது. அரசோ அதன் செயல்பாடுகளுக்கு சந்தையிடமிருந்து வரும் வருமானத்தை எதிர் நோக்கி இயங்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

### சந்தையின் பிடியில் அரசியல்

மக்களாட்சி நடைபெறும் நாடுகளில் அரசியல் கட்சிகளை சந்தை தன் மூலதனத்தாலே தன் வயப்படுத்தி வைத்துக் கொண்டுவிட்டது. சந்தையிடமிருந்து பண வரவு நின்று விட்டால் அரசியல் செய்ய பணத்துக்கு எங்கே போவது என்ற சூழலை உருவாக்கிவிட்டனர். அரசியலை சந்தை தன் மூலதனத்தாலே விலை உயர்ந்ததாக மாற்றியமைத்து விட்டது.

கட்சிக்காரர்கள் செய்ய வேண்டிய பணியை கடைக்காரர்கள் செய்து விடுகின்றனர். அனைத்து அரசியல் பணிகளும் வணிகர்களால் நடத்தப்பட்டு வருவதால், கட்சிக்காரர்கள் பார்வையாளர்களாக மாற்றப்பட்டு விட்டனர். எல்லாக் கட்சிச் செயல்பாடுகளிலும் தங்கள் பங்களிப்பைச் செய்யும் நிலையிலிருந்து, கட்சியின் கூட்டங்களுக்கு தலைகாட்டினால் போதும், அதற்கும் ஊதியம் உண்டு என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டனர். இதன் ஒட்டு மொத்த விளைவு. பங்கேற்பு அரசியல் என்பது போய் பார்வையாளர் அரசியலுக்கு வந்து விட்டது நம் கட்சி அரசியல். அரசியலுக்கு மிகவும் தேவையான கொள்கை கோட்பாட்டு விவாதங்கள் முற்றிலுமாக புறந்தள்ளப்பட்டு, ஆட்சி பிடிப்பது அரசியல், அதற்கு வாக்குகளை வணிகப்படுத்தி, சந்தைப் பணத்தில் வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடிக்கும் சூழலையையும் சந்தை உருவாக்கி வைத்துவிட்டது.

### மக்கள் தலைவர்கள், கம்பெனித் தலைவர்களானார்கள்

சந்தை, நிதியை மட்டும் அரசியல் கட்சிகளுக்குத் தரவில்லை, கட்சிகளையும் பன்னாட்டு கார்ப்பரேட் கம்பெனிகள் போல் நடத்திடப் பழக்கிவிட்டது. அதன் விளைவு கட்சித் தலைவர்கள் கம்பெனியின் தலைவர்கள் போல் செயல்பட ஆரம்பித்து மக்களுக்கும் கட்சிக்கும் உணர்வு பூர்வத் தொடர்பினைத் துண்டித்து விட்டனர். சந்தையை நம்பும் அளவுக்கு நம் கட்சிகள் மக்களை நம்புவதில்லை. இன்று கட்சிகளே கட்சிக்காரர்களை நம்புவது இல்லை. கட்சிச் செயல்பாடுகள் அனைத்தும் தேர்தலை நோக்கியதாகவே கட்டமைத்து விட்டு கொள்கை விவாதங்கள் போராட்டங்கள் அனைத்தும் புதை குழிக்குப் போய்விட்டன. கட்சி அரசியலும் கூட எப்படி கார்ப்பரேட் கம்பெனிகள் ஒரு சிறு கூட்டம் ஒட்டுமொத்த சந்தையை ஆக்கிரமித்துச் செயல்படுகிறதோ அதேபோல் ஒருசில பெரிய கட்சிகள் சிறிய கட்சிகளை வளர விடாமல் தங்கள் நடைமுறைகளை வகுத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்திச் செயல்படுகின்றன.

### சிதிலமடைந்த சமூக வாழ்வு

இந்தச் சூழல் சமூகத்தை பெருமளவு பாதிப்புக்கு உள்ளாக்கி வைத்திருக்கிறது. சமூகச் செயல்பாடுகள்

அனைத்தும் பொதுச் செயல்பாடுகள் என்ற நிலையிலிருந்து, தனிமனித மேம்பாட்டுச் செயல்பாடுகளாக மாற்றப்பட்டு குடும்பம் என்ற அமைப்பைக் கூட லாப நஷ்ட பார்வையில் பார்க்க வைத்து குடும்ப பந்தங்களை அறுத்துவிட்டது. பொருளும் நுகர்வும் பிரதானப்படுத்தப்பட்டு சமூகம், கூட்டு வாழ்க்கை, சமூக நல்லிணக்கம், சமூகச் சிந்தனை, மக்கள் மேல் கரிசனம், இயற்கையுடன் உறவு, என்பதெல்லாம் மக்கள் மனங்களிலிருந்து மறக்கடிக்கப்பட்டு பொருள் ஈட்டி நுகர்தலை பிரதானப்படுத்திக் கொண்டு விட்டனர். இதன் விளைவு, மிகப் பெரிய கலாச்சாரச் சீரழிவு, சுய மரியாதை இழப்பு, அறம் இழந்த வணிகச் செயல்பாடு, மக்கள்மேல் பார்வையற்ற கல்வி என அனைத்தும் வீழ்த்தப்பட்டு விட்டன சந்தையின் ஆதிக்கத்தால்.

### மேய்க்கப்படும் சமூகம்

ஒட்டுமொத்த சமூகமும் மேய்க்கப்படுபவர்களாக மாற்றப்பட்டு, அரசு மூலம் மக்களை மேய்க்கிறது சந்தை. மக்களும் செய்வது அறியாது சந்தைச் சூழலில் சிக்கித் தவிக்கின்றனர். அரசியல் கட்சிகளோ பார்வையற்று மக்களை தயார் செய்து மாற்றங்களைக் கொண்டுவர இயலாமல் சந்தைப் பணத்தில் தேர்தல் அரசியல் மட்டுமே நடத்திக் கொண்டுள்ளன. சந்தை அசுரனாக எழுந்து மானுட சமூகத்தை இயற்கையை துவம்சம் செய்து கொண்டுள்ளது. இதனை மாற்றும் சக்தி அரசியலில் இன்று இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் சமூகத்தை மாற்றும் ஆற்றல் கொண்ட வர்க்கத்தை சந்தை தன் வயப்படுத்திக் கொண்டுவிட்டது. பொதுமக்களை சந்தைப்படுத்திக் கொண்டு, சந்தைக்கான ஏஜெண்டுகளாக பொதுக் கருத்தாளர்களையும் அரசியல் கட்சிகளையும் உருவாக்கிச் செயல்பட வைத்து விட்டது சந்தை. மானுடச் செயல்பாடுகள் அனைத்தும் சமூக மேம்பாட்டுக்கு என்ற நிலையை தகர்த்து, அனைத்தும் தனிமனித நுகர்வுக்கும் அதற்கான பொருளாதார வளர்ச்சிக்கும் என்ற சிந்தனை ஊக்குவிக்கப்பட்டு விட்டது.

### சிந்தனைத் தாழ்வு

இந்த நிலை இனியும் நீடிக்க சமூகத்தில் வாய்ப்பில்லை. இந்தச் சூழலை இன்றுள்ள அரசியல், மாற்றும் திறன் அற்றதாகவே உள்ளது. எனவே இன்றைய கட்சி அரசியலிலிருந்து ஒரு புது அரசியல் உருவாக்கப்பட வேண்டிய சூழலுக்கு சமூகம் தள்ளப்பட்டுள்ளது. அந்த புது அரசியலை கட்டுவது தான் இன்றைய தேவையாக இருக்கிறது. நாம் இன்று பார்க்கும் ஒரு தாழ்நிலைச் செயல்பாடு அனைத்துத் தளங்களிலும் ஒரு புதிய பரிணம வளர்ச்சியை நோக்கி சமூகத்தை தள்ள வந்ததுபோல் தான் நாம் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். சுதந்திரப் போராட்ட காலத்திற்கு முன்பு துவங்கிய இந்திய உருவாக்கச் சிந்தனை மாபெரும் தியாகச் சிந்தனையாளர்கள் மூலம் உருவாக்கப்பட்டு சாதாரண மக்களின் மனங்களில் பேரெழுச்சியை ஏற்படுத்தியது. விவேகாநந்தரில் தொடங்கி, பகவான் அரவிந்தர், ரவீந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தி, ஜே.சி.குமரப்பா போன்ற எண்ணற்ற துறவிகளும் சிந்தனையாளர்களும் உருவாக்கிய எண்ண அலை உச்சத்தை அடைந்து இந்தியாவுக்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது. அந்த எண்ண அலை பாதுகாக்கப்பட்டு எதற்காக இந்தியா அடைந்ததோ அந்த லட்சியத்தை அடைய மக்கள் இயக்கம் புதிய இந்தியாவை உருவாக்கவும் செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால் மாறாக இந்தியா என்ற நாட்டைக் கட்டமைக்க அரசு இயந்திரம் செயலாற்றியதில், சுதந்திரத்திற்குப் பின் உருவான தலைவர்கள் அரசு தரும் சுகத்தில் திளைக்க ஆரம்பித்து விட்டனர். உயர்ந்த உன்னத லட்சியங்களுக்காகப் பெற்ற சுதந்திரம் ஒரு சில சமூகக் குழுக்கள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்திட உதவியுள்ளது என்பதுதான் நாம் இன்று காணும் எதார்த்த வாழ்வியல்ச் சூழல். இந்தத் தாழ்நிலை எதனால் வந்தது என்று யோசித்துப் பார்த்தால், நம் முன் வந்து நிற்கும் பதில், நம் நாட்டுத் தலைவர்களின் தாழ்நிலைச் சிந்தனையால் வந்தது என்று கூறிவிடலாம்.

### புதிய அரசியலை நோக்கி

இந்தச் சூழலை சமாளிக்க நாம் செய்ய வேண்டிய பணி ஒரு புதிய அரசியலை நோக்கிப் பயணம் செய்ய வேண்டும். அந்த அரசியல் தேர்தல் அரசியல் அல்ல, கட்சி அரசியல் அல்ல, இவைகளைத் தாண்டிய மக்கள் அரசியல். அரசியல் என்பதே மக்களுக்கானதுதானே என்று கேட்கத் தோன்றும். உண்மைதான். ஆனால் அந்த அரசியல் இன்று எங்கு கொண்டு வந்து நம்மை நிறுத்தியிருக்கிறது என்றால் கட்சிக்காக, கட்சிக்காரருக்காக அரசியல் என்ற இடத்துக்கு நம்மை இட்டுச் சென்று விட்டது. அதேபோல் அரசியல் என்பது மக்களின் பங்கேற்போடு மக்கள் பிரச்சினைகளுக்காக அரசியல் கட்சிகள் அரசை பணி செய்ய வைக்கப் போராடுவது. அதன் மூலம் மக்கள், அரசியல்விழிப்புணர்வு பெறுவார்கள், அத்துடன் அரசு முறையாக கண்காணிக்கப்பட்டு மக்களுக்காகச் செயல்படத் தொடங்கும். இன்று கட்சிகளாலும் போராட முடியவில்லை, அதற்குக் கட்சிக்காரர்களும் தயாராகவில்லை. இதன் விளைவுதான் அரசாங்கத்தின் செயல்பாடுகளால் மக்கள் பாதிக்கப்படும் போது மக்களே போராடிக் கொண்டிருக்கின்றனர். இது ஒரு அரசியல் பின்னடைவு. அடுத்து அரசியல் கட்சிகள் மக்களுக்கு வழிகாட்டியாக முன் நிற்க வேண்டியவைகள் மக்களுக்குப் பின் நிற்கின்றன, மக்கள் அரசியல் என்பது மக்கள் பிரச்சினைகளுக்காக மக்கள் போராடும் போது, அந்தப் பிரச்சினைகளுக்காக அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து தாங்கள் கையிலெடுத்து அவைகளுக்காகப் போராடுவது. அதில் ஆளும் அணி, எதிர் அணி என்றில்லாமல் அந்த மக்கள் பிரச்சினையில் தீர்வை நோக்கி நகர்த்திட கட்சிகள் ஒன்றிணைய முனைய வேண்டும்.

## குடியாட்சியை நோக்கி

மக்கள் அரசியல் எதன்மேல் கட்டப்படல் வேண்டும் என்றால் மேம்பாட்டுப் பிரச்சினைகளில் கட்டப்பட வேண்டும். இதில் மிக முக்கியமானது, அந்த அரசியல் உண்மைத் தரவுகளையும் அறிவியல் பூர்வ பார்வையையும் பின்புலத்தில் வைத்து செயல்பட நம்மை நாம் தயார் செய்து கொள்ள வேண்டும். அரசியலிலும், ஆட்சியிலும், ஆளுகையிலும் பிரதானமாக்கப்பட்ட மக்களுக்கான சலுகைகள் (benefits) என்ற வாதத்திலிருந்து மக்களுக்கான மேம்பாட்டு உரிமைகள் என்ற விவாதத்தை முன்னெடுக்க வேண்டும் அரசியலில். அப்படி மேம்பாட்டுக்கான உரிமைகள் என்பதை முன்னெடுக்கும்போது அத்துடன் சமூகப் பொறுப்புக்கள் அல்லது குடிமக்கள் பொறுப்புக்கள் என்ற விவாதத்தை முன்னெடுக்க வேண்டும். உரிமைகளும் பொறுப்புக்களும் இரண்டும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவை. அடுத்து இந்திய நாட்டு மக்களின் செயல்பாடுகளுக்கு வழிகாட்டும் கோட்பாட்டுப் புத்தகம் என்பது அரசியல் சாசனம்தான். எனவே நம் அரசியல் மற்றும் மக்கள் செயல்பாடுகள் அனைத்தும் மக்களை ஒருங்கிணைப்பதிலும், நாட்டை வலுப்படுத்துவதிலும் இருக்க வேண்டுமே தவிர மக்களை சாதி, மத, இன, பிராந்திய, மொழி, மற்றும் கலாச்சார அடையாளங்களை வைத்துப் பிரித்து அரசியல் செய்யக்கூடாது. இது முற்றிலுமாக அரசியல் சாசனத்திற்கு எதிரான அரசியல். அதே நேரத்தில் எந்த மதத்தைச் சார்ந்தவரும் செய்கின்ற தவறுகளை தட்டிக் கேட்காமல் இருக்கக்கூடாது. எல்லா மதங்களும் சுதந்திரமாக இயங்க வேண்டும். அதே நேரத்தில் மத மாற்றம் என்பதற்காக நிறுவனங்கள் செயல்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## புதிய மேம்பாட்டு வரையறை

மதங்களின் நல்லிணக்கத்திற்காக ஓர் அமைப்பு ஏற்படுத்தி செயல்பட வைக்க வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக மேம்பாடு மற்றும் வளர்ச்சி என்பதை இயற்கையை அழிக்காத, இயற்கை வளங்களைச் சுரண்டாத செயல்பாடுகள் என்று வரையறை செய்து செயல்பட வேண்டும். அதேபோல் வளர்ச்சி என்பதும், மேம்பாடு என்பதும் அனைவருக்குமானது என்பதை மையப்படுத்த வேண்டும். இந்தச் செயல்பாடுகள் அனைத்தும் துவங்க வேண்டிய இடம் கிராமங்கள். இந்த விவாதங்களை துவக்க வேண்டியது கிராமங்களிலிருந்து மக்கள் இயக்கமாக வியாபிக்க வேண்டும். இதற்கு இன்றைய உள்ளாட்சிகள் கிராமங்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். பஞ்சாயத்துக்கள் ஒட்டுமொத்த கிராமமும் ஒரு சிறு கிராமக் குடியரசாக மாற்ற பஞ்சாயத்து மன்ற உறுப்பினர்களும், தலைவர்களும், தன்னார்வலர்களும் ஒன்றிணைய வேண்டும். அந்த கிராம மக்கள் எப்படிப்பட்ட ஒரு தற்சார்பு கிராமத்தை உருவாக்க வேண்டும் என கனவுகண்டு விவாதித்து கிராமத்தை புனரமைத்து, கிராம மேம்பாட்டுக்கான ஒரு திட்டத்தினை விஞ்ஞான பூர்வமாக தயாரித்திடல் வேண்டும். இது ஒரு நிபுணத்துவமான ஒரு செயல்பாடு. இதற்கு அருகில் உள்ள உயர்கல்வி நிலையங்களை அணுகி இந்தக் கிராம புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்க உதவிடுமாறு வேண்டிக்கொள்ள வேண்டும். அந்த கல்வி நிலையங்களில் உள்ள உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் மூலம் இந்தப் பணியினைச் செய்ய கேட்டுக்கொள்ள வேண்டும்.

இந்தத் திட்டச் செயல்பாடுகள் என்பது எல்லாத் தரப்பு மக்களின் பங்கேற்போடு நடைபெற வேண்டும். கிராமத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தந்திட திட்டத்தில் வழிவகை காணப்பட வேண்டும். அத்துடன் கிராமத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களின் பொருளாதாரமும் மேம்படத் தேவையான வழிவகைகள் வகுக்கப்பட்டு திட்டத்தில் இணைக்கப்படல் வேண்டும். ஒட்டு மொத்தத்தில் கிராமங்கள் கிராமத்து மக்களின் பொறுப்பில் இருக்க வேண்டும்.

கட்டுரையாளர்: அரசியல் அறிவியல் பேராசிரியர் (பணிநிறைவு)


### 1956ஆம் ஆண்டின்
### பத்திரிகைப் பதிவு விதிகளின் எட்டாவது விதி
### படிவம் 4

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | சென்னை |
| இதழ் வெளியிடும் காலம் | : | மாத வெளியீடு |
| அச்சிடுபவர் | : | த.வசந்த்குமார் |
| இனம் | : | இந்தியன் |
| முகவரி | : | சேகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 50,(ப.எண். 168) பெரிய தெரு, சேப்பாக்கம், சென்னை-600005 |
| வெளியிடுபவர் | : | வி.முத்தையா |
| இனம் | : | இந்தியன் |
| முகவரி | : | 22,MJB தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005 |
| ஆசிரியர் | : | வி.முத்தையா |
| இனம் | : | இந்தியன் |
| முகவரி | : | 22,MJB தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005 |
| பத்திரிகையின் பங்குதாரர் மற்றும் சொந்தக்காரரின் பெயரும் முகவரியும் | : | வி.முத்தையா, 22,MJB தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005 |

வி.முத்தையா என்கிற நான், மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் எனக்குத் தெரிந்தவரை முற்றிலும் உண்மையானவை என்று இதன் மூலம் உறுதி அளிக்கிறேன்.

நாள்: 22-02-2022

(ஒப்பம்)
வி.முத்தையா
வெளியீட்டாளர்

பதிவு

**க. சந்திரசேகரன்**
muhilnilavu@gmail.com

## மணிப்பால் பல்கலைக்கழகத்தில்


# சித்தமருத்துவத்துடன் இணைந்த கூட்டுமருத்துவச் சிகிச்சை

கொரோனா கொடுந்தொற்றால் பாதிக்கப்பட்டு வீட்டுத்தனிமையிலிருந்து, பின் மருத்துவஓய்வு எடுத்து, இயல்பு நிலைக்குத் திரும்பியிருந்த நேரம்அது. மணிப்பால் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் சித்தமருத்துவச் சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படுவதாகவும் அது தொடர்பான தொடக்க நிகழ்வில் அவசியம் கலந்துகொள்ள வேண்டும் என்றும் மருத்துவர் அருள்அமுதன் அழைப்பு விடுத்தார். அழைப்பை ஏற்கவும் முடியவில்லை; தவிர்க்கவும் முடியவில்லை. பயணத்துக்குத் தயாரானேன். நண்பரும் அணுவிஞ்ஞானியுமான டாக்டர் நடராசன் அவர்களும் நானும் பயணத்தை உறுதி செய்தோம். 08.02.2022 செவ்வாய்க்கிழமை பகல் ஒருமணிக்குப் புறப்பட்டு மறுநாள் 09.02.2022 புதன்கிழமை காலை 5 மணிக்கு மங்களூரை அடைந்தோம். சுமார் 17 மணிநேரப் பயணத்துக்குப்பிறகு மங்களூரில் இறங்கி அங்கிருந்து உடுப்பிக்குப் போய் உடுப்பியிலிருந்து மணிப்பால் சென்றடைந்தோம். எங்கள் பயணத்துக்கு ஒருநாள் முன்னதாக, 'அல்லா ஹு அக்பர்' என்கிற ஒற்றை முழக்கத்தின்மூலம் உலகத்தையே தன்பக்கம் திருப்பிய இந்தியா பெற்றெடுத்த வீரச்சிறுமி முஸ்கான் பிறந்த மண்ணில் பயணித்தது மறக்க முடியாதது. மணிப்பால் பல்கலைக்கழகத்தின் விருந்தினராய் தங்குமிடம், உணவு, உபசரிப்பு அனைத்தும் சிறப்பு.

விவசாயக்கல்வி, கால்நடைமருத்துவக்கல்வி நீங்கலாக, மருத்துவக்கல்வி, பொறியியல்கல்வி, கலைஅறிவியல் கல்வி, பள்ளிக்கல்வி என சுமார் ஆயிரம் ஏக்கரில் பரந்துவிரிந்து கிடக்கும் கல்விவளாகம்; உயர உயரமாய் எழுந்து நிற்கும் அழகழகான கட்டிடங்கள், அருங்காட்சியகம், நூலகம், பரிசோதனைக் கூடம் என ஒவ்வொன்றும் பிரமாண்டம். அடர்ந்து வளர்ந்து நிற்கும் மரங்களும் வரிசைகட்டி நிற்கும் அழகுச் செடிகளும் அது தரும் பசுமையும் நிழலின் தண்மையும் அழகுக்கு அழகூட்டி நின்றன. தனது பணி நெருக்கடிகளுக்கிடையிலும் பல்கலைக்கழகத்தின் குறிப்பிடத்தக்க சில இடங்களுக்கு நம்மை அழைத்துக்கொண்டுபோய்க் காட்டினார் மருத்துவர் அருள்அமுதன். பிற்பகல் 4 மணி அளவில் நிகழ்வு தொடங்கியது. அழகிய சிற்றரங்கில் எளியமுறையில் நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தில் உள்ள ஆயுர்வேதம், சித்தமருத்துவம் மற்றும் யோகா அடங்கிய கூட்டு மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வெளிநோயாளிகளுக்கு சிகிச்சைஅளிக்கும் சித்தமருத்துவப் பிரிவை பல்கலைக்கழகத்

**டாக்டர் டி.எம்.ஏ.பை**



'மண்ணு பள்ளு' என துளுமொழியில் அழைக்கப்பட்ட மலைப்பகுதிக்கு மணிப்பால் எனப் பெயரிட்டு ஒரு கல்வி நகரமாக வளர்த்தவர் டாக்டர் பை. மணிப்பால் பகுதியில் ஒரு எளிய நடுத்தரக் குடும்பத்தில் 1898இல் பிறந்து வளர்ந்த பை, சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்தவர். தாயாரின் கட்டளையை ஏற்று, கிராமத்திலேயே தங்கி கிராமத்து மக்களுக்கு மருத்துவச் சேவை செய்தவர். வறுமை ஒழிப்பு, கல்வி வளர்ச்சி, மருத்துவ சேவை என்கிற மூன்று இலக்குகளை முன்னிறுத்தி தனது தொலைநோக்குப் பார்வையைத் தீவிரப்படுத்தியவர். பள்ளிகள், கலைக்கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மருத்துவமனைகள், சிண்டிகேட் வங்கி, உதயவாணி செய்தித்தாள் எல்லாம் இவருடைய செயல்வடிவம். 1972ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதுகளுள் ஒன்றான பத்மஸ்ரீ விருதுபெற்றவர். 1999ஆம் ஆண்டு அரசு அஞ்சல்தலை ஒன்றை வெளியிட்டும் இவரைப் பெருமைப்படுத்தியுள்ளது.




கர்நாடக மாநிலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைஅடிவாரத்தில் அமைந்துள்ள உடுப்பி மாவட்டத்தின் ஒரு மலைக் கிராமம்தான் மணிப்பால். மேடும்(மண்ணும்) பள்ளமுமாக(பள்ளு) அமைந்திருந்த மண்ணுபள்ளுதான் இன்று மணிப்பால் என்று மருவியுள்ளது. திராவிட மொழிகளுள் ஒன்றான 'துளு' பேசப்படும் மக்கள் நிறைந்த பகுதி என்பதால் இதற்கு துளுநாடு என்ற பெயரும் உண்டு. இந்த மலைத்தளத்தில்தான் மணிப்பால் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. 1953இல் டாக்டர் டி.எம்.ஏ.பை அவர்களால் நிறுவப்பட்ட இந்தியாவின் இரண்டாவது மருத்துவக் கல்லூரி மணிப்பாலில் அமைந்த கஸ்தூர்பா மருத்துவக் கல்லூரி. இதுதான் இன்று மணிப்பால் பல்கலைக்கழகமாக வளர்ந்து நிற்கிறது. முதலாவது மருத்துவக் கல்லூரி வேலூர் மருத்துவக் கல்லூரி, இன்றளவும் இந்தியாவின் முதல் மூன்று இடங்களுக்குள் தரவரிசையில் உள்ள நிறுவனம் மணிப்பால் பல்கலைக் கழகம் என்பது குறிப்பிடத்தக்கது.

மணிப்பால், மங்களூரு, பெங்களூரு, சிக்கிம், ஜெய்பூர், ஜாம்ஷெட்பூர், நேபாளம், துபாய், ஆன்டிகுவா உள்ளிட்ட 9 இடங்களில் 9 பல்கலைக்கழகங்கள் மற்றும் 38 கல்வி நிறுவனங்களில் 300 வகையான பாடப்பிரிவுகள் உள்ளன. உலகின் எந்த அறிவியல் கண்டுபிடிப்பையும் உடனடியாக தமது கல்லூரிக் கல்விக்குள் கொண்டுவந்து சேர்க்குமளவுக்கு உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகள் உருவாக்கி வைக்கப்பட்டுள்ளன. செயற்கைக் கருத்தரிப்பு, ஸ்டெம்செல் சிகிச்சை, ஜெனட்டிக் சிகிச்சை உள்ளிட்ட படிப்புகள் இந்தியாவில் முதன்முதலில் இங்குதான் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 60 நாடுகளைச் சேர்ந்த சுமார் 28 ஆயிரம் மாணவர்கள் ஆண்டுதோறும் இங்கே கல்வி கற்க வருகின்றனர். ஆயுர்வேதம், சித்தம், யோகா உள்ளிட்ட கூட்டு மருத்துவத்துக்கான கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்றை 2015இல் நாட்டிலேயே முதன்முதலாக நிறுவிய பெருமையுடையது இந்தப் பல்கலைக் கழகம்.

துணைவேந்தர் லெப்டினன்ட் ஜெனரல் டாக்டர் எம்.டி.வெங்கடேஷ் மற்றும் இணைவேந்தர் டாக்டர் பி.எல்.என்.ஜி.ராவ் ஆகியோர் திறந்துவைத்து உரை நிகழ்த்தினார்.


**துணைவேந்தர் வெங்டேஷ் தமது தொடக்க உரையில்:**

'இந்தியாவில் ஆயுஷ்என்பது ஆயுர்வேதம், சித்தமருத்துவம், ஹோமியோபதி, யுனானி மற்றும் யோகாவை உள்ளடக்கியது. இதில் சித்தமருத்துவம் என்பது ஒருமுழுமைபெற்ற பாரம்பரிய மருத்துவமுறைகளில் ஒன்றாகும். எதிர்காலத்தில் நோயாளிகளுக்கு சித்தமருத்துவச் சேவையை வழங்க வேண்டுமானால் சிறந்த மருத்துவ முறைகளை ஒருங்கிணைத்து கூட்டு மருத்துவச் சிகிச்சையாக அளிப்பதே சிறந்த மருத்துவச் சிகிச்சையாக இருக்கும். வளர்ந்த நாடுகளில் உள்ள ஒவ்வொரு மருத்துவப் பல்கலைக்கழகமும் கூட்டு மருத்துவ ஆராய்ச்சிக்கான தனித்துறையைக் கொண்டுள்ளன. அதனை முன்மாதிரியாகக் கொண்டே இந்தப் பல்கலைக்கழகமும் கூட்டு மருத்துவ ஆராய்ச்சிக்கான வாசல்களைத் திறந்துவிட்டுள்ளது. தொற்றுநோய், நீரிழிவு நோய், கல்லீரல் நோய், புற்றுநோய், பிள்ளைப்பேறு, உடல்நலம், மனநலம், முதுமை உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு ஒருங்கிணைந்த முறையில் சிகிச்சைஅளிக்கும் மையமாக இந்த சித்தமருத்துவச் சிகிச்சைப்பிரிவு செயல்படும். அதன்வழியாக மணிப்பால் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும் மருத்துவர்களும் சித்த மருத்துவத்தை அறிவியல்பூர்வமாக ஆராய்ச்சி செய்து கூட்டுமருத்துவத்தில் சித்த மருத்துவத்துக்கு உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு' என்றார்.

**இணைவேந்தர் ராவ் தமது வாழ்த்துரையில்:**

அனைத்து ஆயுஷ் மருத்துவர்களும் அலோபதி மருத்துவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டால், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களைக்கூட எளிதில் குணப்படுத்தலாம். அதுவே பொதுமக்களுக்கு அளிக்கும் மிகச்சிறந்த மருத்துவச்சேவையாக இருக்கும்' என்றார்.

நிகழ்வில் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு கூட்டுமருத்துவ ஆராய்ச்சிகளுக்காக சுமார் 2.2




**தொடக்கவிழா நிகழ்வில்**

கோடி தொகையை வழங்க முன்வந்துள்ள அமெரிக்காவின் வடகரோலினாவில் உள்ள சித்த மருத்துவம் மற்றும் ஆராய்ச்சிக்கான உலக மையத்தின் மருத்துவக்குழுவின் சார்பில் டாக்டர் சிவசைலம், டாக்டர் சங்கரி சிவசைலம், டாக்டர் செல்வசண்முகம் ஆகியோரும் கலந்துகொண்டனர். மேலும் தமிழ்நாட்டிலிருந்து மருத்துவர் இளங்கோ, மருத்துவர் ராஜநாயகி, டாக்டர் நடராசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**நிகழ்வில் கலந்துகொண்ட அமெரிக்காவின் மேரிலாண்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புற்றுநோய் மருத்துவநிபுணர் டாக்டர் சங்கரிசிவசைலம்,** 'புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைஎடுக்கும் அமெரிக்கர்களில் பலர், அலோபதி மருத்துவத்தோடு பாரம்பரிய மருந்துகளையும் விரும்பிக்கேட்கிறார்கள். ஆனால் ஒருமருத்துவராக எந்தவகையான பாரம்பரிய மருத்துவம் பயனுள்ளதாக இருக்கும்; யாரிடம்கேட்பது என்கிற விவரங்கள்கூட எங்களுக்குத் தெரியவில்லை. எனவே, அறிவியல்தரவுகளின் அடிப்படையில் புற்றுநோய்களுக்கு சிகிச்சைஅளிக்க இந்தமையத்தின்பங்கு முக்கியமானதாக இருக்கும். இந்தப் பல்கலைக்கழகம் அதிநவீன மருத்துவக்கட்டமைப்பு வசதிகளுடன், அமைந்திருப்பதால் கூட்டு மருத்துவ ஆராய்ச்சியில் நாட்டிலேயே முன்னோடியாக இருக்கும் என்றார்.

**காணொளிமூலம் நிகழ்வில் கலந்துகொண்ட அமெரிக்காவின் மோர்ஹவுஸ் ஸ்கூல் ஆப் மெடிசன் உடலியல்துறைப் பேராசிரியர் டாக்டர் ராஜகோபால் ஸ்ரீதரன்,** அமெரிக்காவில் உள்ள மருத்துவ மாணவர்கள் சித்தமருத்துவத்தைத் தெரிந்துகொள்வதிலும் புரிந்துகொள்வதிலும் அதிக ஆர்வம் காட்டுவதால் சித்த மருத்துவப்பாடத்திட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டு மோர் ஹவுஸ் ஸ்கூல் ஆப் மெடிசன் நிர்வாகத்தினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சித்த மருத்துவம் பயில விரும்பும் அமெரிக்க மாணவர்கள் மணிப்பால் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்கப்படும் சித்த மருத்துவப்பாடத்திட்டத்தைத் தேர்ந்தெடுத்து படிக்கலாம். பயிற்சிக்காக மணிப்பால் வரலாம்.எனவே,மணிப்பாலில் தொடங்கப்பட்டுள்ள சித்த மருத்துவச் சிகிச்சைப்பிரிவு பல புதிய கல்வி வாய்ப்புகளைத் திறக்கும் என்றார்.

**மிசோரி - கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் ஆனந்த் சொக்கலிங்கம்,** தீவிர சிகிச்சைப்பிரிவில் இருந்த இதயசெயலிழப்பு நோயாளிகளுக்கு சித்தமருத்துவ உளவியல் சிகிச்சை நல்ல பலன்களைக் கொடுத்ததாகவும் எனவே கூட்டுமருத்துவ ஆராய்ச்சிக்காக தற்போது தொடங்கப்பட்டுள்ள சித்தமருத்துவப் பிரிவுடன் இணைந்து செயல்பட விரும்புவதாகவும் தெரிவித்தார்.

நிகழ்வில் காணொளி வழியாக டாக்டர் சிவா சோமசுந்தரம் (சேலம் இண்டர் நேஷனல் யுனிவர்சிட்டி, மேற்கு வர்ஜீனியா), டாக்டர் பெரியசாமி செல்வராசு (பேராசிரியர், நோயியல் மற்றும் ஆய்வக மருத்துவத்துறை, எமோசி யுனிவர்சிட்டி ஸ்கூல் ஆப் மெடிசின்) டாக்டர் சரவணன், மூத்த இதயச் சிகிச்சை நிபுணர் கைசர் பெர்மனென்டே மருத்துவமனை அட்லாண்டா லூர்ஜியா) உள்ளிட்ட மருத்துவர்கள், கலந்துகொண்டனர்.

முன்னதாக கூட்டுமருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் விஷால்பட் அனைவரையும் வரவேற்றார். சித்தமருத்துவச் சிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் சித்த மருத்துவர் டாக்டர் அருள்அமுதன் நன்றி கூறினார்.

தமிழ்நாட்டுக்கு வெளியே ஒரு மருத்துவப் பல்கலைக்கழகத்தில் சித்தமருத்துவச் சிகிச்சை தொடங்கப்பட்டிருப்பது இந்தியாவிலேயே இதுதான் முதல்முறை என்பதை வரலாறு குறித்துக்கொள்ள வேண்டும். தமிழர் பாரம்பரியமான சித்த மருத்துவத்தை தமிழ்நாட்டுக்கு வெளியே இருக்கிற தனியார் பல்கலைக்கழகம் ஒன்று இவ்வளவு நம்பிக்கையோடு முன்னிறுத்துகின்றபோது தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களும் தமிழ்நாட்டு அரசும் கவனம்குவித்தால் சித்தமருத்துவத்தை உலகமெல்லாம் பரவும் வகை செய்யலாம்.அது தமிழர்களுக்குப் பெருமை; தமிழ்நாட்டுக்குப் பெருமை. ●

கட்டுரை

**நிகழ் அய்க்கண்**
ayykan1960@gmail.com

# மக்கள் நலனை மறந்த ஒன்றிய அரசின் பட்ஜெட் 2022-23

**மக்கள் நலனை மறந்துவிட்டு, கார்ப்பரேட் நலனை மனதிற்கொண்டு தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டினை மக்களவையில் சமர்ப்பித்ததற்குப்பிறகு, இது "மக்கள் நலனுக்கான பட்ஜெட்" எனக்கூறி, மக்களிடமும் ஒப்புதல் பெற முயலுபவர்களைப் பற்றி என்ன சொல்லுவது ?!**

பிப்ரவரியில் 2021 ஆம் ஆண்டு ஒன்றிய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதற்குப்பிறகும், இந்த ஆண்டு பிப்ரவரியில் பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு முன்பும் இரண்டுமுறை கொரோனா வைரஸ் தொற்று நாடுமுழுக்கப்பரவி, ஏழைமக்களை கடுந்துயரத்திற்கு உள்ளாக்கியது நினைவிருக்கலாம். இந்த இடைபட்டக் காலத்தில், ஊடகங்களில் வெளியான செய்திகளைத் திரும்பிப்பார்க்கும்போது, இந்தியதேசத்து மக்களின் பரிதாப நிலையினை அவதானிக்க முடியும்.

ஆகஸ்ட் 2021 இல், தொழில் முனைவோர் கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ஒரு கூட்டத்தில் ஒன்றிய அமைச்சர் பேசும்போது, நாட்டில் 15 கோடி பேருக்கு முறையான கல்வி கிடைக்கவில்லை என்கிறார்.

கொரோனா காலத்தில் கிட்டத்தட்ட 1.9 மில்லியன் பேர்கள் வேலைவாய்ப்புக்களை இழந்திருப்பதாக புள்ளிவிபரமொன்று உறுதிசெய்கிறது.

நாடுமுழுக்க நடந்த வேலைவாய்ப்பு முகாம்களின் மூலம் வேலைவாய்ப்பினைப்பெற்றவர்கள் 2019-20 ஆண்டில் 86,822 பேர். அதுவே 2020-21 ஆண்டில் 31,727 பேர் மட்டுமே பெற்றிருக்கின்றனர். டிசம்பர் 2021 கணக்கீட்டின்படி, வேலைவாய்ப்பின்மையானது நகரப்பகுதிகளில் 9.3 சதவீதமாகவும், கிராமப்பகுதிகளில் 7.3 சதவீதமாகவும் உள்ளது.

கிரடிட் கார்டு மூலம் வங்கிகளில் ஒரு லட்சம் கோடிக்குமேல் தனிநபர் கடன் பெறப்பட்டிருக்கின்றது.

வங்கிகளில் கடன்பெற்று தொழில் துவங்கும் தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை 2019-20 காலகட்டத்தில் வெறும் 220 ஆக குறைந்துவிட்டிருக்கின்றன. நவம்பர் 2021 வரை 22,557 புதிய தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கின்றன. இதுவரை 60 லட்சம் அளவுக்கு சிறு மற்றும் குறு நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டன.

2019-20 ஆம் ஆண்டில் தனியார் திட்டங்களுக்கென வங்கியானது 1,75,830 கோடி ரூபாய் அளவுக்கு கடன் வழங்கியிருக்கின்றது. அதுவே 2020-21 ஆம் ஆண்டில், வெறும் 75,558 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டது. மார்ச் 2021 வரை வங்கிகளில் கடன் பெற்று திருப்பிச்செலுத்தாதத்தொகை மட்டும் 8,34,902 கோடி ரூபாயாக இருக்கின்றது.

வேலைவாய்ப்பின்மையினாலும், வங்கியில் வாங்கிய கடனைத்திருப்பிச்செலுத்த முடியாமையினாலும் 2018 முதல் 2020 வரையிலான காலக்கட்டத்தில் 25,000 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

2020-21 ஆம் ஆண்டுகளில் மட்டும் 4.6 கோடிப்பேர் ஏழ்மைக்கு ஆளாகியிருப்பதாக புள்ளிவிபரம் கூறுகிறது. 116 நாடுகள் அடங்கிய பசியால் வாடும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 104 ஆவது இடத்திலிருக்கின்றது. பசியால் வாடுபவர்களில் ஆதிதிராவிடர் 50.6 %, பழங்குடியினர் 33.3%, இதர

பிற்படுத்தப்பட்டவர் 27.2% ஆக இருக்கின்றனர். 2012 ஆம் ஆண்டு எழ்மையில் வாழும் மக்களின் எண்ணிக்கையானது 217 மில்லியனாக இருந்தது 2019-20 கால கட்டத்தில் 270 மில்லியனாகி, கொரோனா காலத்தில் இன்னும் அதிகரித்துவிட்டது.

அதே சமயம். இந்தியக்கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 102 லிருந்து 142க்கு உயர்ந்திருப்பது மட்டுமல்ல, இவர்களின் சொத்துமதிப்பானது 23 லட்சம் கோடியிலிருந்து 53 லட்சம் கோடியாகவும் உயர்ந்திருக்கின்றது. இதில் அம்பானி, அதானிகளின் சொத்துமதிப்பு பன்மடங்கு உயர்ந்து, உலகப்பணக்காரர்களின் முதல் 12 பேர் பட்டியலிலும் இடம் பிடித்துவிட்டனர். அம்பானி, அதானிகளின் சொத்து மதிப்பு மட்டும் உயரவில்லை. வலதுசாரிஆட்சியாளர்கள் சார்ந்திருக்கும் கட்சியின் சொத்துமதிப்புக்கூட கிட்டத்தட்ட 5,000 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கின்றது. இப்படியாக இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.

நாடு சுதந்தரமடைந்து 75 வருடங்களாகியும், இதுதான் இன்றைய இந்தியாவின் யதார்த்தநிலையாக இருக்கிறது, இதிலிருந்து மீளுவதற்கு, 2022-2023 க்கான பட்ஜெட்டானது வழிகாட்டும் என எதிர்பார்த்திருந்தபோது, வேலைவாய்ப்பினை அளிக்கக்கூடிய, சிறு மற்றும் குறு நிறுவனங்களை ஊக்குவிக்க நடவடிக்கை ஏதும் அறிவிக்கப்படாதது மிகுந்த ஏமாற்றத்தைத்தருகிறது. அதேபோல் விலைவாசிஉயர்வு,பணவீக்கம்,சமத்துவமின்மையைப் போக்குவதற்கும் வழிவகைகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், மக்களனைவரையும் பாதிக்கும் பெட்ரோலியம் - டீசல் எரிபொருள்களுக்கான வரியும் குறைக்கப்படவில்லை. அதுமட்டுமின்றி, மக்களின் நலனுக்கான நிதி ஒதுக்கீடும், அதாவது, உணவு - உரத்திற்கான மானியம், கிராமப்புற மேம்பாடு மற்றும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்திற்கான ஒதுக்கீடும் குறைக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாகக்கூறினால், மக்கள் நலனுக்காக ஒதுக்கப்படும் மானியமானது கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 39 சதவீதம் குறைத்து ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதேபோல ஒட்டுமொத்த விவசாயத்துறைக்கான ஒதுக்கீடானது 3.92 சதவீதத்திலிருந்து, 3.84 சதவீதம் என குறைக்கப்பட்டிருக்கின்றது. கொரோனாவின் துயரத்தை எதிர்கொண்டுள்ள சுகாதாரத்துறைக்கு, கடந்த ஆண்டைவிட 16 சதவிதம் உயர்த்தி ஒதுக்கப்பட்டாலும் சிகிச்சைக்கானச்செலவு மற்றும் எதிர்பாராத செலவீனங்களுடன் ஒப்பிடும்போது குறைவே.


உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென, 'கதி சக்தி' எனும் பெயரில் சாலை, இரயில்வே, விமான நிலையம், துறைமுகம், நீர்வழிப்போக்குவரத்து, தளவாடக் கட்டமைப்பு, சரக்குப் போக்குவரத்துக்கென 20,000 கோடி ரூபாய் ; தேசிய நெடுஞ்சாலை 25000 கிலோமீட்டர் விரிவாக்கம் ; அதுமட்டுமின்றி, டிஜிட்டல் பல்கலைக்கழகம் மற்றும், டிஜிட்டல் மேம்பாட்டுத்திட்டங்கள் ; பத்திரப்பதிவினை எளிமையாக்கும் விதமாக 'ஒரே நாடு ஒரே பத்திரப்பதிவுமுறை' ; 'மேக்இன் இந்தியா திட்டம்' மூலம் 14 துறைகளில் 60 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு இப்படியாக அறிவிப்பு நீள்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் தாக்கலாகும் போது, ஆளுங்கட்சிகள் மற்றும் அதன் கூட்டணிக்கட்சிகளும் ஆதரிப்பதும், எதிர்க்கட்சிகள் பட்ஜெட் மக்கள் நலனுக்கானதல்ல என்று கூறுவதும் வழக்கமானதுதான் என்றபோதிலும் இந்த ஆண்டு சமர்பிக்கப்பட்ட பட்ஜெட்டினை அவ்வாறு ஒதுக்கிவைத்துவிட முடியாது. ஏனெனில், கடந்த இரண்டுவருடங்களாக எளியமக்கள் முதல் நடுத்தர வகுப்பினர் வரை வேலைவாய்ப்பின்றியும், குறைவான வருவாயினாலும் கடும் சிரமத்திற்குள்ளாகியிருக்கிறனர். ஒன்றிய அரசோ அச்சமயத்தில், மக்கள் நலனில் அக்கறையின்றி, பெட்ரோலிய - டீசல் - எரிவாயு விலைகளை தொடர்ச்சியாக உயர்த்திவந்தது மட்டுமல்லாது, சாலைப்போக்குவரத்திற்கான சுங்கக்கட்டணத்தையும் உயர்த்திவந்தது. ( இந்த நிதியாண்டில் ஜனவரி 2022 வரையிலான வசூல் 23,622.93 கோடி ) இதுபோதாதென்று, ஜி.எஸ்.டியில் மக்களைப்பாதிக்கக்கூடிய பொருட்களுக்குக்கூட வரிவிலக்கு அளிக்கப்படாததினால் மக்கள் மேலும் இன்னலுக்குள்ளாகினர்.

பட்ஜெட்டானது எகிறிப்போன விலைவாசி - பணவீக்கம் - சமத்துவமின்மையிலிருந்து மக்களைக்காப்பாற்றுவதற்கென, உடனடி வேலைவாய்ப்புக்களையும், சலுகைகளையும் வழங்குவதற்குப்பதிலாக, கார்ப்பரேட்டுகளுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பயனளிக்கக்கூடிய வகையில், சலுகைகள் மற்றும் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கார்ப்பரேட்டுகளுக்கு வரிச்சலுகைகள் அளித்துவருவதினால், அவர்களது லாபம் அதிகரித்து சமத்துவமின்மையின் இடைவெளி அதிகரித்துவிடுவதின் காரணமாக, கார்ப்பரேட்டுகளுக்கான வரியை அதிகரிக்கக்கோரி உலகெங்கிலுமிருக்கும் சமூக நோக்குகொண்ட பொருளாதார அறிஞர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்பினரின் குரல்கள் ஓங்கி ஒலித்தபோதும், இந்தியாவிலோ வரிச்சலுகையளிப்பதென்பது குறைவின்றி தொடரவே செய்கிறது.

1991 களுக்குப்பிறகான காலத்தில் இந்தியா நவதாராளமயத்தினை ஏற்றுக்கொண்டது. சந்தைமயம் எனும்போது உலகவங்கி, ஐ.எம்.எஃப் மற்றும் கார்ப்பரேட் நிறுவனக் கூட்டணிகளின் அதிகாரம்தான் செல்லுபடியாகும்.. இக்கூட்டணியானது, முதலில் உள்கட்டமைப்புக்காக கடனுதவி என்று கூறித்தான் வளர்ந்துவரும் நாடுகளுக்குள்ளே நுழைந்து, முதலில் சாலைப்போக்குவரத்து, மின்சாரம், என்றுகூறி ஒருபக்கம் கடனை அளிக்கும். இன்னொருபுறம் அதற்கான ஒப்பந்தத்தையும் தங்களது நாட்டினருக்கே கிடைக்க வழியேற்படுத்திவிடும். அப்படியான தந்திரங்கள் இன்றுவரை தொடர்வதைத்தான் இந்த



ஆண்டிற்கான பட்ஜெட் உணர்த்தவும் செய்கிறது.

சாலை, இரயில்வே, விமான நிலையம், துறைமுகம், நீர்வழிப்போக்குவரத்து, தளவாட உள்கட்டமைப்பு, சரக்குப்போக்குவரத்து எனும் ஏழு திட்டங்களை உள்ளடக்கிய 'கதி சக்தி' திட்டத்திற்கு, 20,000 கோடி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமின்றி, தேசிய நெடுஞ்சாலை 25,000 கி.மீ விரிவுபடுத்தப்படவுள்ளது. 430 வந்தே பாரத் ரயில்கள் தயாரிக்கப்படவுள்ளது. மேற்கூறியவற்றிலிருந்து, ஆட்சியாளர்களின் உள்நோக்கங்கொண்ட திட்டம் என்னவென்று இப்போது புரிந்திருக்கும்.

மக்களுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்து தருவது என்றாலே, அது கார்ப்பரேட்டுகளுக்குத்தான் பலனளிப்பதாக இருக்கும். உள்கட்டமைப்பு என்று சொல்லி கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளையடிக்க ஒருபக்கம் பட்ஜெட்டில் வழிவகை செய்யப்படுவதும், அவ்வாறாக, உள்கட்டமைப்பினை உருவாக்கியதற்குப்பிறகு, அரசாங்கமானது மற்றொருபக்கம், அக்கட்டமைப்பிலிருந்து லாபமீட்டிக்கொள்ளவும் செய்கிறது.

இந்தியாவானது,'மக்கள் நல அரசு' என்பதிலிருந்து விலகி, சந்தைமயத்திற்குள் நுழைந்த பிறகான காலத்தினை உன்னிப்பாக கவனித்தீர்களேயானால், அரசுத்துறைகளும் லாபமீட்டுவதில் குறியாக இருப்பதினை அறிந்துகொள்ள முடியும். ஜி.எஸ்.டி, அலைக்கற்றை, சாலைப்போக்குவரத்து சுங்க வசூல் ,பெட்ரோலியப்பொருட்கள், 'இ' சேவை, வங்கிச்சேவை, மோட்டார் வாகனச்சேவை.... இப்படியாக அடுக்கிக்கொண்டே போகலாம். இந்தப்பட்ஜெட்டில், ஒரே நாடு ஒரே பதிவு எனக்கூறி பத்திரப்பதிவினையும் ஒருங்கிணைக்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசின் இப்படியான செய்கையானது கார்ப்பரேட் நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒத்ததாக இருப்பதை மறுக்க முடியாது. அப்புறமென்ன... மக்கள் நலனே கார்ப்பரேட் நலனில் அடங்கியிருக்கின்றது.


பொதுவாக, கார்ப்பரேட் நிறுவனங்களை ஆதரிக்கும் பொருளாதாரவாதிகளிடையே ஒரு கருத்து நிலவுகிறது. அதாவது, தனியார் தொழில் நிறுவனங்களின் முதலீடு அதிகளவு பெருகுமானால், அதன் மூலம் போட்டி அதிகரித்து பொருளாதாரமும் வளர்ச்சியடையும், வேலைவாய்ப்பும் பெருகும் என்பதுதான் அது. இக்கூற்றினை நடைமுறையில் பொருத்திப்பார்க்கும்போது, தொழில் நிறுவனங்களின் வருகையால், ஒருபக்கம் சுற்றுச்சூழல் பாதிப்பு, மக்களின் வரிப்பணம், ஊழியர்கள் சமூக ப்பாதுகாப்புத்திட்டங்களின்றி குறைந்த ஊதியத்திற்கு பணியாற்றுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. அதிலும் தொழில் நிறுவனங்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும்போது கிடைக்கிற வேலையும் இல்லாமல் போய்விடுகிறது. இன்னொருபக்கம், தொழில் நிறுவனங்கள் பலவும் கொரோனாக்காலத்தில் கதவையடைத்து ஊழியர்களை தவிக்க விட்டது மட்டுமின்றி, பிரச்சனையை அரசின் பக்கம் தள்ளிவிட்டுவிட்டு ஒதுங்கிக்கொள்ளவும் செய்ததை யாரும் மறுக்கமுடியாது. நிலைமை இப்படியிருக்கும்போது கார்ப்பரேட் நிறுவனங்களை எப்படி நம்பமுடியும்?

மக்கள் நலனை மறந்துவிட்டு, கார்ப்பரேட் நலனை மனதிற்கொண்டு தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டினை மக்களவையில் சமர்ப்பித்ததற்குப்பிறகு, இது " மக்கள் நலனுக்கான பட்ஜெட்" எனக்கூறி, மக்களிடமும் ஒப்புதல் பெற முயலுபவர்களைப் பற்றி என்ன சொல்லுவது !?.

# பிங்கு

தமிழில்: யூமா வாசுகி

**சி.வி. ஸ்ரீராமன்**
**(1931, பிப்ரவரி 7 - 2007, அக்டோபர் 10)**



மலையாளத்தின் மிகச் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான சி.வி. ஸ்ரீராமன் கேரளத்தின் திருச்சூர் மாவட்டம், குன்னம்குளம் நகராட்சியைச் சேர்ந்த 'போர்க்குளம்' கிராமத்தில் பிறந்தார்.குழந்தைப் பருவம் இலங்கையில் கழிந்தது. தொடக்கக் கல்வியும் அங்குதான். பிறகு குன்னம்குளம் அரசு உயர்நிலைப் பள்ளியில் படிப்பு. சென்னை சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்றார். அந்தமான் – நிக்கோபார் தீவுகளில் கிழக்கு வங்க அகதிகளைக் குடியேற்றும் துறையில் அதிகாரியாக ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். பிறகு கேரளம் திரும்பி வழக்குரைஞராகத் தொழில் செய்தார்.

மத்திய அரசின் சாகித்ய அகாடமி விருது, சக்தி விருது, கேரள சாகித்ய அகாதமி விருது, திரைப்படமாக எடுக்கப்படும் கதைக்கான கேரள அரசின் திரைப்பட விருது முதலிய பல சிறப்புகள் இவரைச் சேர்ந்திருக்கின்றன. இவரது கதைகளான, 'சிதம்பரம்', 'புருஷார்த்தம்', 'வாஸ்துஹாரா', 'பொந்தன்மாடா', 'சீமத்தம்புரான்' ஆகியவை திரைப்படங்களாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

சிதம்பரம் திரைப்படத்திற்கு ஜனாதிபதியின் தங்கத் தாமரை பரிசு அளிக்கப்பட்டது. மற்ற திரைப்படங்கள் தேசிய, சர்வ தேச அங்கீகாரங்கள் பெற்றிருக்கின்றன. புருஷார்த்தத்திற்கு, கதைக்கும் திரைப்படத்திற்குமான கேரள பிலிம் கிரிட்டிக்ஸ் விருது, இஷ்டதானம் கதைக்கு பி.வி.சிவக்குமார் நினைவு கேளி விருது ஆகியவை கிடைத்திருக்கின்றன.

இந்திய மொழிகளிலும், ஆங்கிலம், ஜெர்மன் மொழிகளிலும் இவரது கதைகள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

தான் பிறந்த,'போர்க்குளம்' கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவராக பதினாறு வருடங்கள் இருந்தார்.'சோவனூர்' தொகுதி பஞ்சாயத்து தலைவராகச் செயல்பட்டார். கேரள சாகித்ய அகாடமியின் செயற்குழு உறுப்பினர், சாகித்ய அகாதமியின் துணைத் தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

அந்த நகரம் அப்படித்தான் வாழ்ந்துகொண்டிருந்தது; கடைசி ஆசையுடன் அங்கே வரும் நோயாளிகளில் பெரும்பாலோர் உணர்விழந்தவர்களாகவோ, வாழ்க்கையிடம் விடைபெற்றவர்களாகவோ, வேதனைகள்கூட உடலைப் பாதிக்காதவிதம் பிரக்ஞையற்றவர்களாகவோதான் இருப்பார்கள். ஆனால் அவர்களுக்குப் பணிவிடைகள் செய்வதற்கும் சந்திப்பதற்கும் வருகின்றவர்களை இலக்கு வைத்து அந்த நகரம் வளர்ந்தது; இன்னும் வளர்கிறது. அந்த நகரத்திடம் விடைபெறும்போது அங்கே வசித்தவர்களுக்கு நினைத்துப் பார்க்க ஒன்றும் இருக்காது. நம்பிக்கையற்ற கொஞ்ச நாட்களின் கெட்ட கனவுகளைத் தவிர.

அவன் மருத்துவமனையின் படிக்கட்டை நோக்கி நடந்தான். மருத்துவமனையின் முன்னால் தெரிந்த மலைத்தொடர் ஏதோ துக்கத்தின் சாம்பல் குவியல்போல ஆகாசம் முட்டிக் கிடக்கிறது. அந்த மலைத்தொடருக்குத்தான் எவ்வளவு ஈர்ப்பு சக்தியிருக்கிறது! ஆனால், இங்கே வருகின்றவர்களில் யாருக்காவது அதைப் பற்றி யோசிப்பதற்கு நேரம் கிடைப்பதுண்டா? ஜீவசக்தி நசித்துப்போன உடலில் உயிரின் துடிப்பு அதிகரிப்பதை கண்ணிமைக்காமல் பார்த்திருக்கும்போது... அதைவிடவும் கவர்ந்திழுக்கக்கூடிய மற்ற ஏதாவது அவர்களுக்கு இருக்கிறதா?

மெதுவாக நடந்தாலும் அவனுக்கு மூச்சுத் திணறியது. ஆனாலும் அவன் அறைக்குத் திரும்பிப் போக விரும்பவில்லை.

மருத்துவர் வெகுநேரம் பரிசோதித்துப் பார்த்தார். நீண்ட நேரம் சிந்தித்துவிட்டுச் சொன்னார்:



"இன்றுவரை நடந்த டயக்னோசிஸ் தவறு. சிகிச்சை தவறு. உங்கள் உடலில் நடத்திய அறுவைச் சிகிச்சை தவறு. அதிகம் சொல்வானேன், உங்கள் உடலில் ஏற்றிய ரத்தம்கூட தவறான ரத்தம்தான்..."

ஒரு நொடிப்பொழுதில் பல்லாண்டுகளின் மாய நம்பிக்கைகள் தகர்ந்து துகள்களாயின. ஆயுர்வேதத்திலிருந்து அலோபதிக்கும் பிறகு ஹோமியோபதிக்கும் பயணம் செய்ததுண்டு. ஒவ்வொரு சிகிச்சை தொடங்கும்போதும் அதன் ஆதரவாளர்கள் கொடுத்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப நம்பிக்கைகள் தோகை விரித்து ஆடியிருக்கின்றன. இன்று மருத்துவர் சொல்கிறார்:

"முயற்சி செய்து பார்க்கலாம்."

இது மட்டும் சொல்லி நிறுத்தியிருந்தார் என்றால் பரவாயில்லை.

"அறுவைச்சிகிச்சை நூறு சதவீதம் வெற்றியடையும். ஆனால், உங்களால் கடுமையான எந்த வேலையும் செய்ய முடியாது. தவறாமல் மருந்துகள் சாப்பிட வேண்டியிருக்கும்..."

மிகவும் வேதனையளிப்பது இந்த வரிகள்தான். சொந்த உடலை ஒரு காட்சிப் பொருள்போலவோ ஒரு கண்ணாடிப் பாத்திரம்போலவோ பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு நொடி ஆயுளையும் கப்பம் கட்டி நிலைநிறுத்த வேண்டும். இப்படிக் கிடைக்கும் ஒரு வாழ்க்கையால் என்ன பயன்?

அவன் சாலையைக் குறுக்காகக் கடந்து கோட்டையை நோக்கி நடந்தான். அந்தப் பழைய கோட்டைக்குப் பொருந்தாத அரசாங்க அலுவலகங்களையும் புதிதாக ஏற்பட்டிருப்பவையையும் அவன் விரும்பவில்லை. பெரிய கோட்டையும் ஆழமான அகழிகளும் ஜலகண்டேஸ்வரரும் இருந்தும் வரலாற்றில் ஒருநாள் இந்தக் கோயில் கொள்ளையடிக்கப்பட்டது. விக்கிரகம் காணாமல்போய்விட்டது. பூஜை தடைப்பட்டுவிட்டது. இந்த உண்மைகளுக்கு கோபுரங்கள் மட்டும் சாட்சியாக நிற்கின்றன.

இவற்றையெல்லாம் பார்த்தும் யோசித்தபடியும் நடக்கும்போது, தான் ஒரு நிரந்தர நோயாளி என்பதை அவன் மறந்தான். கோட்டையின் முன் வாயிலில் அவன் பெருமாளைத் தேடினான். பெருமாள் பனையோலையில் தயாரித்து விற்ற தாமரைப்பூ வாங்கியது நான்கைந்து நாட்களுக்கு முன்புதான். இன்னொன்று வாங்க வேண்டும் என்று பிறகு பிங்கு சொல்லியிருந்தான்.

ஆனால், பெருமாள் அங்கே இல்லை. அவர் ஓலையில் தாமரைப்பூ செய்வதைப் பார்ப்பதற்கு சுவாரஸ்யமாக இருக்கும். பார்வை குறைந்திருந்தாலும் கைவிரல்கள் நடுங்கினாலும், எவ்வளவு ஆர்வமூட்டும் தாமரை இதழ்களை பனையோலையில் முடைகிறார்! அவன் நான்கைந்து நாட்களுக்கு முன் ஒரு தாமரைப்பூ வாங்கியிருந்தான். அதை எடுத்துக்கொண்டு, தங்கியிருக்கும் விடுதிக்குச் சென்றான். மாடிப்படி ஏறுவதற்கு திணறல் அனுமதிக்கவில்லை. வெளியே சோபாவில் சாய்ந்து கிடந்தான். அப்போதுதான் ஒரு சிறுவன் தயங்கித் தயங்கி அங்கே நின்றுகொண்டிருந்தான். சற்று மாறுகண் என்றாலும் சிரிக்கும்போது முகம் களையாக இருந்தது. அவன் கையிலிருந்த தாமரைப்பூவையே பார்த்துக்கொண்டிருந்தான். மீண்டும் சிரித்தான்.

கடைசியில் இலக்கணப் பிழையான ஆங்கிலத்தில் கேட்டான்:

"இந்தப் பூவை எனக்குத் தருவீர்களா?"

பையன் ஆங்கிலம் உச்சரித்த தன்மையைக் கொண்டு பெங்காலியோ என்று சந்தேகம் ஏற்பட்டது.

அதைத் தீர்த்துக்கொள்ள அவன் பெங்காலியில் கேட்டான்:

"உன் பெயர்?"

"பிங்கு."

"நீ எத்தனாவது வகுப்பு படிக்கிறாய்?"

"நான்காம் வகுப்பில். சென்ற வருடம் பெயிலாகிவிட்டேன்."

"நீ படித்துவிட்டு யாராகப்போகிறாய்? டாக்டராகவா, எஞ்சினியராகவா?"

"இல்லை. பாடகனாக வேண்டும்."

"அப்படியென்றால் நீ ஒரு பாட்டுப் பாடு. இந்தப் பூவைத் தருகிறேன்."

சுருதியும் தாளமும் இல்லாமல் அவன் இரண்டு மூன்று வரிகள் பாடினான்.

"இனி பூவைத் தருவீர்களா?"

"அது இருக்கட்டும், நீ எதற்காக இங்கே வந்திருக்கிறாய்?"

"சும்மா ஊர் சுற்றிக் காட்ட அம்மாவும் அப்பாவும் இங்கே அழைத்து வந்திருக்கிறார்கள்."

"என்றைக்குத் திரும்பிப் போவீர்கள்?"

தெரியாது எனும் பொருளில் அவன் உதட்டைப் பிதுக்கினான்.

"இன்னும் பூவைத் தரவில்லையே. பாட்டுப் பாடினால் பூ தருவேன் என்று சொன்னீர்களே?"

பின்னும் அவன் அசையாதிருப்பதைப் பார்த்தபோது, சிறுவன் பூவைப் பறித்துக்கொண்டு ஓடி மறைந்தான். அவனுக்குக் கோபம் வரவில்லை. ஒரு தமாஷாக மட்டுமே தோன்றியது. மெதுவாக எழுந்தான். தலை சுற்றியது. மீண்டும் அங்கேயே அமர்ந்தான். அப்போதுதான் ஒரு பெங்காலிப் பெண்மணி பிங்குவின் கையைப் பிடித்துக்கொண்டு வந்தாள். வட்ட முகமும் புஷ்டியான உடலுமுடைய அவள் முகத்தில் கடுங்கோபம் தெரிந்தது. எடுத்த எடுப்பிலேயே ஆங்கிலத்தில் கேட்டாள்:

**"அறுவைச் சிகிச்சை நூறு சதவீதம் வெற்றியடையும். ஆனால், உங்களால் கடுமையான எந்த வேலையும் செய்ய முடியாது. தவறாமல் மருந்துகள் சாப்பிட வேண்டியிருக்கும்..."**

"இதை நீங்களாக இவனுக்குக் கொடுத்தீர்களா. அல்லது இவன் கேட்டு வாங்கினானா?"

அவனுக்குப் பதில் சொல்வது சிரமமாக இருந்தது. இது இரண்டுமே இல்லையே. அவன் பிடுங்கிக்கொண்டு ஓடியதல்லவா. பிறகு அவன் மெதுவாகச் சொன்னான்:

"இதெல்லாம் ஒரு சிறிய விஷயம்தானே?"

பெங்காலியில்தான் அதைச் சொன்னான். பெங்காலியில் சொல்லப்பட்ட பதில் ஒருக்கால் அவள் கோபத்தைக் கொஞ்சம் குறைத்திருக்கும்:

"இல்லை. இது எனக்குத் தெரிய வேண்டும்."

"நான்தான் கொடுத்தேன்."

"அதைத் திருப்பிக் கொடு."

சிறுவன், ஓலையால் செய்யப்பட்ட தாமரைப்பூவை அவன் அமர்ந்திருக்கும் சோபாவில் வைத்துவிட்டுச் சென்றான். போகும்போது அவள் பையனிடம் மிகவும் சாந்தமாகச் சொல்வது கேட்டது:

"தெரியாதவர்கள் தருவது ஒன்றையும் வாங்கக் கூடாது என்று நான் எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்!"

அவன் தன் அறையை நோக்கி நடந்தான். அறை அவனது சிறை. அந்த சிறையைச் சுற்றிலும் காவல் நிற்பது நிச்சயமற்ற தன்மை மட்டும்தான். ஆயாசத்தால் மெத்தையில் சற்று கிறங்கிக் கிடக்க முடியும். ஆனால், ஆழ்ந்த தூக்கம் என்பது இன்று ஒரு கனவு மட்டுமே.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு கதவில் யாரோ தட்டுவது கேட்டது. எழுந்து கதவைத் திறந்தான்.

பகல்புரி லுங்கியும் கைவைத்த பனியனும் தடித்த வில்லைகளுமுடைய கண்ணாடியும் அணிந்து ஒரு மனிதர் வெளியே நிற்கிறார். அவர் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார்:

"என் பெயர் சதீஷ் ராஹு. நான் பிங்குவின் அப்பா."

"உட்காருங்கள், ராஹு பாபு."

“நீங்கள் என் பையனுக்கு ஓலைப் பூ கொடுத்தீர்களே, அது எங்கே கிடைக்கும்?”

“இதோ, என்னிடமிருக்கிறதே?”

“இது வேண்டாம். வாங்குவதற்கு எங்கே கிடைக்கும் என்று சொன்னால் போதும்.”

“இங்கே ஒரு கோட்டை இருப்பது தெரியும்தானே. அதன் உள்ளே போகிற இடத்தில் வயதானவர் ஒருவர் உட்கார்ந்து செய்துகொண்டிருப்பார்...”

ராஹு பாபு வெளியே சென்றார்.

சற்று நேரத்துக்குப் பிறகு கதவு மீண்டும் திறந்தது. வெளியிலிருந்த வெளிச்சத்தின் ஒரு துண்டு அறை இருட்டுக்குள் இறங்கி வந்தது... உடன் ராஹு பாபுவும்.

“நீங்கள் சொன்ன இடத்தில் அந்த பூ செய்கிற ஆள் இல்லையே...”

“இதை எடுத்துக்கொள்ளுங்கள்.” அவன் எழுந்து மேசையிலிருந்த அந்தப் பூவை எடுத்து ராஹு பாபுவிடம் கொடுத்தான்.

ராஹு பாபு கேட்டார்:

“என் மனைவியும் மகனும் சொல்கிறார்கள், நீங்கள் நன்றாக பெங்காலி பேசுகிறீர்களாமே, எப்படிக் கற்றுக்கொண்டீர்கள்?”

“நான் கிழக்கு பெங்காலிலிருந்து வந்த அகதிகளை குடியிருத்தி வசிக்கச் செய்யும் துறையில் நீண்ட காலம் வேலை செய்திருக்கிறேன்.”

இதைக் கேட்டதும் ராஹு பாபுவின் முகத்தில் ஏற்பட்ட மாற்றம் அவனுக்கு வியப்பளித்தது.

“நான் கிழக்கு பெங்கால் அகதி. மைமன்ஸிங் ஜில்லாக்காரன். இப்போது ட்வண்ட்டி ஃபோர் பர்காநாஸில் வசிக்கிறேன்.”

“இங்கே ஊர் சுற்றிப் பார்க்க வந்திருப்பீர்கள்...?”

“யார் சொன்னது?”

“பிங்கு...”

“அவனிடம் அவ்வளவுதானே சொல்ல முடியும்... அவனுக்கு ஹார்ட்டுக்குப் பிரச்சினை. ஒரு மேஜர் ஆபரேஷன் செய்யவேண்டி வரும். அதற்காகத்தான் வந்தோம்...”

பிங்குவைப் பார்த்தபோது அப்படியொன்றும் தெரியவில்லையே - அவன் மனதில் சொல்லிக்கொண்டான்.

“பிங்குவுக்கு மூத்தவன் ஒரு பையன் இருந்தான். அவனுக்கும் இந்தப் பிரச்சினை இருந்தது. அன்றைக்கு அதற்கு தேவையானபடி சிகிச்சையளிக்க முடியவில்லை. எங்களுக்குப் பூர்விகமாக இருந்தவற்றையெல்லாம் மைமன்ஸிங் ஜில்லாவில் விட்டு வந்த கதையை நான் சொல்ல வேண்டியதில்லையே. மேற்கு பெங்காலுக்கு வந்த பிறகு ஆகமொத்தம் ஒரு வீட்டை மட்டும்தான் கட்ட முடிந்தது. இன்று அதுவும் போய்விட்டது. ஆயினும் என் மகனின் நோயைக் குணப்படுத்திவிடலாம் என்ற உறுதியுடன் இருக்கிறேன். இதைவிடவும் ஒரு செல்வம் வேறு எதுவும் இருக்கிறதா?”

ராஹு பாபு எழுந்து அவனிடம் கைகுலுக்கிவிட்டுச் சென்றார்.

மறுநாள் காலையில் அறைக்கு வெளியே முழக்கமிடும் சத்தம் கேட்டபோதுதான் அவன் எழுந்தான்.

பிங்கு முஷ்டியை மடக்கிக்கொண்டு தனி நபர் ஊர்வலமாக வருகிறான்.

“செல்பொனா செல்பொனா... அமர் தேஷே பங்ளாதேஷே கோவிலாட்டி செல்பொனா...”

அவனுக்குப் பக்கத்தில் வந்தபோது பிங்கு சொன்னான்:

“அங்கிள்... வாட்சைப் பார்த்துச் சொல்லுங்கள், என் ஊர்வலம் ஒரு பாயிண்ட்டைக் கடப்பதற்கு எத்தனை நிமிடங்கள் ஆனது?”

மற்றொரு நாள் பிங்கு கேட்டான்:

“அங்கிள், அன்றைக்கு எனக்குத் தந்த தாமரைப்பூ இருக்கிறதல்லவா, அதுபோன்று இன்னொன்று கொடுங்கள்...”

“அதை வீணாக்கிவிட்டாயா?”

“அது நன்றாகத்தான் இருக்கிறது. வேறு ஒன்று வேண்டும். திரும்பிச் செல்லும்போது என் நண்பனுக்குக் கொடுப்பதற்காக.”

“கொண்டு வந்து தருகிறேன்.” அவன் உறுதியாகச் சொன்னான். இரண்டு நாட்களுக்குப் பிறகு பிங்குவுக்கு வார்டில் அனுமதி கிடைத்தது.

அவனுக்கு இன்னும் படுக்கை கிடைக்கவில்லை. தினமும் காலையில் சென்று விசாரிப்பான்.

“நாளைக்கு வாருங்கள். நாங்கள் நினைத்த பேஷண்ட் இன்னும் போகவில்லை...”

இந்த பதிலுக்கு ஏற்றபடி காரியங்கள் நடந்துகொண்டிருந்தன. அறைக்குச் சென்றால் மிகவும் துயரத்துக்கு ஆட்பட்டான். மருத்துவ அறிவியலின் தவறால் பதர்போலப் பறந்துபோன தன் உடலைக் குறித்து அவன் அதிகம் சிந்திப்பான். அதனால் திணறலைப் பொருட்படுத்தாமல் நடக்கிறான்... நகரத்திலிருந்து திரும்பி கோட்டைக்குச் சென்றான்... அங்கே பெருமாளைக் காணவில்லை. அவர் இருந்திருந்தால் பிங்குவின் நண்பனுக்கு ஒரு தாமரைப்பூ வாங்கியிருக்கலாம்.

அன்றும் திணறல் அதிகமானபோது ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் ஏறி அறைக்குத் திரும்பினான்... விடுதியின் வாயிற் படிகளில் ஏறுவதற்கு மிகவும் சிரமப்பட்டான்... வெளி அறையிலிருந்து பிங்குவின் அப்பா யாருக்கோ போன் செய்து உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்தார். கவனிக்க முயன்றதால் அல்ல, சத்தம் அவ்வளவு உச்சத்தில் ஒலிப்பதால் கேட்க நேர்ந்தது.

“கொபர் கூப் கராபானெ... பிங்குமோரெகச்செ...”

பிறகு மறுபுறத்திலிருந்து உதிர்கிற வார்த்தைகளைக் கேட்காமல் ராஹு பாபு போனைக் கீழே வைத்துவிட்டு மேசையில் முகம் வைத்துக் குமுறி அழுதார்.

•

கட்டுரை | சு.அழகேஸ்வரன்

# ஆப்கனில் பெண்கள் படும் துயரம்
## சர்வதேச சமூகம் தலையிட வேண்டும்



கடந்த 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை ஆப்கானிஸ்தானை தலிபான்கள் ஆட்சி செய்து வந்தார்கள். அப்பொழுது பெண்கள் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்காமல் அவர்களது உரிமைகளைப் பறித்ததுடன், கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தார்கள். பொதுவெளிகளில் செயல்பட அனுமதிக்கவில்லை. ஆனால் 2001 அமெரிக்காவில் இரட்டை கோபுரம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆப்கானில் செயல்பட்டுவந்த அல்கொய்தா மற்றும் தலிபான்களை ஒழித்துக் கட்டும் நோக்கில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் அந்நாட்டிற்கு அனுப்பப்பட்டன. தலிபான்களுக்கு எதிராக நடத்தப்பட்ட போருக்குப் பின்னர் ஆப்கானில் அமெரிக்காவின் பொம்மை அரசாங்கம் நிறுவப்பட்டது. கடைசியாக, அஷ்ரப் கஹானி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. ஆனால் இந்த தலிபான்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் பெண்களைஒடுக்குமுறைக்கு உள்ளாக்கி வந்தார்கள். பெண்கள் பொது வெளியில் வருவதை அவர்கள் அனுமதிக்கவில்லை. இவர்களின் அச்சுறுத்தலையும் மீறி பொது வெளிக்கு வரும் பெண்களை இவர்கள் சுட்டுத்தள்ளத் தயங்குவதில்லை. எனவே இதற்குப் பயந்து பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வரத் தயங்கக் கூடிய சூழ்நிலைதான் ஆப்கானிஸ்தானில் நிலவியது. ஆனால் இந்த அச்சுறுத்தலையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு செயல்பட்ட பெண் ஆளுமைகள் இருக்கவே செய்தார்கள்.

இவர்களது தீரமிக்க செயல்பாடுகளைக் கவனப்படுத்தும் நாம், இதற்கான புறச்சூழலை உருவாக்கியதில் முக்கியப் பங்காற்றிய இந்தியா உள்ளிட்ட மத்திய ஆசிய நாடுகளையும் பாராட்டித்தான் ஆகவேண்டும். ஆப்கானிஸ்தானத்தில் பெண்கள் பொது வாழ்க்கைக்கு வருவதை ஊக்குவிக்கும் நேரத்தில் இந்நாடுகள் கூட்டாக பல முன்முயற்சிகளை மேற்கொண்டன. ஆப்கான் பெண்களின் நிலையை மேப்படுத்துவது குறித்து ஆலோசிப்பதற்காக கடந்த 2019 ஜனவரி 12-ஆம் தேதியன்று இந்த நாடுகளைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்ற முதலாவது கூட்டம் உஸ்பெகிஸ்தானில் உள்ள சமர்கந்துவில் நடைபெற்றது. அதில் இந்தியா, ஆப்கானிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், கிர்கிஸ்தான் குடியரசு மற்றும் உஸ்பெகிஸ்தான் நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்றார்கள். இந்தியாவின் சார்பில் சுஷ்மா சுவராஜ் கலந்துகொண்டார். இக்கூட்டத்தில் ஆப்கானிஸ்தான் முன்னெடுக்கவுள்ள அமைதிப் பேச்சுவார்த்தைகளிலும், நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மறுசீரமைப்புப் பணிகளிலும் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதை ஆப்கான் கவனத்தில் எடுத்துக்கொண்டு செயல்பட்டது. இதன் விளைவாகபொது வெளிக்குவந்தபெண்களை தலிபான்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கிய பின்னரும், தொடர்ந்து செயல்பட்ட கமார் குல், ஷாபர் ஷாஹக், பௌஷியா கூஃபி ஆகிய மூன்று முக்கிய ஆளுமைகளை நினைவுகூர வேண்டியுள்ளது.

### கமார் குல்

ஆப்கானிஸ்தானில் கோர் மாகாணத்தில் உள்ளது டய்வரா மாவட்டம். இங்குள்ள கிராம மக்கள் அரசுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் தகவல் சொல்லிகளாக இருப்பதாக தலிபான் தீவிரவாதிகள் சந்தேகப்பட்டார்கள். இதன் காரணமாக இந்த கிராமத்தில் வசிக்கும் 15 வயது சிறுமி கமார் குல் வீட்டிற்குள் தீவிரவாதிகள் புகுந்து குல்லின் தந்தையையும், தாயையும் சுட்டுக் கொன்றார்கள். அதிர்ச்சியில் அலறிய குல், வீட்டில் இருந்த துப்பாக்கியை எடுத்து வந்து தலிபான் தீவிரவாதிகளைச் சரமாரியாகச் சுட்டார். இதில் 2 தீவிரவாதிகள் உயிரிழந்தனர். மற்றவர்கள் ஓடிவிட்டார்கள். முன்னதாக குல்லின் தந்தை ஏ.கே.47 துப்பாக்கியை வைத்திருந்தார். அதை எப்படி சுடுவது என்று குல்லுவுக்கும் கற்றுத்தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தலிபான்கள் மீது துணிச்சலாகத் தாக்குதல் நடத்திய கமார் குல்லுக்கு ஆப்கானிஸ்தான் மட்டுமின்றி வெளிநாடுகளிலிருந்தும் ஆதரவுகள் குவிந்தன. இவர் ‘தலிபான்களுடன் மீண்டும் சண்டையிடத் தயார்’ என்று ஆவேசமாக ஊடகங்களில் பேசி வந்தார்.

### ஷாபர் ஷாஹக்

ஆப்கானிஸ்தானின் முதல் பெண் திரைப்பட இயக்குநரும், நடிகையுமான இவர் தலிபான்களின் அச்சுறுத்தலையும் மீறி சினிமா மற்றும் ஆவணப்படங்களையும்இயக்கி வந்தார். தலிபான்களின் பிற்போக்குத்தனமான கொள்கைகளையும் தொடர்ந்து விமர்சித்து வந்தார். இவர் 2020 ஆகஸ்ட் இறுதி வாரத்தில் தனது குழந்தை மற்றும் மெய்காப்பாளர்களுடன் பயணம் செய்து கொண்டிருந்த போது தலிபான்கள் இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். 20 மணிநேர கோமா நிலைக்குப் பின்னர் அவருக்கு நினைவு திரும்பியது. இவர் பத்தாண்டுகாலம் காவல்துறையில் பணியாற்றியநிலையில் சிறப்பு காவல்படையில் துணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

### பௌஷியா கூஃபி

ஏதிலியரான பௌஷியா கூஃபி இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயாராவார். இவரது குடும்பத்தில் பள்ளிக் கல்வி பயின்ற முதல் பெண் இவரே. தொடர்ந்து மருத்துவப் படிப்புப் படித்துக் கொண்டிருந்தபோது தலிபான்களின் தலையீட்டின் காரணமாக இவரது படிப்பு தடைபட்டது. 1996-2001 காலகட்டத்தில் தலிபான்களின் ஆட்சிக் காலத்தில் இவருடைய தந்தையும், தாயாரும் தலிபான்களால் கொல்லப்பட்டார்கள். இவர் கணவரை பலமுறை சிறையில் அடைத்ததால் நோய்வாய்ப்பட்டு அவர் இறந்தார். 2001 ஆப்கானிஸ்தானத்தில் அமெரிக்க தலையீட்டின் பின்னர் அரசியலுக்கு வந்த இவர் 2005-ஆம் ஆண்டு முதன்முதலில் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு துணை சபாநாயகராகவும் பதவி வகித்தார். மனித உரிமை ஆர்வலரான இவர் பெண்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறைகளைத் தடுப்பதற்கான சட்டங்களை இயற்றுவதற்கு காரணமாக அமைந்தார். அத்துடன் நாட்டின் மறுசீரமைப்புப் பணிகளில் பெண்களின் பங்கேற்பையும் உத்தரவாதப்படுத்தினார். தலிபான்கள் 2010-இல் ஒருமுறையும், 2020 ஆகஸ்டு 12 ஆம் தேதியன்று இரண்டாவது முறையும் இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இந்த சம்பவங்களிலிருந்து இவர் உயிர் தப்பினார். 2019-ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தான் அரசிற்கும், தலிபான்களுக்கும் இடையே பலமுறை நடைபெற்ற அதிகாரபூர்வமற்ற பேச்சுவார்த்தைகளில் இவர் பங்கேற்றார். இந்த பேச்சுவார்த்தைகளே, தலிபான்களுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே அமைதி ஒப்பந்தம் உருவாவதற்கு வழி வகுத்தது. 2020 பிப்ரவரி, 29-இல் கத்தார் நாட்டின் தோகாவில் கையெழுத்தான இந்த ஒப்பந்தம் குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் பௌஷியா உள்ளிட்ட நான்கு பெண் பிரதிநிதிகள் பங்கேற்றார்கள்.

எனவே, பௌஷியாவிற்கு 2020 அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்ற விவாதங்கள் எழுந்தன. கடந்த அக்டோபர்-30இல் நோபல் பரிசு அறிவிப்பதற்கு ஒரு வாரத்திற்கும் முன்னர் நார்வேயைச் சேர்ந்த 20 அரசு சாரா அமைப்புகள் நோபல் பரிசு பெறுவதற்குத் தகுதியான 5 நபர்களின் பட்டியலை வெளியிட்டனர். இதில் பௌஷியாவின் பெயரும் இடம்பெற்றிருந்தது. ஆனால் பௌஷியாவிற்கு நோபல் பரிசு வழங்கப்படாததால் ஆப்கானிஸ்தானத்தில் தலிபான்களின் வன்முறைகளை எதிர் கொண்டு தொடர்ந்து செயல்பட்டு வரும் பெண் ஆளுமைகள் சர்வதேச அளவில் கவனம் பெறுவதற்கான வாய்ப்புகள் தவறவிடப்பட்டன. அதற்குப் பின்னர் ஜனவரி 2021 இல் உச்சநீதிமன்றத்தின் இரண்டு பெண் நீதிபதிகளும், மார்ச் 3 ஆம் தேதியன்று கிழக்கு ஆப்கானில் வானொலி நிலையத்தில் பணியாற்றி வந்த மூன்று பெண் ஊழியர்களும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதன் காரணமாக கடந்த ஆறு ஆண்டுகளில் பத்திரிகைத் துறையில் பணியாற்றிவந்த 20 சதவீதம் பெண்கள் பணியிலிருந்து விலகினார்கள் அல்லது பணியை இழந்தார்கள் என்று ஊடகக் கண்காணிப்புக்குழு தெரிவித்தது. மேலும் ஆப்கான் பத்திரிக்கையாளர் பாதுகாப்புக் குழுவானது 300 க்கும் மேற்பட்ட பெண் பத்திரிகையாளர்கள் இந்தத் துறையை விட்டு விலகினார்கள் என்று புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் நாட்டில் ஜனாதிபதி அஷ்ரப் கஹானி ஆட்சியை எதிர்த்து தலிபான்கள் பல ஆண்டுகளாக நடத்தி வந்த போருக்குப் பின்னர் கடந்த 2201, ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று அந்நாட்டை தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டதாக அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து ஆகஸ்ட் 27ஆம் தேதியன்று தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் ஸபியுல்லா முஜாஹித் முதல்முறையாக வெளிப்படையாகத் தோன்றி தலிபான் அரசின் கொள்கைகள் குறித்து முதல் அறிவிப்பை வெளியிட்டார். அதில் ஷரியத் சட்டத்திற்கு உட்பட்டு பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்படும் என்றும், முன்னதாக மேற்கத்திய மற்றும் ஆப்கான் அரசுக்கு ஆதரவாக செயல்படுபவர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும் தெரிவித்தார்.

பின்னர் தலிபான்களின் கலாச்சார ஆணையத்தின் உறுப்பினர் என முல்லா சமன் கனி வெளியிட்ட அறிக்கையில், பெண்கள் அச்சமின்றி பணிக்குத் திரும்பலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து ராணுவ ஆணையத்தின் தலைவர் முல்லா யாகூப்பின் பதிவு செய்யப்பட்ட உரை காணொளிக் காட்சியாக வெளியிடப்பட்டது. அதில் காபூலில் யாருடைய வீட்டிற்குள்ளும் தலிபான்கள் நுழைய மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்கண்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்ட ஒரு சில தினங்களில் ஆப்கானிஸ்தானின் ஹீரட் மாகாணத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் தலிபான் பிரதிநிதி முல்லா ஃபாரிட் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குப்பின், கல்வி நிறுவனங்களில் மாணவிகளும், மாணவர்களும் இணைந்து பயில தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தலிபான்கள் ஆட்சியைக்

கைப்பற்றிய பின்னர் வெளியிடப்பட்ட முதலாவது தடை உத்தரவாகும்.

இந்நிலையில் ஆப்கானிலிருந்து சில பெண் ஆளுமைகள் நாட்டை விட்டு வெளியேறினர். அந்த வகையில் ஆப்கான் தொலைக்காட்சியில் பணியாற்றிவந்த பேஸ்தா அர்ஹானென்ட் தலிபான்கள் மேலுள்ள அச்சத்தின் காரணமாக, தான் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாகத் தெரிவித்தார். மேலும் ஆப்கானிஸ்தான் காந்தஹாரில் பிறந்து 1994 ஆம் ஆண்டில் பிரிட்டனில் குடியேறி பிரிட்டன் ஆப்கான்-பெண்கள் அமைப்பின் தலைவராக செயல்பட்டு வரும் ஜர்காணா ராஸா ஆப்கான் பெண்களுடன் தான் தொடர்பில் இருப்பதாகவும், அவர்களில் பலர் நாட்டை விட்டு வெளியேற விரும்புவதாகவும் பேட்டியொன்றில் கூறியுள்ளார். மேலும் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர் ஆப்கான் சினிமா இயக்குனர் ஷஹாரா கரிமி சமூக வலைத்தளத்தில் பெண்கள் மீது தலிபான்கள் நடத்தி வரும் தாக்குதலிலிருந்து ஆப்கான் பெண்களைப் பாதுகாக்க சர்வதேச சமுதாயம் முன்வரவேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும் ஆப்கான் பெண் நீதிபதிகளால் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை தலிபான்கள் விடுவித்தனர். அவர்கள் பெண் நீதிபதிகளைக் கொலை செய்வதற்கான திட்டம் தீட்டியதாக செய்திகள் வெளியானது. (இதுகுறித்து பெண் நீதிபதி ஒருவர் கூறியபோது என்னால் தண்டிக்கப்பட்ட 4 பேர் என்னைத் தேடி எனது வீட்டிற்கு வந்தார்கள். நான் தலைமறைவாகி விட்டேன் என்று தெரிவித்தார்.) இதன் காரணமாக பெண் நீதிபதிகள் பலர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று விட்டனர். 250க்கும் மேற்பட்ட பெண் நீதிபதிகள் அச்சத்துடனும் தலைமறைவாகவும் இருக்கிறார்கள். இதுகுறித்து, ஆப்கானிஸ்தான் நீதிபதிகளுக்குப் பயிற்சி அளித்து வந்த அமெரிக்க நீதிபதி டேட்லிகா கூறும்போது, “ஆப்கானிஸ்தான் பெண் நீதிபதிகளின் நிலைமை பரிதாபமாக உள்ளது. அவர்களைக் காப்பாற்றுவது தமது கடமை”என்றுதெரிவித்தார்.

அதேபோல, காபூலில் உள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்த முஷ்கா டஸ்டாகர் கடந்த 20 ஆண்டு காலமாக உருவாக்கப்பட்ட ஆரோக்கியமான சூழல் தற்போது பறிபோய் விட்டது என்று தனது டுவிட்டரில் பதிவு செய்தார். ஆப்கான் ரக்கன் சான் மீடியா நடத்தி அதில் ஆப்கான் பெண்களின் நிலை குறித்து தொடர்ந்து செய்திகளை வெளியிட்டு வந்த ஜகாரா யோயா தனது நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது குறித்தும் பெண் பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்படும் சூழல் நிலவுவதாகவும் தெரிவித்தார். ஆப்கான் ஊடகத்துறையச் சேர்ந்த பெண் ஆளுமைகளின் கருத்துக்களைத் தொடர்ந்து தி கார்டியன் நாளிதழ் செய்தி வெளியிட்டு வந்தது.

இச்சூழலில் ஆப்கான் ஹீரட் நகரைச் சேர்ந்தபெண்கள் உரிமைகள் பறிக்கப்பட்டதற்கு எதிராகவும், தலிபான்கள் அமைக்க உள்ள புதிய அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கக் கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். மேலும் மேற்கு காபூலில் ஆயிரக்கணக்கான பெண்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். இந்தப் போராட்டங்கள் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற எட்டிலாட் ரோஸ் நாளிதழின் செய்தியாளர்களைத் தலிபான்கள் கடுமையாகத் தாக்கி, அதன் காட்சிப் பதிவுகளையும் வெளியிட்டனர்.

அதைத்தொடர்ந்து, செப்டம்பர் 7 ஆம் தேதியன்று 38 அமைச்சர்களை உள்ளடக்கிய இடைக்கால அமைச்சரவையை அமைத்துள்ளதாகத் தலிபான்கள் அறிவித்தார்கள். இவர்களில் 14 பேர் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலால் பயங்கரவாதிகளாக அறிவிக்கப்பட்டு கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களாவார்கள். ஆனால் இப்போதும் கூட பெண்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. இதைத்தொடர்ந்து தலிபான்களின் கலாச்சார ஆணையத்தின் உதவித் தலைவர் அஹமத்துல்லா வாசிக் ஆப்கான் அரசின் விளையாட்டுக் கொள்கையை அறிவித்தார். மேலும் அவர் பேசும் போது, “விளையாட்டுகளில் பெண்கள் ஈடுபடுவது அவசியம் இல்லை. பெண்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதால் அவர்களின் முகம் மற்றும் உடல் முழுவதுமாக மூடமுடியாத சூழல் ஏற்படும். இது ஊடகங்களின் காலம். பெண்கள் விளையாட்டுகளில் பங்கேற்றால் அதுகுறித்து புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் எடுக்கப்படும். இதை ஏற்கமுடியாது” என்று தெரிவித்தார்.

**அ**டுத்ததாக, முஸ்லிம் எமிரேட் அரசின் கல்வி நிறுவனங்கள் குறித்து கொள்கை ஆவணம் வெளியிடப்பட்டது. அதில் அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் தங்களது முகம் மற்றும் உடல் முழுவதும் மறைக்கும் வகையிலான நிஹாப் ஆடைகளை அணிந்துதான் கல்வி நிலையங்களுக்குச் செல்ல வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த உத்தரவில் மாணவர்களும், மாணவிகளும் தனித்தனியாக அமர வைத்துதான் கல்வி கற்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஆப்கான் பெண்கள் நிஹாப் அணிவதில்லை. முடியை வெளிப்படுத்தும் தளர்வான சிஃபான் தலைக்கவசத்தை அணிகிறோம் என்று சொல்லி, வண்ண உடைகளை உடுத்தி புகைப்படங்களைத் தத்தமது ட்விட்டரில் பெண்கள்வெளியிட்டனர். பின்னர் இது பெரும் இயக்கமாக மாறியது.

இதைத்தொடர்ந்து, ஆப்கானில் செயல்பட்டுவந்த பெண்கள் விவகாரங்கள் அமைச்சகத்தையும், பெண்களுக்கு இசைப்பயிற்சி அளித்துவந்த ஆப்கானித்தான் தேசிய இசை நிறுவனத்தை தலிபான்கள் மூடிவிட்டார்கள். மேலும் காபூல் நகரத்தில் பணியாற்றி வந்த ஊழியர்கள் அலுவலகங்களுக்கு வராமல் வீட்டிலேயே தங்கியிருக்குமாறு தலிபான்கள் கேட்டுக் கொண்டார்கள். இதையொட்டி காபூலின் தற்காலிக துணைமேயர் அஹமத்துல்லா நமோனி பேசும்போது, அடுத்த உத்தரவு வரும் வரை பெண் ஊழியர்கள்

அலுவலகத்திற்கு வரவேண்டாம் என்று கூறினார். பெண்கள் பணிபுரிய வேண்டிய தொழில்களான, வடிவமைப்பு, பொறியியல் துறை மற்றும் பெண்களுக்கான பொது கழிப்பிடங்களை சுத்தம் செய்யும் பணிகளில் மட்டுமே பெண்கள் பணிக்கு அமர்த்தப்படுவார்கள். பெண்கள் பணிபுரிந்த இதர வேலைகளில் ஆண்கள் பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

மேலும், செப்டம்பர் 21 ஆம் தேதியன்று தனது அமைச்சரவையை விரிவு படுத்தினார்கள். அதிலும் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப் படவில்லை. தலிபான்களின் செய்தித்தொடர்பாளர் ஸபியுள்ள முஜாஹித் பேசும்போது பெண்களுக்கு பிரதிநிதித்துவம் அளிப்பது சம்பந்தமாக பின்னர் தெரிவிக்கப்படும் என்றார். இதைத்தொடர்ந்து பெண்கள் கால்பந்து அணியைச் சேர்ந்த வீரர்கள் ஆப்கானில் டுகான் எல்லைப்பகுதி வழியாக பாகிஸ்தானுக்கு இடம் பெயர்ந்தார்கள். ஆனால் மகளிர் தேசிய கால்பந்தாட்ட அணியில் விளையாடி வந்த மஞ்சுவின் ஷேக்கிமி காபூலில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதை உறுதிப்படுத்திய அந்த அணியின் பயிற்சியாளர் சரியா அப்சல் பேசும்போது, ஆப்கானில் கால்பந்தாட்டம் உள்ளிட்ட தடகள வீரர்களின் வீடுகளுக்குச் சென்று தலிபான்கள் மிரட்டி வருவதாகவும் இதனால் விளையாட்டு வீரர்கள் கடும் அச்சத்தில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் நான்கு பெண்களின் இறந்த உடல்கள் மஷார்-இ-ஷெரீஃப் நகரில் கண்டெடுக்கப்பட்டதாக ஆப்கான் முஸ்லிம் எமிரேட் அரசின் செய்தித் தொடர்பாளர் குவாரி சையத் கோஷ்டி நவம்பர் 6 அன்று தெரிவித்தார். அந்த நால்வரில் ஒருவர் பெண் உரிமை செயல்பாட்டாளராவார். முன்னதாக அந்த நால்வரும் விமான நிலையத்திற்குச் சென்று வெளிநாட்டுக்குச் செல்வதற்கு திட்டமிட்டிருந்த நிலையில் “வெளிநாடு செல்ல தாங்கள் உதவுவதாக” ஏமாற்றி அழைக்கப்பட்டு கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

**ஏ**ன்? உயிர்காக்கும் பணிகளில் கூட பெண்கள் செயல்பட அனுமதிக்கப்படவில்லை. ஆப்கானிஸ்தானத்தில் தொண்டு நிறுவனங்களில் கள உதவியாளர்களாக பெண்கள் செயல்படவும், உயிருக்குப் போராடும் மக்களைக் காக்கும் பணியில் பெண்கள் ஈடுபடவும் தலிபான்கள் தடை விதித்துள்ளதாக டோலோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இது குறித்து மனித உரிமை கண்காணிப்பாளர் ஷீதர் பால் கூறுகையில் “ஆப்கானில் குறிப்பாக பெண்கள், குழந்தைகளின் உயிர்காக்கும் சேவைகள் மற்றும் அடிப்படை உதவிகளைச் செய்வதற்கு பெண்களைக் களப்பணியாளர்களாக, கள உதவியாளர்களாக பயன்படுத்த தலிபான்கள் தடை விதித்துள்ளார்கள். எனவே மனிதநேய உதவிகளைக் கூட பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் வழங்க முடியாத நிலையில்தான் இருக்கிறோம். ஆப்கானில் உள்ள 34 மாகாணங்களில் 3 மாகாணங்களில் மட்டுமே பெண்களைக் களப்பணியாளர்களாக பணியாற்ற தலிபான்கள் அனுமதித்துள்ளார்கள்.

இதைத்தொடர்ந்து சமீபத்தில் ஆப்கான் கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ள உத்தரவில் 6 முதல் 12 வயதுள்ள மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய விவரங்களின்படி மேல்நிலைப் பள்ளிகளில் பெண்கள் பயில விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்கிறது. மேலும் பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கை குறைந்துள்ளதாக பெண்கள் மண்டல நெட்வொர்க் அமைப்பின் இந்திய ஒருங்கிணைப்பாளரான அகன்ஷா கூஃல்கர் தெரிவிக்கிறார். மேலும் கடந்த டிசம்பர் 3ஆம் தேதியன்று தலிபான்கள் பெண்கள் உரிமைகள் குறித்த பிரத்தியேக உத்தரவை வெளியிட்டுள்ளார்கள்.

இந்த உத்தரவில் பெண்களை நிர்ப்பந்தப்படுத்தி திருமணம் செய்யக்கூடாது என்றும் ஏதிலியர்கள் தங்களது கணவன்மார் சொத்தில் பங்கு பெற உரிமை உள்ளவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்புக்குரியது என்றாலும் பெண்களுக்கான திருமண வயது வரம்பு என்ன? என்பது குறித்த தெளிவான வரையறையை வழங்கவில்லை. எனவே ஆப்கானில் பெருகிவரும் குழந்தைத் திருமணங்களை கட்டுப்படுத்த இந்த உத்தரவு பயன்படாது. மேலும் 2021 நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட யுனிசெப் ஆய்வின்படி, 15 முதல் 49 வயதுக்குட்பட்ட திருமணமான பெண்களில் 28 சதவீதத்தினர் 18 வயதிற்கு முன்னதாகவே திருமணம் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று அகன்ஷா சுட்டிக்காட்டுகிறார்.

மேலும் ஆண் துணையின்றி பெண்கள் தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என்ற உத்தரவு கடந்த டிசம்பர் 26 ஆம் தேதியன்று தலிபான்கள் வெளியிட்டுள்ளார்கள்.

ஆக, தலிபான்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் கல்வி நிறுவனங்களில் உள்ள கட்டுப்பாடுகள், உடை கட்டுப்பாடுகள், அலுவலகங்களுக்குச் செல்லத் தடை, விளையாட்டில், இசைப் பயிற்சியில் பங்கேற்கத் தடை என்று கடுமையான கட்டுப்பாடுகளை அறிவித்தார்கள். அத்துடன் மகளிர் அமைச்சகத்தை முடக்கியதுடன், புதிய அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் அளிக்க வில்லை. மேலும் அந்நாட்டின் மக்கள் எதிர்கொண்டுவரும் இருப்பிடம், உணவு மற்றும் சுகாதாரச் சேவைகள் கிடைக்காமல் பெருமளவு பெண்களும், குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான நிவாரணப் பணிகளிலும் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. தலிபான்களின் இந்தக் கொள்கைகளை எதிர்த்து பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தச் சூழலில் சர்வதேச சமூகம், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச பெண்கள் அமைப்புகள் இப்பிரச்சனையில் தலையீடு செய்ய வேண்டும் என்பதே ஆப்கானிஸ்தான் பெண்களின் விருப்பமாக உள்ளது.

●

கட்டுரை | அ.கா.பெருமாள்

# மாட்டு மருத்துவர் பரதேசியா பிள்ளையின் கதை

வள்ளியம்மை ஆச்சிக்கு அன்று கோவில் பாயசக் கட்டியைத் தின்றது மாதிரி முகத்தில் மலர்ச்சி. அவளுக்கு ஊரில் ஒரு பரபரப்பான காரியம் நடந்தால்போதும் குறைத்தோ கூட்டியோ பத்து நாட்கள் பேசிக்கொண்டேயிருப்பாள். அன்று குளத்தங்கரையில் இருந்து நீட்டி முழக்கி பேசினாள். எப்போதும் போலவே அவளைச் சுற்றிக் கூட்டம் இருந்தது.

வைத்தியர் பரதேசியா பிள்ளை மாமாவை ஐந்து நாட்களாகக் காணவில்லை. எங்கு போனார் என்று தெரியாது. வைத்திய ஏடுகள் எல்லாமும் இரண்டு வேட்டி இரண்டு ஈரிழை துவர்த்து போன்ற சில வற்றுடன் ஊரை விட்டே சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டார். நெல் வித்த பணம் அலமாரியில் அப்படியே இருந்தது. அவருக்கு என்ன பிரச்சனை என்பது யாருக்கும் தெரியாது. ஊகமாய்த்தான் எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

“பரதேசியா பிள்ளை மாட்டு வைத்தியர் என்றாலும் மாடு அவரின் பெயரின் முன் ஒட்டாக இருக்கவில்லை” எப்போதாவது நாட்டு வைத்தியம் செய்தார். அதனால் அவர் வைத்தியர் என்றே அழைக்கப்பட்டார். அப்போது எங்கள் ஊரில் மாட்டு ஆஸ்பத்திரி வரவில்லை. அதனால் மாடுகளுக்கு ஒரே ஆபத்பாந்தவனாக பரதேசியா பிள்ளை இருந்தார்.

“அவர் எங்கே போனார் உயிரோடு இருக்கிறாரா ஏன் போனார் என்பதெல்லாம் மர்மமாக இருந்தது. மகனிடம் ஏற்பட்ட மனத்தாங்கல் என்று பேசியதாக ஞாபகம். நடந்து பதினைந்து இருபது வருஷங்கள் ஆகிவிட்டன. அவரை முழுதாக நான் மறந்துவிட்டேன். நானும் ஊரைவிட்டு குடிபெயர்ந்து விட்டேன்.

எழுபதுகளின் கடைசியில் இருக்கும். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஒரு கருத்தரங்குக்குச் சென்று விட்டு திரும்பும் சமயத்தில் என் நண்பன் பேராசிரியர் சுப்பையாவை சந்தித்தேன். அவன் கோவில்பட்டி ஊர்க்காரன். என்னை தன் ஊருக்கு அழைத்தான். நான் கழுகுமலை கோவிலைப் பார்க்கலாமா என்று கேட்டேன். சரி என்றான். கோவில்பட்டியில் அவன் வீட்டில் இரவு தங்கி விட்டு அடுத்த நாள் காலையில் கழுகுமலைக்கு போனோம்.”

கோவில்பட்டி சங்கரன்கோவில் பாதையில் 20 கிலோமீட்டர் தொலைவில் கழுகுமலை உள்ளது இருசக்கர வாகனத்தில் போனோம். கழுகுமலை பற்றி ஏற்கனவே படித்து கேட்டு அறிந்த செய்திகள் என்



**நூல் விமர்சனம் அனுப்புவோர்...**

**காக்கையில் நூல் விமர்சனம் வெளிவர கட்டுரைகள் அனுப்புவோர் நூலின் இரண்டு பிரதிகளைத் தவறாமல் காக்கை முகவரிக்கு அனுப்பித்தருமாறு வேண்டுகிறோம்.**

**–ஆசிரியர்**



நினைவில் இருந்தன. அண்ணாமலை செட்டியாரின் காவடிச் சிந்தை படித்தபோதுதான் கழுகாசலம் கோவிலுக்குப் போக வேண்டும் என்ற ஆசை எழுந்தது. கழுகுமலை ஊரில் தென்வடலாக கிடக்கும் 300 அடி உயரமுள்ள மலையின் அடிவாரத்தில் கழுகாசலம் கோவில் உள்ளது. மலையின் பாதியில் தீர்த்தங்கரர்களின் குடைவரைக் கோயிலும், தென்பகுதியில் வெட்டுவான் கோயிலும் உள்ளன. மூன்று கோவில்களைப் பற்றியும் ஏற்கனவே செய்திகள் சேகரித்திருந்தேன்.

இன்று போல் அல்ல அன்று கழுகுமலை அப்போது சுற்றுலாத்தலமாக மாறவில்லை. சிமெண்ட் இருக்கை, குரோட்டன்ஸ் செடிகள், வண்ணக்கல் பதித்த பாதைகள், அலங்கார வளைவுகள் எதுவுமே இல்லை. அப்போது கரடுமுரடான பாதை வழிதான் தீர்த்தங்கரர் கோவிலுக்குப் போக முடியும். அங்கே ஒரு அய்யனார் கோவிலும் உண்டு. அந்தக் கோவிலுக்கு ஊர் மக்கள் செல்வார்கள். அதனால் பாதை ஓரளவு செல்லும்படியாக இருந்தது. கரடுமுரடான பாதையில் இடையிடை சிறுமரங்கள் நின்றன. அதனால் வெயிலுக்கு இதமாக தங்கிச் செல்ல முடியும். அந்த மலையில் ஏறும்போது யாப்பருங்கலம் எழுதிய குணசேகரன் வாழ்ந்த இடம் நினைவு ஓடிக்கொண்டிருந்தது.

நண்பன் சுப்பையா திடகாத்திரமான ஆள். அவன் லாவகமாக நடந்து சென்றான். தகவலாளியைப் போல் நிறைய செய்திகளைச் சொல்லிக் கொண்டே வந்தான். அப்போது கழுகுமலை பற்றி ஆழமான புத்தகங்கள் வரவில்லை. மயிலை சீனி வேங்கடசாமி, ஏகாம்பரம் எனச் சிலர் எழுதிய கட்டுரைகள் படித்திருந்தேன்.

எனக்கு அந்த மலையில் இருந்த கல்வெட்டுக்கள் சிற்பங்கள் பற்றி செய்திகள் சேகரிப்பதில் ஆர்வமில்லை. 1894 ஆம் ஆண்டிலேயே இங்கு ஆய்வு நடந்துவிட்டது கல்வெட்டுக்களை சேகரித்து விட்டார்கள் எனக்கு கழுகுமலை பற்றிய வாய்மொழிச் செய்திகளை சேகரிப்பதில் மட்டுமே ஆர்வம் இருந்தது. ஊர் மக்களுக்கு அந்த மலையைப் பற்றி அபிப்பிராயம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நண்பன் சுப்பையாவுக்கு சரியான தகவலாளியை கண்டுபிடிக்கத் தெரியும் என்றாலும் சரியான தகவலாளியைத் தேர்ந்தெடுப்பது என்பது சவால்தான். அகழாய்வு நடத்தும்போது அபூர்வமான பொருட்கள் கிடைப்பது மாதிரி தகவல் அறிக்கை கிடைப்பது மாதிரி சிலசமயம் எனக்கு அப்படி வாய்ப்பு கிடைத்திருக்கிறது. சுப்பையா வயதான மூதாட்டியை கண்டுபிடித்தார். அவளது அப்பா காவடிக்காரர்களுக்கு சிந்து பாடிச் செல்பவர். அவர் மூலம் அந்த மூதாட்டி நிறைய தகவல்களைச் சேகரித்து இருக்கிறாள் என்பதைப் பின்னால் அறிந்தேன்.

கழுகுமலை வெட்டுவான் கோவில் ஒருவகையில் எல்லோரா அஜந்தா மாதிரி சொல்லலாம். முற்காலப் பாண்டியர்கள் காலத்தது. ஒரு பெரிய பாறையைச் சுற்றிலும் தோண்டி நடுவில் கோவிலை அமைத்து உருவாக்கியதுதான் அதன் சிறப்பு. இது முழுமை பெறாத கோவில். இப்போது இக்கோவில் கருவறையில் விநாயகர் இருக்கிறார். இது பிற்காலத்தில் வைக்கப்பட்டிருக்கலாம்.

அந்தக் கோவிலின் சுற்றுவட்டாரப் பகுதியில் முளைத்துக் கிடந்த செடிகள் கொடிகள் எல்லாம் மருத்துவக் குணமுள்ளவை, பலருக்கும் தெரியாது என்றார் சுப்பையா, வெட்டுவான் கோவிலைப் பற்றி எனக்குக் கிடைத்த கதைவடிவம் வருமாறு,

அந்தச் சிற்பியின் மனைவி யாரையும் திரும்பிப் பார்க்க வைக்கும் அழகை உடையவள். அதுவே அவளுக்கு எதிரியாயிற்று. பாரியா ரூபவதி சத்துரு என்று காளிதாசன் சும்மாவா சொன்னான். சிற்பிக்கு ஒரு ஆண் குழந்தை உண்டு. அவன் மனைவியை வெறுத்தான். அவளுக்கு வேறுவழியில்லை. குழந்தையுடன் ஊரைவிட்டுக் குடிபெயர்ந்துவிட்டாள்.

மனைவியைப் பிரிந்த பின் சிற்பி அந்த மலையில் நடுப்பகுதிக்கு சென்றுவிட்டான். அங்கே ஒரு குகையில் காலத்தைக் கழித்தான். கலைஞன் எப்படி சும்மா இருக்க முடியும். சமணத் துறவி ஒருவரின் வேண்டுகோளின்படி அந்த மலைப்பகுதியின் பாதியில் தீர்த்தங்களின் உருவத்தை செதுக்கி வைத்தான். அந்த அற்புதமான சிற்பங்கள் குறித்து சமணத்துறவிகளிடம் பரவலாக செய்தி பரவியது.

ஒரு நாள் அந்த ஊருக்கு இளம் சிற்பி ஒருவன் வந்தான். அரச கட்டளைப்படி அந்த ஊர் பாறையில் ஒரு கோவிலை குடைய வேண்டுமென்பது அவனது திட்டம். கோவிலின் பெரும்பாலான பகுதிகள் முடியும் தருவாயில் பாண்டிய அரசன் வந்து பார்த்துச் சென்றான்.

இந்தச் செய்தி வயதான சிற்பிக்குத் தெரிந்தது. அவரும் கோவிலைப் பார்க்கப் போனார். பாறையின் மேல் பகுதியில் நின்று பார்த்தார். கீழே இளம் சிற்பி நின்று கொண்டிருந்தான். முதிய சிற்பிக்கு பொறாமை தலைக்கேற பேதலித்து இளம்சிற்பியின் மேல் தன் உளியை எறிந்தான். அந்த அளவில் இளம் சிற்பி மண்ணில் சாய்ந்தான்.

கொஞ்ச நேரத்தில் ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டது. முதிய சிற்பி பார்த்தான். அவனது மனைவி வெட்டுப்பட்டு இறந்தவன் தன் மகன் என்றாள். இதெல்லாம் அறிந்த முதிய சிற்பி தன் குகைக்கு ஓடிப்போனான். அங்கிருந்த ஓலைச்சுவடிகளில் தீயை வைத்தான். அதில் சாடி உயிரை விட்டான் இளம் சிற்பி வெட்டுப்பட்டு இறந்ததால் அது வெட்டுவான் கோயில் ஆயிற்று.

இதே கதையின் வேறு வடிவங்களும் எனக்குக் கிடைத்தன. இந்தக்கதையின் கற்பனை வடிவம் எந்தக் காலத்தில் உருவாக்கப்பட்டது என்று தெரியவில்லை. இதுபோன்ற அபூர்வமான கற்பனைக் கதைகள் வேறு உண்டு.

கேரளத்தின் வடக்கன் கதை வரிசையில் பெருந்தச்சன் கதை உண்டு ஒருவகையில் வெட்டுவான் கோயில் கதை போன்றதுதான் இதுவும் கொட்டாரத்தில் சங்குண்ணி என்பவரின் ஐதிகமாலா என்ற நூலில் வரும் கதையும் இது போன்றதுதான்.

வட கேரளத்தில் இருந்த பெருந்தச்சன் ஒருவனின் மனைவி இறந்துவிட்டாள் அவன் மகனை வேறு ஒரு குடும்பத்தில் விட்டுவிட்டு நாடோடியாக அலைந்தான். குறுநில அரசன் ஒருவனின் பாதுகாப்பில் கொஞ்சநாள் இருந்தான். அவனுடைய நாட்டில் வேலைப்பாடுள்ள கெட்டாரங்களைக் கட்டினான். ராஜாவின் மனைவிக்கும் தச்சனுக்கும் தொடர்பு இருக்குமோ என்று சந்தேகம் ராஜாவிடம் எழுந்த போது பெருந்தச்சன் ஊரைவிட்டு கிளம்பிவிட்டான்.

தச்சன் தன் மகனை அழைத்துக்கொண்டு வேறு ஒருராஜ்யத்தில் குடியேறினான். தன் மகனுக்கு தன்னுடைய கலையை கற்பித்தான். மகன் தந்தையை விட பல மடங்கு மேலே சென்று விட்டான். அப்பாவுக்கு அவன் மேல் பொறாமை வந்தது. கொஞ்சம் கொஞ்சமாக வளர ஆரம்பித்தது. ஒரு முறை சிறு சமஸ்தானத்தில் சரஸ்வதி மண்டபத்தை கட்டும்போது மகன் தந்தைக்கு அறிவுரை சொல்ல ஆரம்பித்தான்.

தந்தை பொறாமை மேலோங்க மகனின் மேல் வீச்சு உளியை எறிந்தான். மகன் இறந்தான். பெருந்தச்சன் தன்னை எரித்துக் கொண்டான். இந்தக் கதை பெருந்தச்சன் என்னும் பெயரில் மலையாள திரைப்படமாக வந்திருக்கிறது (1990). எம் டி வாசுதேவன் நாயர் கதை உரையாடல் எழுதியிருக்கிறார்.

இந்தக் கதையை எனக்கு விரிவாகச் சொன்ன அந்த மூதாட்டி அண்ணாமலை செட்டியாரின் காவடிச் சிந்தை பாடினாள் சங்கீதம் தெரியாமலே செட்டியாரின் பாடல்களைக் கேட்க இனிமையாக தான் இருக்கும் என்னைப் பற்றி அவள் விசாரித்தாள். நான் என் ஊரைச் சொன்னதும் இங்கேயே ஒரு மலையாளத்து வைத்தியர் இருக்கிறாரே அவர் சாமியாராக ஆகிவிட்டார் என்றாள்.

நான் சுப்பையாவை பார்த்தேன். அவர் வெட்டுவான் கோயிலுக்கு எதிரே குருமலையில் அவர் இருக்கிறார் என்றார். அந்த மலையை குருமலை என்று சொன்னதாக ஞாபகம். வைத்தியரைப் பார்க்க முடியுமா என்று கேட்டேன். வாருங்கள் நானும் பார்த்து நாளாகிறது என்றார்.

வெட்டுவான் கோவிலின் கிழக்கே எதிரில் உள்ள அந்த சிறிய மலை சுமார் 200 அடி உயரம் இருக்கும். மலை அடிவாரத்திற்கு சற்று உயரத்தில் வைத்தியர் ஒரு



**சந்தாதாரர் கவனத்துக்கு...**

**இதழுக்கு சந்தா செலுத்த விரும்புவோர்**

**98414 57503**

**என்ற எண் வழியாக GPay மூலமும் செலுத்தலாம்.**

**சந்தா செலுத்திய பிறகு தவறாமல் சந்தா செலுத்திய விவரத்தையும் இதழ் அனுப்ப வேண்டிய முகவரியையும்**

**98414 57503**

**என்ற எண்ணுக்கே அலைபேசியிலோ whatsappலோ தெரிவிக்க வேண்டும்.**

**அன்புகூர்ந்து ஒத்துழைப்புத் தாருங்கள்.**

**–ஆசிரியர்**

குடிசையில் இருப்பதாக சுப்பையா சொன்னார். கரடுமுரடான பாதை, சுக்குநாறி புல்,நாட்டு உடைமரங்களும் செடிகளும் நிறைந்து கிடந்தன. ஒரு புங்க மரத்தை மட்டும் பார்த்தேன். (2021 இல் நான் இதே இடத்திற்கு போனபோது பழைய அடையாளத்தையே காணவில்லை.)

வைத்தியர் இருந்த ஓலைக்குடிசையின் முன்பகுதியில் பத்து பதினைந்து பேர்கள் தாராளமாய் உட்காரும் படியான இடம் இருந்தது. வாசலில் நின்று வைத்தியரே என்றார். சுப்பையா வாங்கோ என்று குரல் கேட்டது. உள்ளே போனோம். கயிற்றுக் கட்டிலில் வைத்தியர் உட்கார்ந்திருந்தார். அருகே ஏட்டுச் சுவடிகள் நீண்ட நோட்டுப் புத்தகங்கள், குடிசையின் மூலையில் ஒரு பானை குடிதண்ணீர், வேறு தட்டுமுட்டுச் சாமான்கள், காவி வேட்டி காவித் துண்டு, இன்னொரு சிறிய கட்டில், குடிசை சுத்தமாக இருந்தது. வைத்தியர் துறவியைப் போன்று தான் இருந்தார். காவி வேட்டி, பஞ்சாய் நரைத்த தலை தாடி என இருந்த கோலத்தில் அவரை அடையாளம் காண முடியவில்லை, சுப்பையாவிடம் என்ன வாத்தியாரே பார்த்து ரொம்ப நாளாச்சு என்றார்.

வைத்தியர் என்னைப் பார்த்தார். கட்டிலிலிருந்து எழுந்தார். என் அருகே வந்தார். என்னைக் கூர்ந்து பார்த்தார். என் இரண்டு தோள்களையும் பிடித்துக்கொண்டார். நீ அவனது மகன் அல்லவா. நான் ஆம் என்றேன். அவரைப் பார்த்தேன். அவரை உடனே என்னால் அடையாளம் காண முடியவில்லை. எங்கள் ஊரில் காணாமல் போன பரதேசியா பிள்ளை என்பதை கொஞ்ச சிரமத்திற்குப் பின் கண்டுபிடித்தேன்.

அங்கு ஒரு மௌனம் நிலவியது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு பார்த்த முகம் சுப்பையா ஊகித்துக் கொண்டார். வைத்தியர் பழைய விஷயங்கள் எதையும் பேசவில்லை. என்னைப் பத்திதான் கேட்டுக் கொண்டார்.

நாங்கள் பொதுவாக பேசிக்கொண்டிருந்தோம். சுப்பையா கொஞ்ச நேரத்தில் வருகிறேன் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். போனதும் வைத்தியர் மௌனமாக இருந்தார். இருபது வருடங்களுக்கு முந்திய விஷயத்தை குறிப்பாகச் சொன்னார். அவர் மனைவி மகன் பெயர் பெயரிலுள்ள வெறுப்புக்கு காரணம் புரிந்தது பணம் பெரிதல்ல.

மனித உறவில் அன்பும் மரியாதையும் எப்போது இல்லாமல் ஆகிறதோ அப்போது எல்லாம் மாறி விடுகிறது. அவரது மகன் நல்ல சம்பளம் வாங்கிக்



**சந்தாதாரர் கவனத்துக்கு...**

**உரிய காலத்தில் இதழ் கிடைக்கப் பெறாதவர்கள் அந்தந்த மாதம் 10ஆம் தேதிக்குள்**

**98414 57503**

**என்ற எண்ணைத் தொடர்பு கொள்ள வேண்டும். தங்களிடமிருந்து தகவல் கிடைத்தால்தான் தங்களுக்குத் தவறாமல் இதழ் கிடைப்பதை உறுதி செய்ய முடியும்.**

**–ஆசிரியர்**

கொண்டிருந்தான். மாட்டு வைத்தியர் என்று சொல்வதில் அவனுக்கு இளக்காரம் இருந்தது. அவன் அப்பாவிடம் பெரும்பாலும் பேசுவதில்லை. அவரின் மனஸ்தாபத்திற்கு இதுதான் காரணம். மனைவியும் மகனுக்காகப் பேசினார். ஒருநாள் வீட்டைவிட்டுக் கிளம்பி இருக்கிறார்.

வைத்தியர் சுருக்கமாகப் பேசினார். அவர் நல்ல விவசாயி. நல்ல வைத்தியர். இரண்டிலும் நிறைய சம்பாதித்தார். ஆனால் வீட்டில் அவருக்கு உரிய மரியாதை இல்லை. மகன் அவரை பொருட்டாகவே கருதவில்லை. மனைவியும் அப்படி. அதனால் ஊரை விட்டு கிளம்பி இருக்கிறார்.

தன் சுய புராணத்தை சுருக்கமாகச் சொல்லிவிட்டு நாட்டுவைத்தியத்தில் தான் செய்த ஆராய்ச்சி பற்றி விரிவாகப் பேசினார். அவர் கழுகுமலையில் சுற்றுவட்டாரத்தில் கிடைக்கின்ற மருந்துச் செடிகளின் அடிப்படையில்தான் தன்னுடைய வைத்திய ஆராய்ச்சியைச் செய்திருக்கிறார். கழுகுமலை அதற்கு வசதியாக இருந்திருக்கிறது.

பழைய கால வைத்தியம் என்பது மருந்து மட்டும் சார்ந்ததல்ல. நம்பிக்கை தொன்மம் சடங்குகள் பழமையில் தீவிரம் என இப்படிப் பல விஷயங்கள் சார்ந்தது. இது மாட்டு வைத்தியத்துக்கும் பொருந்தும் இந்த விஷயங்களை இவர் மாற்றி இருக்கிறார். தான் புதிதாக எழுதிய வைத்திய நோட்டுப் புத்தகத்தை தந்தார். நான் முதல்பக்கத்தைத் திருப்பினேன்.

மனிதனுக்கு வியாதி வந்தால் சொல்லுவார்கள்
மகிமை தரும் வைத்தியம் உடனே தீர்க்கும்
இனிய சுவைபால் கொடுக்கும் பசுக்களுக்கும்
ஏர் இழுக்கும் எருமைகளும் காளைகளும்
நுனிபுல்லைத் தின்று வாழும் ஆடுகளும்
அப்பனே நோய் வந்தால் சொல்லாதப்பா
கனியுமிந்த வைத்தியத்தை பரதேசி நான்
கருணையாய் சொல்கின்றேன் கேளுமப்பா

என்று இருந்தது.

ஏற்கனவே உள்ள வாகாட மூலத்தை கொஞ்சம் மாற்றியும் தான்கண்டுபிடித்ததை சேர்த்தும் எழுதியிருந்தார். இதெல்லாம் நடந்து 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. நண்பன் சுப்பையா இறந்ததாக கேள்விப்பட்டேன் வைத்தியரும். போயிருக்கலாம் அவரது ஏடுகள் கண்டுபிடிப்புகள் என்ன ஆச்சு என்பது தெரியவில்லை. •

கட்டுரை

**சு.இராமசுப்பிரமணியன்**
srsthovalai@gmail.com

# முலை அறுத்தலும் முலை பறித்தலும்


## சிலம்பு நாயகி கண்ணகியை முன்வைத்து

அன்றைய பூம்புகார் நகரத்தில், செல்வச்செழுமைகொண்ட இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 12 வயது கண்ணகிக்கும், 16 வயது கோவலனுக்கும் சிறப்பாகத் திருமணம் நிகழ்ந்தது. ஏழுமாடி அடுக்குவீட்டில் சிறப்புற இல்லறத்தையும் தொடங்கினர்.

மணவாழ்க்கை இனிதாக நடந்துகொண்டிருக்கும்போது, மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் நிகழ்கிறது. அரங்கேற்றத்தின் முடிவில், மன்னன் ஆயிரத்து எட்டு களஞ்சு பொன்மாலையை மாதவிக்குப் பரிசளிக்கிறான்..(இன்றும் நெல்லை மாவட்டத்தில், தங்கத்தைக் களஞ்சியில்தான் பேசுகிறார்கள். ஒரு களஞ்சி 5 கிராம்)

அழகிய இளம்பெண் ஒருத்தி, அப்பொன்மாலையை விலைகொடுத்து வாங்குபவருக்கு, மாதவி சொந்தமாவாள் என்னும் அறிவிப்புடன் அதனை ஒரு கூனியின் கையில் கொடுத்து, இளைஞர்கள் அதிகம் கூடும் நகரத்து வீதியில் நிறுத்துகிறாள்..

கோவலன், அப்பொன்மாலையை ஆயிரம்பொன் கொடுத்து வாங்குகிறான். கூனியுடன், மாதவி இல்லத்திற்குச் செல்கிறான். மாதவியுடன் கூடி மகிழ்கிறான். மாதவி தந்த உடல்இன்பத்தில் மயங்குகிறான், மாதவியுடன் தங்குகிறான், இளம் மனைவியான கண்ணகியை மறக்கிறான்.



கோவலன், மாதவியின் நாட்டிய அரங்கேற்றத்தில் கலந்துகொண்டதற்கான வெளிப்படையான சான்று எதுவும் சிலப்பதிகாரத்தில் இல்லை. கோவலனும் கலந்துகொண்டிருக்கலாம் என்றும் அதன் காரணமாகவே, பொன்மாலையை விலைகொடுத்து வாங்கி, மாதவியை அடைந்தான் என்றும் யூகிக்கலாம்.

**“கூடினார் பால்நிழல் ஆய். கூடார்பால் வெய்யது ஆய்க்**
**காவலன் வெண்குடைபோற் காட்டிற்றே – கூடிய**
**மாதவிக்கும் கண்ணகிக்கும் வான்ஊர் மதிவிரிந்து**
**போதவிழ்க்கும் கங்குற் பொழுது”**
**(சிலம்பு: அந்தி மாலைச் சிறப்புசெய் காதை)**

மொக்கு, மலராகவிரியும் முன்னிரவுக்காலத்தில், வானில் ஒளிவீசும் வெண்ணிலவு, கண்ணகிக்கும், மாதவிக்கும் முரண்பட்டு காய்ந்ததை வெளிப்படுத்தும் அருமையான வரிகள். மன்னனின் வெண்கொற்றக்குடை, வேண்டியவருக்கு குளிர்ச்சிதரும் நிழலாகவும், வேண்டார்க்குத் தகிக்கும் வெயிலாகவும் மாறுவதுபோல, கோவலனைப்பிரிந்த கண்ணகியைக் காய்ந்தும், மாதவிக்குத் தண்ணிலவாகவும் ஒளிவீசியிருக்கிறது. நிலவு இருவருக்கும் பொதுவானதுதான். என்றாலும் அவரவர் மனநிலைசார்ந்து, அதன் தன்மை உணரப்பட்டிருக்கிறது.

‘இந்திர விழவு ஊர் எடுத்த காதையிலும்’ ஒரு பாடல் கண்ணகிக்கும், மாதவிக்கும் மனநிலை எப்படி இருந்தது என்பதை வெளிப்படுத்துகிறது.

**"உள்ளக நறுந்தாது உறைப்ப, மீது அழிந்து**
**கண்டக நடுங்கும் கழுநீர் போலக்**
**கண்ணகி கருங்கணும், மாதவி செங்கணும்,**
**உள்நிறை சுரந்து, அகத்து ஒளித்து, நீர் உகுத்தனர் !**
**எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன**
**விண்ணவர் கோமான் விழவு நாள் அகத்து – என்"**

இந்திர விழாவில், நறுமணம்கொண்ட தாதுநிறைந்த கழுநீர்மலர் தேன்சொரிந்ததுபோல, கண்ணகியின் கருங்கண்ணும், மாதவியின் செங்கண்ணும் கண்ணீர்சொரிந்தன.. கோவலனைப்பிரிந்தத் துயரால் கண்ணகிக்கும், கோவலனுடன் கூடிய இன்பக்களிப்பில் மாதவிக்கும் கண்ணீர் சொரிந்திருக்கின்றன. அவரவர் மனநிலைசார்ந்து, துன்பத்தால் கண்ணகிக்கு இடது கண்ணும், இன்பத்தால் மாதவிக்கு வலது கண்ணும் துடித்திருக்கின்றன.

கோடையில் கடலாடும் நோக்குடன் மக்கள் பூம்புகார் கடற்கரைக்குக் கூட்டம்கூட்டமாகச் செல்கின்றனர். மாதவியும் கடலாட விரும்புகிறாள். கோவலன், மாதவியின் விருப்பத்தை ஏற்கிறான். மாதவி கூண்டு வண்டியிலும், கோவலன் அத்தரி எனப்படும் கோவேறுக்கழுதையின்மீதும் ஏறி பூம்புகார் கடற்கரைக்குச் செல்கின்றனர்.

கடற்கரையில் மாதவியின் யாழை வாங்கிக் கோவலன் கானல்வரி பாடுகிறான். கோவலனது பாடலில், அவன் வேறு ஒரு பெண்ணை மனதில்கொண்டு பாடியதாக மாதவி எண்ணுகிறாள். கோவலனுடன் போலியாக ஊடுகிறாள். கோவலனிடம் இருந்து யாழைப்பெற்று, மாதவியும் கானல்வரி பாடுகிறாள். அவளது பாடலில், வேறு ஒரு ஆடவனை உட்கிடக்கையாக வைத்து.

**"நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்"**

என்று கானல்வரி பாடுகிறாள்.

மாதவியின் கானல்வரியைக்கேட்ட கோவலன்,

**"மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினாள்"**

என ஆணாதிக்க மனநிலையில் சந்தேகம்கோண்டு, மாதவியின்மீது கோபம்கொள்கிறான்

**"யாழ் – இசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை**
**வந்து உருத்தது ஆகலின்"**

என்று எண்ணும் கோவலன் அப்போதே மாதவியை வெறுத்துப் பிரிந்துவிடுகிறான். ஆனாலும், கண்ணகியிடம் செல்லாமல் தனித்திருக்கிறான். மாதவி, கோவலனுக்காகக் காத்திருக்கிறாள். அவன் வரவில்லை. பலமுறை தூது விடுகிறாள். ஆனாலும் பயன் இல்லை.

கோவலன் மாதவிமீதான கோபம் தணியாதவனாக, கண்ணகியைச்சேர்கிறான். அப்படிக்கோவலன் மீண்டுவரும்போது, சில ஆண்டுகள் கழிந்திருந்தன, அனைத்து செல்வத்தையும் இழந்திருந்தான்.

சங்க காலத்திலும் அதற்குப்பின்பும், பரத்தையரிடம் சென்ற ஆண்கள் இல்லம் திரும்பும்போது, சில மனைவிமார்கள் ஏற்றனர். பலர், காமத்தை அடக்கிக்கொண்டு, கணவன்மாரை ஏற்க மறுத்தனர். அப்படி ஏற்பதும், ஏற்க மறுப்பதும் இல்லக்கிழத்திகளின் பொருளாதார நிலை சார்ந்ததாகவும் இருந்திருக்கிறது.

"ஓரம்போகியார்' பாடிய அகநானூறு 316-வது பாடல், பரத்தையிடம் செல்லும் தனது கணவனிடம் முரண்பட்டால், ஒரு பெண் தனியளாக வாழவேண்டிய சூழல் ஏற்படும்; அவளும், அவளது புதல்வனும் வறுமையில் வாழ வேண்டிவரும் என்பதனால், பொறுமையாக இருக்கவேண்டும் என்று அப்பெண்ணை அறிவுறுத்துகிறது. அதுதான் அன்று பல குடும்பப்பெண்களின் நிலையாக இருந்தது. கண்ணகியின் பொறுமையையும், கற்பையும், இந்த குடும்பச்சூழலோடுதான் பொருத்திப் பார்க்கவேண்டும்." என்று ' நவீன வாசிப்பில் செவ்வியல் இலக்கியம்' நூலில் மறைந்தப்பேராசிரியர் வேதசகாயகுமார் குறிப்பிடுவதும் சிந்திக்கத்தக்கது. இந்த 21-ஆம் நூற்றாண்டிலும் அந்நிலை தொடரத்தான் செய்கிறது.

பொருளை இழந்து வருந்தும் கோவலனுக்குத் தனது காற்சிலம்பு இருப்பதாகக் கூறி கண்ணகி அவனுக்கு ஆறுதல் அளிக்கிறாள். பூம்புகாரில் இழந்த செல்வத்தை மீட்க, கண்ணகியும் கோவலனும் மதுரைக்கு நடந்தே வருகின்றனர். மதுரை மாநகரில், கண்ணகியின் காற்சிலம்பை விற்றுப் பொருளீட்டச் செல்கிறான் கோவலன். கள்ளமனம்கொண்ட பொற்கொல்லனால், கோவலன் பாண்டிமாதேவியின் காற்சிலம்பைத் திருடிய கள்வன் என்று குற்றம் சாட்டப்படுகிறான். சரியாக ஆய்ந்தறியாத பாண்டியமன்னன் நெடுஞ்செழியன், கோவலனுக்கு மரணதண்டனை கொடுத்து வரலாற்றுத் தவறிழைக்கிறான்.

பூம்புகாரில் பத்தாண்டுகள் பொறுமைகாத்த சாதுப்பெண்ணானக் கண்ணகி, கோபத்தில் பொங்கி எழுந்து, பாண்டியன் அவைக்குச் சென்று, காற்சிலம்பை உடைத்துத் தனது கணவன் கோவலன் கள்வன் அல்லன் என்று அவையோர்முன் உறுதிபட நிறுவுகிறாள். தனது தவறை உணர்ந்த பாண்டிய மன்னன் உடனடியாக உயிரைவிட்டு, வளைந்த நீதியை (செங்கோலை) நேர்நிறுத்துகிறான். பாண்டிமாதேவியும் அவனுடனேயே, தன்னையும் மாய்த்துக்கொள்கிறாள்.

மன்னன் நெடுஞ்செழியனும், பட்டத்தரசி கோப்பெருந்தேவியும் உயிர்விட்டபின்பும் சினம் தணியாத கண்ணகி, கோவலனைக்கொன்ற மதுரையைத் தண்டிக்க விரும்புகிறாள். வலது கையால் தனது இடது முலையைத் திருகி எறிந்து, மதுரையைத் தீக்கிரையாக்கினாள் என்று சிலப்பதிகாரம் காட்சிப்படுத்துகிறது..

**"இடமுலை கையால் திருகி, மதுரை**
**வலமுறை மும்முறை வாரா, அலமந்து**
**மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து**
**விட்டாள் எறிந்தாள், விளங்கு இழையாள்".**

தங்களது தவறை உணர்ந்து, பாண்டிய மன்னனும் அவனது துணைவியும் உயிர்துறந்த பின்னரும் கோபம் தணியாத கண்ணகி, மதுரை மாநகரை எரித்தது எந்த விதத்தில் ஞாயம் என்னும் கேள்வி கேட்கப்படாமலேயே இருக்கிறது. மதுரையை

எரித்துத்தான், கற்புநெறி தவறாதபத்தினி என்று கண்ணகி தன்னை ஊருக்குப் புரியவைக்கவேண்டுமா என்னும் கேள்வியும் எழுகிறது. அதோடு, கண்ணகியின் கற்பு அந்த ஒற்றை முலையிலா இருந்தது என்னும் கேள்விக்கும் விடைகாணவேண்டியுள்ளது. மூன்றுமுறை சுற்றிவரும் அளவிற்கு, மதுரை சிறிய ஊராகத்தான் இருந்ததா என்னும் ஐயமும் பிறக்கிறது.

இக்கேள்விகளில், கண்ணகி தனது ஒரு முலையைத் திருகி எறிந்து மதுரையை எரித்தாளா என்னும் கேள்விக்கு, இலக்கியத்தைப் பகுத்தறிவுகொண்டு ஆய்ந்தறிந்து விடைகாண முயற்சிக்கிறார், ஆய்வறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி. "இதன் உண்மைப்பொருளை விளக்குகின்ற சான்றுகள் எமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே நாமே முயன்று இயன்றவரையில் உண்மையைக் காண்போம்" என்றுசொல்லி, கொங்கை குறைத்தலுக்கான காரணங்களை ஆய்வுசெய்ய முற்படுகிறார்.

சிலப்பதிகாரத்தில், கண்ணகி ஒருமுலை குறைத்த செய்தி பல இடங்களில் காணப்ப.டுகிறது.

"பொலம்பூ வேங்கை நலங்கினர் கொழுநிழல்
ஒருமுலை இழந்தாளோர் திருமா பத்தினிக்கு "
(பதிகம், வரிகள் 4-5)

"முத்தார் மார்பில் முலைமுகந் திருகி
நிலைகிளர் கூடல் தீனெரி யூட்டிய
பலர் புகழ் பத்தினி ---------------------------

முதிரா முலைகுறைத்தாள் முன்னரே வந்தாள்
மதுராபதி என்னும் மாது "
(அழற்படுகாதை)

கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை இழந்துத் தனித்துவர் எய்தி
வானவர் போற்ற மன்னொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்"
(காட்சிக்காதை, 47-50)

"ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு"
(நீர்ப்படைக்காதை ,129)

கலிகெழு கூடல் கதழெறி மாண்ட
முலைமுகந் திருகிய மூவா மேனிப் பத்தினி"
(வரந்தரு காதை 149-151)

எட்டுத்தொகை நூலான நற்றிணையிலும், ஒருமுலை குறைத்த செய்தி ஒரு பாடலில் வருகிறது.

"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனியின் இதணத்து ஆங்கண்
ஏதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த திருமா வுண்ணி"
(நற்றிணை 216)

திருமாவுண்ணி என்னும் இளம்பெண், ஒருமுலை குறைத்த செய்தியைப் புலவர் மதுரை மருதன் இளநாகனார் இப்பாடல்வழியே தெரியப்படுத்துகிறார்.

நாலாயிரத் திவ்ய பிரபந்தம் பாடிய ஆண்டாளும், கொங்கைகுறைக்கும்செய்தியைவெளிப்படுத்துகிறார்.

" உள்ளே உருகி நைவேனை
உளனோ இலனோ என்னாத
கொள்ளைக் கொள்ளிக் குறும்பனைக்
கோவர்த் தனனைக் கண்டக்கால்
கொள்ளும் பயனொன்றில்லாத
கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன்மார்பில்
எறிந்துஎன் அழலைத் தீர்வேனே"
(திருவாய்மொழி-13; செய்யுள் 8)

கண்ணன்மீது காதல்கொண்ட பெண்ணொருத்தி, அவன் வந்து அவளது காமத்தைத் தீர்க்கவேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். ஆனாலும் கண்ணன் வரவில்லை. அதனால் கோபம் கொள்கிறாள். அந்தக் கண்ணனைக் கண்டால், இரண்டு கொங்கைகளையும் வேரோடு பறித்து அவனது மார்பில் எறிந்து, காமம்காரணமான தனதுத் துன்பத்தைத் தீர்த்துக்கொள்வதாகப் பாடல் கூறுகிறது.

கண்ணகியும், திருமாவுண்ணியும் தங்களது ஒருமுலை குறைத்ததாக, சிலப்பதிகாரமும், நற்றிணையும் கடந்தகால செய்திகளைத் தெரிவிக்கின்றன. ஆண்டாள் திருவாய்மொழியின் பெண்ணோ 'இருமுலைகளையும் பறித்தெறிவேன்' என்று எதிர்காலச்செய்தியாகக் கூறுகிறாள்.

ஆண்பால் புலவர்களும், பெண்பால் புலவரும் கூறுகிறவகையில், 'கொங்கை பறித்தல்' என்பது பொதுமக்கள் வழக்காற்றில் இருந்துவந்திருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளமுடிகிறது."


ஒருமுலை அறுத்தல், இருமுலை பறித்தல் என்பதெல்லாம், நடைமுறைப்படுத்தமுடியாத, இயற்கைக்கு எதிரான செயல்களாகும் என்று, மயிலை சீனி.வேங்கடசாமி கூறுகிறார். அது உண்மையும்தானே.சிலம்புகாவியம்சொல்வதுபோல், கண்ணகி வலது கையால் இடது முலையைத் திருகி எடுக்க முடியுமா என்ன? என்னதான் பத்தினிப் பெண்ணாகஇருந்தாலும்,ஒருசாதாரணப்பெண்ணால் எப்படி கையால் முலையைத் திருகி எறியமுடியும் என்னும் கேள்வி எழத்தானே செய்கிறது.

எனில், முலை அறுத்தல், முலை பறித்தல் அல்லது கொங்கை குறைத்தல் என்பன குறியீட்டு சொற்களாக இருக்கவேண்டும் என்று யூகிக்கலாம். அப்படி அவை உணர்த்தும் மறைபொருள் என்னவாக இருக்க முடியும்?

"தலைமகள் ஒருத்தி, கண்ணன்மீது காதல்கொள்கிறாள். அவன் வந்துத் தனது காமத்தைத் தீர்ப்பான் என்று வெகுநாட்கள் காத்திருக்கிறாள். கண்ணன் வரவில்லை. கற்புடைப் பெண்ணான அம்மங்கை வேறொரு ஆடவனை எண்ணிப்பார்க்கவில்லை. எனவே காமத்திற்குப் பயன்படாத இரண்டு கொங்கைகளையும் பறித்து எறிவதாகக் கூறுகிறாள். இங்கே நாம் புரிந்துகொள்ளவேண்டிய செய்தி ஒன்று உள்ளது. அதாவது அந்தப்பெண் காமச்சுவையை சுவைக்கவே இல்லை. எனவே, இருமுலை இழத்தல் என்பது முற்றிலும் காமம் அனுபவிக்காத நிலையிலிருந்து பிறக்கிறது.

இதற்கு மாறாக, கண்ணகி கோவலனுடன் சிறிதுகாலம் இணைந்து வாழ்கிறாள். பகுதி காமச்சுவையை அவள் பெறுகிறாள். போலவே, நற்றிணைப்பெண்ணான திருமாவுண்ணியும், அவள் விரும்பிய தலைவனுடன் சிலகாலம் காமத்தை அனுபவித்த பிறகே பிரிந்துசென்ற தலைவன் திரும்பிவராமல் போகிறான்..

ஆக, கண்ணகியும், திருமாவுண்ணியும் முழுமையாக இல்லாமல் பகுதி காமத்தை அனுபவித்தவர்களாக இருக்கிறார்கள். இவ்விரண்டு செய்திகளையும் இணைத்துப் பார்க்கும்போது, 'ஒரு முலை அறுத்தல்' , 'இருமுலை பறித்தல்' ஆகிய குறியீட்டு சொற்கள் உணர்த்தும் செய்திகள் புலப்படுகின்றன."



**இலங்கையில் கண்ணகி வழிபாடு**

இப்படி, அக்கால மங்கையர், அவர்களது காதல், காம வாழ்க்கையைத் தங்களது கொங்கைமேல் ஏற்றிக் கூறல் வழக்கமாக இருந்திருக்கிறது. 'முலை அறுத்தலும்', முலை பறித்தலும்' பெண்களின் காமம் பற்றிய குறியீட்டுச் சொற்களாகவே இருக்கவேண்டும் என்று மயிலை சீனி.வேங்கடசாமி கருதுகிறார். ஆண்டாளின் மற்றொரு பாடலையும், அவர் சான்றாகச் சுட்டுகிறார்.

"ஊனுடை ஆழி உத்தமர்க்கென்று
  உன்னித்தெழுந்த என் தடமுலைகள்
மானிட வர்க்கென்று பேசப்படில்
  வாழ்கில்லேன் கண்டாய் மன்மதனே"

ஆண்டாள், கண்ணன்மீதுகொண்ட காதல் இன்பத்தைத் தனது கொங்கைகள்மேல் ஏற்றிக் கூறுகிறார்.

இதற்கு சான்றாக ஒரு திருக்குறளையும் மயிலை சீனி.வேங்கடசாமி சுட்டுகிறார்.

"கல்லாதான் சொல் காமுறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண் காமுற்று"

பெண்கள் தங்கள் காதல், காம வாழ்க்கையை அவர்களது கொங்கைகள்மேல் ஏற்றிப் பேசுவது அன்றைய மரபாக இருந்திருக்கிறது என்பதையே இக்குறளும் வெளிப்படுத்துகிறது.

சங்க இலக்கியப் பாடல்களை வாசித்தவர்களுக்கு, பெண்களின் காதல், காம வாழ்க்கையில் முலைகள் முதன்மைபெறுவதைப் புரிந்துகொள்ளமுடியும். 'என் நலன் கெட்டாலும் கெடுக' என்று தலைவி பேசும்போது, 'நலன்' என்பது' ஆணுக்கும் பெண்ணுக்குமான காம உறவையே குறிக்கின்றது.

""கரும்பு அமல் படப்பை, பெரும் பெயர்க் கள்ளூர்
திரு நுதற் குறுமகள் அணி நலம் வவ்விய
அறனிலாளன் 'அறியேன்' என்ற "

(அகநானூறு 256)

இந்த அகநானூற்றுப்பாடலில், ' குறுமகள் அணி நலம் வவ்விய' என்பது, ஒரு சிறுமியுடன் வல்லுறவு கொண்டவனைப்பற்றிக்கூறுகிறது. ஆக, 'நலம்' அல்லது 'நலன்' என்பதெல்லாம் காமம்சார்ந்த சொற்களாகவே உள்ளன.

போலவே, தான் விரும்பும் காதலன் தனக்குக்கிட்டாதபோதும், தனது காதலன் அல்லது கணவன் பிரிந்துசென்றபோதும், கற்புடைய மங்கையர் கொங்கை (இன்ப வாழ்க்கை) பயனற்றது, இறந்துவிட்டது என்பதைக் குறிப்பதாகவே 'முலை அறுத்தலும்' 'முலை பறித்தலும்' உள்ளன என்னும் முடிவுக்கு வரலாம் என்கிறார் மயிலை சீனி வேங்கடசாமி.

"பிள்ளைப்பேறு அற்ற இளமங்கையர் கணவனை இழந்தால் அல்லது கணவனால் துறக்கப்பட்டால் மாத்திரம் ஒருமுலை அறுத்தவள், கொங்கை குறைத்தவள் என்று அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றனர். மாறாக, கணவன் பிரிந்தாலும், பிள்ளைகளைப்பெற்ற மகளிர் இவ்வாறு அழைக்கப்படுவதில்லை என்பதையும் யூகித்து அறியமுடிகிறது. கண்ணகியும், திருமாவுண்ணியும், ஆண்டாளின் மங்கையும் பிள்ளைப்பேறு அடையாத இளம் மங்கையர் என்பது, இக்கூற்றுக்கு வலு சேர்க்கிறது" என்றும் மயிலை சீனி.வேங்கடசாமி அவதானிக்கிறார்..

"இதுவே முடிந்த முடிபு என்பது எமது கருத்து. இப்பொருள் பொருந்தாது என்று கருதுவோர், காரணங்காட்டி வேறு செம்பொருள் கூறுவாராயின், அக்கருத்தை, ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தால், தலைவணங்கி ஏற்றுக்கொள்ளத் தடையில்லை" என்னும் மயிலை சீனி.வேங்கடசாமியின் கருத்து ஏற்புடையதே. அதோடு, இதுவரையிலும் வேறு யாரும் மறுப்பு தெரிவித்ததாகவும் தெரியவில்லை.

'ஒருமுலை அறுத்த கண்ணகி' என்பது, அவள் இழந்த சிற்றின்ப வாழ்க்கையைக் குறிக்கும் குறியீடு மட்டுமே. தனது ஒரு முலையைத் திருகி எறிந்து மதுரையை எரித்தாள் என்பதும், கண்ணகியின் கற்பு அவளது ஒரு முலையில் இருந்தது என்பதும் ஏற்புடையதல்ல என்னும் முடிவுக்கு, இலக்கியத்தின் நுண்வாசிப்பிலிருந்தும், அறிவியல் அடிப்படையிலும், நாம் வரமுடியும்.


பார்வை (Reference):

மயிலை சீனி வேங்கடசாமியின் ஆய்வுக்கட்டுரைகள்' தொகுப்பில் 'நகில் குறைத்தல்' என்னும் கட்டுரை. .

'நகில் குறைத்தல்' என்பது 'முலை அறுத்தல்', 'கொங்கை குறைத்தல்' என்று பொருள்படும்.

கட்டுரையாளர்:
இயற்பியல் பேராசிரியர் (பணிநிறைவு)

நூல் விமர்சனம் | புதியமாதவி



# கவிதா மண்டலத்தில் சித்தன்

காதலும் வீரமும் மட்டுமே பாடுபொருளாக இருந்த தமிழ்ச் சமூகத்தில் பக்திஇலக்கியங்கள் சரணாகதித் தத்துவத்தை முன்னிறுத்த ஆண் பெண் உறவைப் பாடுபொருளாக எடுத்துக்கொண்டன.

பௌத்தம் சமணம் தத்துவ விசாரணையை விட அறம்போதித்தலுக்கு முக்கியத்துவம் கொடுத்தன. சித்தர்களின் காலம் தமிழ் மெய்யியல் தளத்தில் அதிகார மையத்திற்கு எதிரான குரல் மட்டுமல்ல. அதற்கான அறிவுப் பின்புலம் கொண்டது. தேடல்களின் மூலம் வாழ்வின் அர்த்தப்பாடுகளை கண்டடைய முனைந்திருக்கிறது.

கவிதைகளை ஆன்மாவின் தேடலாக முன்வைத்ததில் சூஃபியிசம் முக்கியமானது. கவிதையில் ‘ஆன்மாவின் நிழலை’ தரிசிக்கமுடியும் என்றார்கள் சூஃபிகள். பிறவிப்பெருங்கடல் நீந்தும் பயணத்தை 7 பள்ளத்தாக்குகளில் பயணித்து மனிதப்பிறவி கண்டடையும் என்றார்கள். அந்த 7 நிலைகள் : நேசம், நெருக்கம், தீவிரமான காதல், பிரிவின்மை சரணாகதி, பித்துநிலை, நான் அழிந்து ஒன்றாதல் என்று ஏழு படி நிலைகளில் வைக்கிறார்கள். இதன் சாரம்சங்களை ‘ஏழு பள்ளத்தாக்குகள்” *the secret of secrets* என்ற புத்தகத்தில் ஓஷோ பேசுகிறார்.

காதலின் சரணாகதியும் பித்து நிலையும் இறைவனுடன் ஒன்றாகும் ‘ நான்’ அழியும் அனுபவமாக, ரூமியின் கவிதைகளின் சாரமாகத் திகழ்கிறது. இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும் மொழிகளின் எல்லைகள் கடந்தும் ரூமியின் கவிதைகள் கவிதையின் நிழலாகத் தொடர்கின்றன.

இன்று இப்பெருங்கடலின் துளிகள் கவிதைகளாகி தமிழ்க் கவிதா மண்டலத்தின் தத்துவ இடைவெளிகளின் தூரத்தைக் கடந்துவிடும் பயணத்தில் தஞ்சை தவசியின் “நிழலற்ற தூரம்” முக்கியமானது.

*“நீ கடலின் ஒரு துளியல்ல*

*ஒரு துளிக்குள் நிறைந்திருக்கும் கடல்” என்பார் ரூமி.*

தவசியின் ஒவ்வொரு கவிதைகளும் அதன் துளிகளும் ரூமியின் இந்த வரிகளுக்கானவை. தவசியின் கவிதைகள் எங்கும் “அம்மாவின் நேசம்” *(1)* முதல்படி.

*“அசையும் மோனம்*

*அம்மாவில் புத்தனின் புன்னகை”*

*கண்ட கவிதை மனம் உயிரின் மிச்சமாய்*

*பிறவி ஈரமாய் மகளைப் பார்க்கிறது.*

*‘“அப்பா மகள் உறவு அரூப தரிசனம்”*

நேசம், இரண்டாவது நிலையில் நெருக்கமாகிறது. *(2)*

இந்த நெருக்கம் வாழ்க்கையின் புதிய அர்த்தங்களை புதிய சூழலில் எழுதிப் பார்க்கிறது.

“தூக்கம் வராத நகரத்துத் தனிமையில்

முழுசாக யாரும் இறந்து போவதில்லை”

வாழ்தலின் தீவிரமாகிறது. *(3)*

“பரபரப்பாயுள்ளது பூமிக்கோளம் சந்தைவெளி

குரல்வளையை நெருக்குகிறது உயிர்வாழ்தல்

இறப்பதற்காக வரவில்லை

நான் கடலோடு தனியாக இருக்கவிரும்புகிறேன்”

பிரிவின்மையை *(4)* வெளிப்படுத்துகிறது.

“வெளிச்சத்திற்கு வரும் உண்மை இதுதான்

கற்ற முழுதும் ஒருதாள் கனம்கூட இல்லை”

சரணாகதியாகிவிடுகிறது..*(5)*

அறிவியல் தோற்றுப்போன காலக்கோட்பாட்டு சூத்திரத்தை கடந்துவிடும் பித்து மன நிலைக்குள் *(6)* பயணித்து

“பின்னோக்கி நகர்கிறது கருத்திருக்கும் காலம்”

பூர்வீக பொம்மை துளைவழி ரத்தம் ததும்பிக் கசிகிறது. இறுதியாக அந்த " நான்" 'நானற்றவெளி' யில் ஒன்றுபோலவே இருக்கிறது ஒன்றுமில்லாததாகி

கரைந்துவிடுகிறது.(7)

கவிதை ஏழு பள்ளதாக்குகளைத் தாண்டி பிறவிப்பெருங்கடலில் சங்கமித்துவிடுகிறது. தவசி கவிதைமொழி வாசிப்பிலிருந்து மட்டும் வந்ததல்ல. "விழிப்பில் பெறும் மொழி."...அது விலகுவதில்லை. கவிதையின் நிழலாய் "நிழலற்ற தூரங்களைக் கடக்கிறது. கவிதைகள் எங்கும் வாசகன் அறிந்த சொற்கள் புதிய வாசலைத் திறக்கின்றன. அவரவர் கையிலிருக்கும் சாவியைப் பொறுத்து வெளிச்சத்தைத் தரிசிக்க முடியும்.

சூலுற்ற அப்பா, மௌனம் பொய், பூர்வீகப்பொம்மை,

துளைவழி ரத்தம், அந்த இன்னொன்று, படித்துறை,

நிறைகுடத்துடன் படியேற வேண்டும்,

தூண்டில் தீவு, சாக மறுக்கும் பிசாசுகள்,

வெளிவிரியும் சிதம்பரவிலாசம்,

ஒன்றுபோலவே இருக்கிறது ஒன்றுமில்லாதது

பேசிவிடாதீர்கள், விழிப்பு கலைந்துவிடும்..

என்று பக்கத்திற்கு பக்கம்.. ஒவ்வொரு முறை வாசிக்கும்போதும் விரிந்திருக்கும் சொல்வலைக்குள் வாசகன் சிக்கிக்கொள்கிறான். அதிலிருந்து வெளிவருவதற்குள் அவனுக்கு நீண்ட பயணம் தேவையாகிறது. மீண்டும் ரூமியின் அதே குரல் நமக்குள் கேட்கிறது.

"இந்தச் சொற்களை என் உதடுகளில் இருந்து உதிர்ப்பது யார் ?

என் கண்களின் மூலம் காண்பது யார் ?

எது ஆன்மா ?

என்னால் கேள்விகளை நிறுத்த இயலவில்லை."

தவசி கவிதைகளின் வடிவம் :

தவசி கவிதைகளின் தனித்துவமாக அதன் வடிவ நேர்த்தியைச் சொல்ல வேண்டும். நவீன தமிழ்க்கவிதை இதை வரவில் வைக்கும்.

/ஆன்மாவை அரித்த விஷம், நரம்பு நோய் அகங்காரம், /

/நான் சாகவேண்டும், சாக மறுக்கும் பிசாசுகள் யாரைத் தேடுகின்றன/ /வாழவேண்டும் என்ற எண்ணத்திலேயே வாழ்கையை முடித்துக்கொள்ள முடியாது/

/வாழ்ந்து பார்க்க முடியாது, உயிருள்ள கருவாடு/

/வெளிவிரியும் சிதம்பரவிலாசம், கீறல்விடும் தனித்துயரம்./.. கவிதைக்குள் வரும் இந்த வரிகள் தனித்தனியாக வாசிக்கும்போது தனித்தனி கவிதைகளாகி இன்னொரு தளத்திற்குப் பயணிக்கின்றன. அதே வரிகள் ஒன்றாகி ஒரே கவிதையில் சேர்ந்து பயணிக்கும்போது அதற்கான வீச்சு கவிதையின் இன்னொரு வடிவமாகிறது. கவிதைகளின் "கொல்லாஜ்" வடிவம். தனித்தனி கவிதைவரிகள் சேர்ந்து குவிமையப்பொருளை நோக்கிக் கொண்டுவரும் போது கவிதைக்கு கிடைக்கும் புதியவடிவம்.

(தவசிக்கு எமது முக நூல் பின்னூட்டம்.)

முகநூலில் தவசியின் கவிதை அறிமுகமாகும்போது அவர் கவிதையின் வடிவத்தில் காணப்படும் உத்தி கொலாஜ் கவிதைகள் என்று கருத்துத் தெரிவித்திருந்தேன். புத்தகவடிவில் நிழலற்ற தூரமாக அவர் கவிதைகளை மொத்தமாக வாசிக்கும்போது அந்த வடிவ நேர்த்தியின் தனித்துவம் பல்வேறு கவிதைகளில் இருக்கிறது.

சமகாலத்தை நிராகரிக்கும் எதுவும் இலக்கியமாவதில்லை. அதை மிகச்சரியாகப் புரிந்து கொள்ளாதவன் முன்வைக்கும் தத்துவஞானம் வெற்றுக்காகிதமாகிவிடும். கனமான தத்துவ வெளிக்குள் பயணிக்கும் தவசியின் கவிதைகள் சமகாலத்தை புறமாக்கி நம் அகவெளிக்குள் பயணிக்கும் வித்தைகள் புரிகின்றன.

அப்படியான ஒரு கவிதை..

கடவுளற்ற பெண்ணுலகம்
அநீதியின் சாம்பல் படிந்த
தூக்குமரத்தடியில்
முடிவற்ற வட்டமிடுதல்களில்
இருள்திரண்ட கோரமுகங்களுடன்
நெளியும் துர்தேவன்கள்.
அடிநாக்கில் நஞ்சு நுனிநாக்கில் அமிர்தம்
கதவுதட்டி திறந்தமேனியைக் காவு கேட்கிறது
பிணந்தின்னும் வேட்டை நாய்களின் உலகம்.
வெளிச்சத்தை மறைக்கும் பொந்துகளில்
வெறித்த கண்களுடன் சீறும்
இருதலை நாகம்.
வழக்கமான துரோகம்
குழையும் வக்கிரம்.
காலப்புதரில்
நம்பிக்கைக்குரியவனுமில்லை.
நட்புக்குரியவனுமில்லை.
பூமி அசோகவனம்
மனசுக்குப் பக்கம்
தகப்பனாய் யாருமில்லை.
நினைவின் ரணங்களுடன்
அரைபட்ட தனிமை.
அம்மணத்தோடு
தொடர்பறுந்து கிடக்கிறது.
ஒண்டியாய் எரியும்
கடவுளற்ற பெண்ணுலகம். (பக் 47)

தவசியின் நிழலற்ற தூரம்... தூரங்கள் கடந்தும் பயணிக்க வேண்டும்.

"படிகளில் ஏறுவது படிகளைத் தாண்டத்தான்"

கவிதை "சித்தனுக்கு" வாழ்த்துகள்.

-கடவுளற்ற பெண்ணுலகிலிருந்து புதியமாதவி.

கவிதை தொகுப்பு: நிழலற்ற தூரம்,
கவிஞர் தஞ்சை தவசி. அமிர்தாலயம் வெளியீடு.
104 பக், ரூ.100, பதிப்பகம் : தமிழ்வெளி,
(நூல் விற்பனை உரிமை) தமிழ்வெளி: 9094005600

தொடர்
தராசு ஷ்யாம்
shyamtv@gmail.com

# அமணமாகிய சமணம்

# 4

**அரசியலில் மைந்தர்களை விட எப்போதுமே மைத்துனர்கள் ஆபத்தானவர்கள். மக்களுக்குப் பதில் சொல்லவேண்டிய கட்டாயம் இல்லாமல் அதிகாரத்தின் அண்மைச் சுகத்தை அனுபவிப்பவர்கள் பெரும்பாலும் அவர்கள்தானே?**

மூவாமுதலா வுலகமொரு மூன்றுமேத்தத்
தாவாதவின் பந்தலையாயது தன்னினெய்தி
ஓவாதுநின்ற குணத்தொண்ணிதிச் செல்வனென்ப
தேவாதிதேவனவன் சேவடிசோது மன்றே.

என்று முதல் பா வடித்தார் திருத்தக்கதேவர். அந்த மாயா விநோதச் சொப்பனத்தில் சீவகனின் கதையை அவன் வாயாலேயே கேட்கும் அரிய வாய்ப்பு நமக்கு.

“மூன்று உலகமும் ஏத்தும் தன்மையன்; பேரின்ப வடிவினன்; உயர் குணங்கள் அனைத்தும் தாங்கியவன்; தேவர்களுக்கு எல்லாம் முதன்மையானவன்; அவன் திருவடிகளை வணங்கிப் போற்றுவோமாக!” என்ற திருத்தக்கதேவரின் பொருள் நயம் எல்லா நம்பிக்கைகளுக்கும் பொதுவானது. அருகசரணம்சித்தசரணம்,சாதுசரணம்,தன்மசரணம்என்ற நான்கு வகைகளில் “சித்தசரணம்” என்று இப் பாடலைப் போற்றுகின்றனர்.

தென்னையும், கமுகும், மாவும், பலாவும், வாழையும் செழித்து வளர்ந்த ஏமாங்கத நாடு. வான் மழை அங்கு பொய்க்காததால் தானமும் தர்மமும் சிறந்து ஓங்கின.

காய்மாண்ட தெங்கின்பழம்வீழக் கமுகின்நெற்றிப்
பூமாண்ட தீம்தேன்தொடைகீறி வருக்கைபோழ்ந்து
தேமாங்கனிசிதறி வாழைப்பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம்...

(சீ. சி. 31)

கற்றவர் பரப்பிய அறிவொளியால் நாடு ஒளிர்ந்தது. வணிகர்கள் ஈட்டிய செல்வத்தால் அறம் வளர்ந்தது. கலைகளில் சிறந்த காரிகையர் தங்கள் ஆடல் பாடல்களால் மக்களை மகிழ்வித்தனர். எங்கு பார்த்தாலும் கள்ளுண்டு களித்துப் பாடிய பள்ளுப் பாட்டின் பரவசம்

ஏமாங்கத நாட்டின் தலைநகர் இராசமாபுரம். அகழிகளும், மதில்களும் அரண் காக்க நால்வகைப் படைகளுடன் நானிலம் போற்ற ஆட்சி செய்தான் மன்னன் சச்சந்தன். .

ஒன்பதின் சாண் நடப்பினும் ஒரு காதம் என்று
அஞ்சும்
மென் பஞ்சிச் சீறடியும் மேதக்க விழைவினவே.

(சீ. சி. 179)

என்று வியக்க வைக்கும் விதைய நாட்டு இளவரசி விசயையை மணம் செய்து கொண்டான் அவன். அதன் பின் இடையறா இன்பத்தில் திளைத்த சச்சந்தன் மனம் ஆட்சியில் செல்லவில்லை. முப்பது.. அறுபது என்று மோக நாட்கள் கடந்தன. ஆனாலும் முத்துக்குளிப்பு தொடர்ந்தது. அதனால் முடி வேந்தனின் மனம் முடிவெடுப்பதில் தவறிழைத்தது.

நச்சு நாகத்தின் ஆர் அழல் சீற்றத்தன்
அச்சம்உற்று அடைந்தார்க்கு அமிர்து அன்னவன்
கச்சுஉலாம் முலையார்க்கு அணங்கு ஆகிய
சச்சந்தன் எனும் தாமரைச் செங் கணான்.

(சீ. சி. 157)

என்றெல்லாம் திருத்தக்க தேவர் போற்றிப் புகழும் மன்னன் சச்சந்தன் ஆட்சியை மறந்தான். ஆரணங்கை மட்டுமே நினைத்தான்.

“அதனால் என் தந்தையார் ஒரு பிழையான முடிவை எடுத்தார். அரசியலில் தவறான முடிவுகள் எடுத்தால் பிறகு வரப்போகும் சர்வ நாசத்தைத் தடுக்கவே முடியாது என்பதற்கு அவரே எடுத்துக்காட்டு!” என்று கூறிச் சீவகன் பெருமூச்செறிந்தான்.



“என் தந்தையின் நம்பிக்கைக்குரிய அமைச்சன் கட்டியங்காரன். நான்கு தலைமுறைகளாக அமைச்சியல் அறிந்த குடும்பத்தில் பிறந்த அவனிடம் ஆட்சியைத் தற்காலிகமாக ஒப்படைக்க முடிவெடுத்தார் தந்தை. அதிகாரத்திற்கு அண்மையில் இருப்பவர்களுக்கு நாளா வட்டத்தில் தாங்களே ஆட்சியாளர்களாக வேண்டும் என்ற ஆசை ஏற்படும், எழுத்தாளரே! இந்தச் சாஸ்வத உண்மையைப் புரிந்துகொள்ளத் தவறினார் சச்சந்தனாகிய என் தந்தையார்,” என்று கதையைத் தொடர்ந்தான் சீவகன்.

**விசையையைப் பிரிதல்ஆற்றேன் வேந்தன்நீஆகி**
**வையம்இசை படக்**
**காத்தல் வேண்டும்**

**(சீ. சி. 201)**

“நான் மீண்டும் வந்து பொறுப்பேற்கும் வரை இந்த ஆட்சியை நீ ஏற்றுத் தாங்கி நடத்தவேண்டும்; தம்பியாக உன்னை மதித்துப் பொறுப்பைத் தருகிறேன். ஏற்று நடத்துக!” என்றான் மன்னன் சச்சந்தன். இத்தனைக்கும் நிமித்திகன் ஒருவன் முன்பே சச்சந்தனை எச்சரித்திருந்தான்.

**“உலந்தரு தோளினாய்**
**நீஒருவன்மேல்**
**கொற்றம் வைப்பின்**
**நிலம்திரு நீங்கும்!” (சீ. சி. 204)**

ஆனாலும் நம்பிக்கையும், நங்கை மீதான அளவற்ற விருப்பமும் ஒன்றோடு ஒன்று மோதின. இறுதியில் ஆட்சி கட்டியங்காரனிடம் தரப்பட்டது. வேண்டா விருப்போடு பதவியை ஏற்றுக்கொள்வது போல அவன் காட்டிக்கொண்டான். சச்சந்தன். இல்லற இன்ப மிகுதியால் வளமார் திருநாட்டின் நல்லறத்தை மறந்தான்.

“அடடா!” என்று நாம் வருந்தினோம். சச்சந்தன் இழைத்த அரசியல் பிழை இன்றும் தொடர்கிறேதே என்று கனவுலகிற்கு அப்பால் இருந்த நமது நிஜ மனம் நம்மிடம் கூறியது.

ஆனாலும் நம் கண்கள் சொப்பனத்தில் கனத்துக் கிடந்தன. அமானுஷ்ய உருவம் போல சீவகனே ஆகாயத்திற்கும், பூமிக்குமாய் நிறைந்து நின்றான். அப்போது தன் தாய் கண்ட கனவு பற்றி நம்மிடம் கூறத் துவங்கினான், சீவகன்.

**தொத்து அணி பிண்டி தொலைந்து அற**
**வீழ்ந்தது எண்**
**முத்து அணி மாலை முடிக்கு இடன் ஆக**
**ஒத்து அதன் தாள் வழியே முளை ஓங்குபு**
**வைத்தது போல வளர்ந்ததை அன்றே.**

**(சீ. சி. 223)**

.“நன்கு செழித்து வளர்ந்த அசோகமரம் (சமணர்களின் வணக்கத்துக்குரிய) ஒன்று திடீரெனப் பட்டுப்போகிறது; அடிமரம் காய்ந்து விடுகிறது. அந்த இடத்தில் புதிய செடி ஒன்று முளைக்கிறது. அதன் தலை முடியில் எட்டு மாலைகள் விழுந்து அதை அழகு செய்கின்றன. நான் கண்ட கனவு இது. அது முதல் அடிவயிறு பிசைகிறது என்று என் அம்மா என் தந்தையிடம் தான் கண்ட சொப்பனம் பற்றிக் கூறியிருக்கிறார்கள்!” என்று விளக்கினான் சீவகன்.

விசயையின் கனவு விடுத்த மறைமுக எச்சரிக்கையைப் புறம் தள்ளினான் மன்னன். அது மாபெரும் அரசியல் பிழை! அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் அல்லவா?

“இத்தனைக்கும் என் தந்தையாருக்குக் கனவு சாத்திரம் தெரியும். ஆனாலும் அவர் உண்மைப் பொருள் உரைக்க முற்படவில்லை. பழமை

## சங்க இலக்கியம்
### ஐம்பெருங் காப்பியம்
# சீவக சிந்தாமணி
### (ஆசிரியர் திருத்தக்க தேவர்)



*அழிகிறது; புதுமை தோன்றி வளர்ந்து சிறப்படைகிறது. இதுதான் வாழ்க்கை நியதி என்று கனவு கூறுவதாக மாற்றுப் பொருள் கூறினார். என் தாயின் மனக்குழப்பம் நீங்கவில்லை. ஏதோ பெருந்துன்பம் வரப் போகிறது என்று அவரது உள் மனம் உணர்த்தியது. கனவுகள் பலிப்பதும் உண்டு; பலிக்காமல் போவதும் உண்டு என்று மழுப்பிவிட்டார் தந்தை."*

*அந்த நேரத்தில் அறிவு என்ற அமைச்சன் சீவகனின் தந்தையிடம்-*

**"ஓர் அரும் பொறி (233) புனைவி"**

*என்று அறிவுறுத்தியது கனவின் கூறலாய் நம் காதுகளில் விழுந்தது.*

*கட்டியங்காரன் எதிரியாக மாறிப் போர் தொடுத்தால் தான் அழிந்தாலும் தன் மனைவியும் வயிற்றில் உருவாகும் மகனும் தப்பித்துச் செல்ல வழி ஏற்படுத்த வேண்டும் என்று தன் தந்தை நினைத்ததாகச் சீவகன் தொடர்ந்தான்.*

*அதற்கேற்ற உபாயம்தான் என்ன?*

**அந்தரத்தார் மயனே என ஐயுறும்**
**தந்திரத்தால் தம நூல் கரை கண்டவன்**
**வெம் திறலான் பெரும் தச்சனைக் கூவி ஓர்**
**எந்திர ஊர்தி இயற்றுமின் என்றான்.**

(சீ. சி. 234)

*"மயனுக்கு நிகரான ஒரு தச்சனை அழைத்து மயிற் பொறி ஒன்று செய்து தருமாறு வேண்டினார் என் தந்தை. அது பறக்கும் தட்டாக இருக்கவேண்டும் என்பது அவரது ஆசை. பழைய கந்தல் துணிகளையும், பருத்தியையும், அரக்கையும், நூலையும், பிசினையும், மெழுகையும் வைத்து மயிற்பொறி ஒன்றை வெறும் ஏழேநாளில் பக்குவமாகச் செய்து தந்தான் தச்சன்." என்று விளக்கினான் சீவகன்.*

**பல் கிழியும் பயினும் துகில் நூலொடு**
**நல் அரக்கும் மெழுகும் நலம் சான்றன**
**அல்லனவும் அமைத்து ஆங்கு எழு நாள் இடைச்**
**செல்வது ஓர் மா மயில் செய்தனன் அன்றே.**

(சீ. சி. 235)

*"அதை இயக்குவதற்குத் தக்க விசைப்பொறிகள் அமைக்கப்பட்டன. ஆகாயத்தில் மேலே பறந்து செல்லவும் கீழே இறக்கவும் என் தாயாருக்குக் கற்றுத் தந்தார் தந்தையார்," என்ற துன்ப நாடகத்தின் துவக்கத்தை நமக்குக் கூறினான் சீவகன்.*

**விண்தவழ் மேகம் போழ்ந்து விசும்பு இடைப் பறக்கும் வெய்ய**
**புண் தவழ் வேல் கண் பாவை பொறி இடம் திரிப்ப..**

(சீ. சி. 239)

*ஆட்சியை ஏற்று நடத்திய கட்டியங்காரன் இதையெல்லாம் அறியத் தொடங்கினான். அவன் மனம் பதைபதைத்தது. எண்ண ஏரால் ஏறுக்குமாறாகக் குறுக்குச் சால் ஓட்டினான் அமைச்சன். முன்னொன்றும் பின்னொன்றுமாகப் பேசத் துவங்கினான்.*

*வேந்தன்வந்து சிம்மாசனத்தைத் திரும்பக் கேட்டால் என்ன சொல்வது? அரசபரம்பரையைத் தானே மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்? முடிவேந்தன் முன்வந்தால் காபந்து ராஜாவான தான் பதவி விலகுவது தானே முறை?*

*தர்மப்படி நடப்பதாகக் காட்டிக்கொள்ள விரும்பினான் கட்டியங்காரன். பசுத்தோல் போர்த்திய புலிகளின் அரசியல் அது தானே?சட்டப்படி தான் எல்லாம் நடப்பதாகக் காட்டிக் கொள்வார்கள். ஆனால் திரை மறைவில் அனைத்தும் திட்டப்படி நடக்கும்!*

*அமைச்சரவையைக் கூட்டி "உங்கள் கருத்து யாது? ஆட்சி இனி உனக்கு இல்லை என்று மறுத்துச் சொன்னால் என்ன?" என்று களங்கம் இல்லாத அப்பாவி போல் கேட்டான்கட்டியங்காரன். தருமதத்தன் என்ற அமைச்சர் மறுத்துரைத்தார்.*

**தன்னைஆக்கியதாற்பொலிவேந்தனைப்**
**பின்னைவெளவில்பிறழ்ந்திடும்பூமகள்**
**அன்னவன்வழிச்செல்லின்இம்மண்மிசைப்**
**பின்னைத்தன்குலம்போக்குநர்இல்லையே.**

(சீ. சி. 245)

*"நாட்டு மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். நம்பினார் கெடுவதில்லை என்பது தான் நான்மறைத் தீர்ப்பு. நம்பிக்கைத் துரோகம் நரகத்தில் தள்ளி விடும். உங்களிடம் ஆட்சியைத்தந்தால்எப்போதுவேண்டுமானாலும் திரும்பப் பெறலாம் என்றல்லவா மன்னர் நினைத்தார்? நீங்கள் இப்போது பால்மாறிப் பேசுவது தீட்டிய மரத்தையே கூர்பார்ப்பது போன்றது."என்றனர் அனைவரும்.*

**தீண்டினார் தமைத் தீச் சுடும் மன்னர் தீ**
**ஈண்டு தம் கிளையொடும் எரித்திடும்**
**வேண்டில் இன் அமிர்தும் நஞ்சும் ஆதலான்**
**மாண்டது அன்று நின் வாய் மொழித்**
**தெய்வமே.**

(சீ. சி. 250)

*அரசியலில் மைந்தர்களை விட எப்போதுமே மைத்துனர்கள் ஆபத்தானவர்கள். மக்களுக்குப் பதில் சொல்லவேண்டிய கட்டாயம் இல்லாமல்*

*அதிகாரத்தின் அண்மைச் சுகத்தை அனுபவிப்பவர்கள் பெரும்பாலும் அவர்கள் தானே?*

*கட்டியங்காரனின் மைத்துனன் மதனன் கண் சிவக்கப் பேசினான்; "அரியாசனத்தில் வீற்றிருக்கும் எங்களுக்கு ஏற்பப் இசைப்பாட்டுப் பாட வேண்டியவர்கள் நீங்கள், அறம் காக்க வந்த காவலர்கள் போலப் பேசுவது தகாது!" என்று அவையோரைக் கடிந்தான். .*

என் அலால் பிறர்கள் யாரே இன்னவை பொறுக்கும் நீரார்
உன்னலால் பிறர்கள் யாரே உற்றவற்கு உறாத சூழ்வார்
மன்னன் போய்த் துறக்கம் ஆண்டு வானவர்க்கு
இறைவன் ஆக
பொன் எலாம் விளைந்து பூமி பொலிய யான் காப்பல்.
(சீ. சி. 259)

*ஏமாங்கத நாட்டை ஆளத் தன்னை விடச் சிறந்தவர்கள் யாரும் கிடையாது என்று தோள் தட்டிய கட்டியங்காரன் போர்முரசு கொட்ட வைத்தான். ஆட்சியில் இருப்போர் அடாது செய்வது என்று துணிந்து விட்டால் அருகில் இருப்போர் தர்மத்தை எடுத்துக் கூறியும் காதுகளில் ஏறாது. அல்லவா?*

விளைகபொலிக அஃதேஉரைத்திலம் வெகுளவேண்டா
களைகம்எழுகம் இன்னேகாவலன் கூற்றம்கொல்லும்
வளைகயமடந்தை கொல்லும்தான்செய்த
பிழைப்புக்கொல்லும்
அளவுஅறுநிதியம்கொல்லும் அருள்கொல்லும் அமைக
(சீ. சி. 260)

*என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும் கட்டியங்காரன் புத்திக்கு எட்டவில்லை. தானாகக் கிடைத்த வாய்ப்பு தரைமட்டமாகி விடக் கூடாதே என்ற பதைபதைப்பு அவனுக்கு.*

*அரியணையில் ஏறுவது என்பது ஆயிரத்தில் ஒன்று அல்லவா? அதை நழுவ விடுவது நகைப்புக்கிடம் ஆயிற்றே? வரம் கொடுத்தவன் தலையிலேயே கரம் வைக்கத் துணிந்து படைபலம் பெருக்கினான் அவன்.*

**நீள்நிலமன்ன போற்றி! நெடுமுடிக்குருசில் போற்றி!**
**பூண்அணிமார்ப போற்றி! புண்ணியவேந்தே போற்றி!**
**கோள்நிலைக் குறித்துவந்தான் கட்டியங்காரன்**
(சீ. சி. 264)

*"எழுத்தாளரே.. கட்டியங்காரனின் விசுவாசிகள் அந்தப்புரத்தைச் சுற்றிச் சூழ்ந்தனர். பகை நெருப்பு சூழ்ந்து விட்டது என்று பதைபதைத்தார் என் தந்தையார். என் தாயின் வயிற்றில் வளரும் என்னைக் காக்கும் பொறுப்பு அவர் மனதை வருத்தியது. மயில் பொறியில் ஏறிச் செல்லுமாறு தாய்க்குக் கட்டளையிட்டு விட்டு அவர் போருக்குச் சென்றார்." என்று அந்தத் துன்ப நாடகத்தின் தொடர்ச்சியை வர்ணிக்கத் துவங்கினான் சீவகன்.*

*காதல் கணவனைப் பிரிய விசயை மறுத்தாள். கண்ட கனவு பலிக்கிறதோ என்று பயந்தாள். மன்னன் சச்சந்தன் அவளுக்குத் தேறுதல் கூறினான்.*

சாதலும்பிறத்தல்தானும் தம்வினைப்பயத்தின் ஆகும்
ஆதலும்அழிவும்எல்லாம் அவைபொருட்டு
இயல்புகண்டாய்
நோதலும்பரிவும்எல்லாம் நுண்உணர்வுஇன்மை அன்றே
பேதைநீபெரிதும்பொல்லாய் பெய்வளைத் தோளி.
(சீ. சி. 269)

*"சாதலும், பிறத்தலும் வினைப்பயன். ஆதலும் அழிதலும் இயல்பு. இந்த நுண் உணர்வு இல்லாமல் தான் நோதலும், பரிதலும் ஏற்படுகின்றன.ஒழிகநின்கவலை(சீ. சி. 271)" என்ற மன்னனின் ஆறுதல் மங்கையைத் தேற்றவில்லை. மயங்கினாள் அந்த மாதரசி. "ஊர்திசமைந்தது.. கவலைவேண்டாம் (சீ. சி. 272)" என்று விண்ணில் பறக்கும் மயில் பொறியைத் தன் மனைவிக்கு நினைவூட்டினான் சச்சந்தன். ஆண்களின் தவறுகளுக்குக் காலங்காலமாய்த் தண்டனை அனுபவிப்பது தாய்க்குலம்தானே?*

*மன்னனின் மனச்சாட்சிவாட்டியது! மனைவியைக் கைத்தாங்கலாய் அழைத்து வந்து*

"பறவைஊர்திசேர்த்தினன்..துணைவிசேர்ந்தாள்
(சீ. சி. 272)."

*மயில் பொறி விண்ணில் பறந்து சென்றது. பின்னர்...?*

அடிக்குறிப்பு

**வழுதுணங்காய்**

மதுரை நகரில் விற்பனையான காய்,கனி வகைகள் பற்றிச் சீவகன் குறிப்பிட்டதில் "வழுதுணங்காய்" இடம் பெற்று இருந்தது. அது என்ன என்று பலரும் கேட்டனர். கத்தரிக்காயின் பழந்தமிழ்ப் பெயர் "வழுதுணங்காய். "

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேயினித்த மோரும் – திறமுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந் திட்டசோறு)
எல்லா உலகும் பெறும்.

– அவ்வை

புல்வேளூர் என்ற ஊரில் வாழ்ந்து வந்த பூதன் என்பவன் ஒரு சமயம் அவ்வைக்கு அளித்த விருந்து என்னவென்றால் வரகரிசி சோறு, வழுதுணங்காய் என்ற கத்தரிக்காய்ப் பொரியல் மற்றும் மோர். அது உலகையே பரிசாகத் தந்தது போல என்கிறாள் அவ்வை. பசித்த வயிற்றுக்குத் தானே பாராட்டத் தெரியும்?

**சீவக சிந்தாமணியின் பின்புலம்**

கி.பி. 5–7ஆம் நூற்றாண்டுகளில் சமணமும் பௌத்தமும் பெரிதும் செழித்திருந்தன. மக்களில் பெரும்பாலோர் அத்தகைய சார்பு உடையவராகவே இருந்தனர். மன்னர்களும் பெரும்பாலும் சமண பௌத்த மதங்களைத் தழுவியிருந்தனர்.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் சைவ அடியார்களான நாயன்மார்களும், வைணவ அடியார்களான ஆழ்வார்களும் 'பக்தி' இயக்கத் துணை கொண்டு சமயப் போர் தொடுத்தனர்.

இந்தப் பின்புலத்தில் திருத்தக்கதேவர் இயற்றிய சீவகசிந்தாமணியைப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

–மயிலை சீனி வேங்கடசாமி, (சமணமும் தமிழும்)மற்றும் சில ஆசிரியர்கள்.

சிறுகதை

ஜவ்வாது முஸ்தபா
musthafa9440@gmail.com

# பச்சையம்

“டேய்... மூக்கா... தெக்காலூருல இருக்கிற “உன் ஆலமரத்துல சின்னத இலெ விட்டு இருக்குதடா”

“ஏமி... அபதம் செப்புத்துன்னாவ நெட்டெ”

“லேதுடா மூக்கா... எல்லி சூடு. இப்பதா நேனு சூசி ஒச்சேனு” என்று நெட்டகாளன் சொன்னதும், மூக்கனுக்கு சந்தோசம் பிடிபடவில்லை.

நெட்டகாளன் மூக்கனைப் பார்த்து “உன் ஆலமரம்” என்று சொன்னதில் ஒரு அர்த்தமிருந்தது. ஆமாம், மூக்கனுக்கு தெக்காலூரில் உள்ள அந்த ஆலமரம்தான் அவனுக்குப் பிடித்த இடம், மனைவிக்கு அடுத்த ஒரு தாய்மடி உறவாக அந்த மரத்தை நேசித்தான். உடம்பில் எவ்வளவு களைப்பிருந்தாலும் கொஞ்ச நேரம் அந்த ஆலமரத்திற்கு அருகில் அமர்ந்து விட்டால் போதும் அவனுக்கு இந்த உலகத்தில் கிடைக்காத ஒரு நிம்மதி கிடைத்து விட்டதாக அவன் மனசும்,உடம்பும் சோம்பல் முறிக்கும். பூரித்துப் போவான். அப்படியொரு ஈர்ப்பு அந்த ஆலமரத்தின் நிழல் மீது அவனுக்கு இருந்தது. ஆலமரத்தின் மேலிருந்து காக்கைகளும் குருவிகளும் அவன் மீது எச்சை கழித்தாலும் சலித்துக் கொள்ளாமல், காகிதத்தால் துடைத்தெறிந்து விட்டு தொடர்ந்து அவன் வேலையைப் பார்ப்பான். பெரும்பாலும் காக்கைகள் அவன் அருகில் வந்து அவனை சீண்டிப் பார்ப்பது வாடிக்கை. அவன் வைத்திருக்கும் யாசகச் சட்டியை உருட்டி விட்டு அதிலிருக்கும் மீதப் பருக்கைகளை தின்பது போதாமல் அவன் வைத்திருக்கும் சாக்குப் பையை முன் இழுத்து அதில் அவன் ஏதோ மறைத்து வைத்து இருப்பதாக நினைத்து தென்படும் சிறு துளைகளை பெரியதாக்கும். சில நேரத்தில் காக்கைகளோடு குருவிகளும் சேர்ந்து கொள்ளும். எதையும் அவன் கண்டு கொள்ளாமல் வயிறு நிறைந்தவனாய் பல்லை நோண்டிக் கொண்டு காலை நீட்டி எல்லாத்தையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருப்பான். ஊரில் வெள்ளையும் சுள்ளையுமாய் தென்படுபவர்களை வயது வித்தியாசமில்லாமல் “சாமி”என்றே அழைத்துப் பழகிய அவனுக்கு அந்த ஆலமர நிழலும் சாமியாக இருந்தது.

உடுத்தும் உடைகளாலும்,செய்யும் வேலைகளாலும் ஆதிகால சமுதாயம் ஒரு ஜாதி முத்திரையோடு மனிதர்களை ஏற்றத் தாழ்வாய்ப் பிரித்து வைத்த பழைய காலம் இன்றும் தொடர்வதை அவன் வாலிபத்தில் அவனுள்ளிருந்த வலி இப்போதும் அவன் மனசுக்குள் இருந்தது. இந்த தலைமுறைக்கு அடுத்தாவது மாற்றங்கள் வராதா? என்ற அவனின் வெசனத்தை வெளியில் சொல்ல முடியாமல் தொண்டையில் அகப்பட்ட மீன் முள்ளாய் எப்போதும் அவனுள் ஒரு தவிப்பு இருக்கும். இயல்பு மாறி முரணாய் அவனை யாராவது மரியாதை இல்லாமல் நடத்தும் போது இப்படி அவனுக்குள் எண்ணம் எழும். அவனது சாதி சனம் பிள்ளைகள் பள்ளிக் கூடம் போவதைக் கண்டாலும், எங்கையாவது வெளியில் சண்டை போட்டு வந்த விசியம் கேள்விப் பட்டாலும் உள்ளூற சந்தோசப் பட்டு இது தான் தொடக்கமென்று நினைத்துக் கொள்வான். அவனுக்குள் முரசாய் எத்தனை எண்ணங்கள் ஓடினாலும் அவன் செய்யும் வேலையை மட்டும் அவன் விடுவதாக இல்லை. ஒரு நாள் கோணிப்பையைத் தூக்கிட்டு போகாட்டி கிடைக்கற அஞ்சு,பத்து யார் தருவா? முகம் பார்க்காம மனசார தர்ற தானம் தர்ம காலமெல்லாம் போயிருச்சு, என்னைக்கு ஒருத்தரப் பார்த்து ஒருத்தர் கூட்டம் கூட்டமா சனங்கள் எல்லாம் டவுன நோக்கிப் போக ஆரம்பிச்சாங்களோ அன்னைக்கே எல்லாம் போயிருச்சு. டவுன் பெரிய சாதி, கிராமம் சிறிய சாதி இப்படி நினைக்கறது கூட நல்லாத் தானிருக்கு என்று தூக்கம் வராத நாட்களில் தலைக்கு வைத்த தலகாணியாய் அவனுக்குள் யோசன ஓடிட்டு இருக்கும். இரவு படுக்கை நேரத்தில் பொல்லாத ஏதும் யோசன வந்து விட்டால் போதும்

பாயை மடித்து வைத்து விட்டு தெருவுக்கு வந்து விடுவான். ஒரு காவல்காரனாய் வெளிச்சம் தரும் விளக்குக் கம்பத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பான். இம், வெளிச்சம் எவ்வளவு விசாலமானது,அந்த மாதிரி மனசு இப்ப யாருக்கு இருக்கு? என்று அந்த வெளிச்சத்தை நோக்கி இருந்தவனுக்கு எம்.ஜி.ஆர் தத்துவப் பாடல்கள் மனதில் ஓடும்.

ஒரு குடிகாரன் கதையாய் இரவில் மனசில் ஓடிய விசியங்களை மறந்து விட்டு விடிந்ததும் பழகிய வழக்கத்தோடு சேட்டாங் கடைக்கு எந்த



யோசனையுமில்லாமல் வந்து விடுவான். யாரிடமாவது மன்றாடி "கெட்ட" பேச்சு வாங்கி ஒரு வடை சாப்பிட்டு தேத் தண்ணி சூடாக குடித்து விட்டு, ராமசாமி பெட்டிக் கடையில் வைத்து விற்க முடியாத வாடிப் போன வெத்தலைகளை வாங்கி மடியில் சேர்த்திக் கொண்டு அவன் தொடை தெரிய கட்டி இருக்கற நாலு முழ வேட்டியை ஒரு மாதிரி சுருண்டு தெரிவதை அரைஞான் கயிறோடு "ஓர்சு" படுத்திக் கொண்டு, முழங்கால் வரைக்கும் தொங்கும் கோமணத் துணியை உள்ளே உடலோடு ஒட்டாமல் அது பிளவாக இருப்பதை வேட்டிக்குள் கை விட்டு இரு பக்கமும் இறுக்கிக் கொள்வான். அவன் எப்போதும் சிவப்பு வண்ணத்தில் அரைஞான் கயிறு ரெண்டு சுத்து கட்டி இருப்பான். ஒண்ணு கோமணத்திற்கு, இன்னொன்னு வேட்டிக்கு. அதில் சுருக்குப் பையையும் தொங்க விட்டுக் கொள்வான். சுருக்குப் பையில் ஒண்ணுமே இருக்காது. பேருக்கு சின்ன சுண்ணா டப்பாவும்,கொட்டப் பாக்கும் வைத்திருப்பான்.

அவன் நடக்கையில் அதுவும் "ஆடி"க் கொண்டே இருக்கும். சேட்டாங் கடையில் இன்னொரு தேத் தண்ணீ யார் வாங்கி தருவா? என்று எதிர் பார்த்து கொஞ்ச நேரம் இருந்து விட்டு அப்படியே வெளியில் "பொறுக்கி"யப் ஆகாத தோல் செருப்பின் வார்களோடு,செருப்பு தைக்கும் சாமான்களையும், யாசகம் பெறும் அன்னச் சட்டியையும் ஒரு சாக்கில் திணித்துக் கொண்டு ஒரு நாள் சோளிப்பகவுண்டனூரும், ஒரு நாள் மல்லைய்யாபுரம், பருமருத்துப்பட்டி இப்படி முறை வைத்துப் போனாலும் நட்ட நடு மத்தியானத்திற்கு முன் தெக்காலூர் பக்கம் வந்து ஒரு சந்து விடாமல் சுத்தி விட்டு ஊருக்குள் கிழிந்து போன செருப்புகளை வாங்கிக் கொண்டு அதை தைப்பதற்கு அந்த ஆலமரத்திற்கு கீழ் உட்கார்ந்து,வெயில் மேற்கில் சாயும் வரை பொழுதை ஓட்டி விடுவான். அவன் வழக்கமாய் போகும் சோழிப்ப கவுண்டனூரில் வழி மேலேயே அடுத்தடுத்து மூன்று ஆலமரம் இருந்தாலும் அதன் மேல் எல்லாம் அவனுக்கு ஈர்ப்பு இல்லை. சடவாய் எப்போதாவது அங்கு அவன் புட்டத்தைப் போட்டாலும் வெத்தைலைப் போட்டு இடத்தை நாறடித்து விடுவானென்று அங்குள்ள பெரிசுகள் அவனை இருக்க விடுவதில்லை. அப்படியே கொஞ்ச தூரம் முன்னாடிப் போனால் நங்காஞ்சி அணைப் பிரிவில் கரூர் போகும் சாலையில் எட்டாள் கட்டி புடிக்கற அளவுக்கு ஜடை பின்னாத குமரிகளாட்டம் விழுது தொங்கப் போட்ட பெரிய ஆலமரம் சாலையில் போகிறவர்களின் பார்வையில் குத்தும்படி இருக்கும்.

எப்போதாவது அங்க போகலாம்னு நினைப்பான். அவன் சோலி யெல்லாம் மேற்கும் தெற்குமாய் இருப்பதால் அப்படியேத் திரும்பி விடுவான். ஒரு நாள் கரூர் போவதற்காக எத்தனை மணிக்கு "பேருந்து"வரும் என்று தெரியாமல் முன்னமேப் போய் அந்த ஆலமரத்திற்கு கீழ் அமர்ந்து அவன் ஆசையைத் தீர்த்து கொண்டான். எங்கையாவது படர்ந்த ஆலமரத்தைக் கண்டால் கை அரிப்பு போல


அவனுக்கு “பின்”அரிப்பு வந்து விடும். செத்த அங்க இருந்து போலாமானு யோசிப்பான். கொஞ்ச நாளுக்கு முன் அவன் மகள் மகாலட்சுமிக்கு சீமந்தம் செய்ய துணி வாங்க அவன் மனைவியுடன் ஒட்டன் சத்திரம் போன போது,அங்கு அவன் மனசுல இருக்கிற மாதிரி ஒரு மரம் கூட நகரச் சாலையில் தென்படவில்லை. காளாஞ்சிப் பட்டித் தாண்டி ஒரு பர்லாங் தூரத்திற்கு அத்திக் கோப்பையில் மட்டுமே இரு பக்கமும் புளிய மரத்தைக் கண்டான்,அப்புறம் செக் போஸ்ட் தாண்டி யூனியன் ஆபீஸில் நெடு நெடுவென நெட்டு லிங்க மரமும்,அரச மரமும் நாலைந்து இருந்தது. அது எதுவுமே அவன் மனசைத் தொடவில்லை. நகரம் ஒரு வெறுமையாக இருப்பதாகவே அவனுக்குப்பட்டது. பேருந்திலிருந்து இறங்கியதும் தெற்கு பக்கமாய் உள்ள காய்கறி மார்க்கெட்டைப் பார்த்தான். அடையாளத்திற்கு ஒத்தப் புளிய மரம் மட்டும் தூசிகள் அண்டி புழுதி நிரம்பி இருப்பதைக் கண்டு மௌனமாய் நடந்தான். அவன் எண்ணத்தை அறிந்து அவன் மனைவி சுப்பம்மாதான் சொன்னாள்.

“ஏய்யா முகத்தெ சுண்டுனு வெச்சுட்டு வர்ற. மனவூர் மாதிரி மரம் இங்க இல்லையினு தானே உனக்கு வெசனம். அதெந்தா இக்கட உண்டது. இது டவுனு”

“தெலுசு... ஜல்தி துணி எடு,போவோம்”

“ஆமா... எப்புடோ ஒக்கசாரி சேர்ந்து ஒசத்துன்னாவு... அன்னி மஞ்சிகப் பாரு. வேலைய முடிச்சுட்டு சினிமா ஆட்டத்திற்கு போலாம்”

“ஆமா... அது ஒண்ணுதா குறைச்சலு. போ... நேனு ரானு. அன்னி நீயேப் பாரு”என்று சாரதா சில்க் ஹவ்ஸில் சுப்பம்மாவை உள்ளே நுழைத்து விட்டு கொஞ்ச தூரம் தாராபுரம் சாலையில் அப்படியே நடந்தான். மின்சார அலுவலத்தை கடந்து போனான். ஒரு காலத்தில் பஸ் நிலையத்திலிருந்து இதுவே வெகு தூரம்,இன்னைக்கு அதையும் தாண்டி தீ அணைப்பு அலுவலகம் வரைக்கும் ஊர் வளர்ந்து இருப்பதை கண்கள் விரிய அவன் பார்த்தாலும் இடையில் இரண்டு மர அறுப்பு கடைகள் புதியதாய் தோன்றியதைப் பார்த்து அவன் மனசு பொசுக்கென போனது. அதற்கு மேல் வேடிக்கைப் பார்த்து நடக்க மனசு இல்லாமல் திரும்பினான். வெயில் வேறு அவனைப் பாடாய்ப் படுத்தியது. அப்படியே மேற்கு நோக்கி பழனி போகும் சாலையில் கொஞ்ச தூரம் நடக்கலாமானு யோசித்தான். சாலையின் இருப் பக்கமும் விருப்பாச்சி,சத்திரப்பட்டி வரை தென்னந்த் தோப்புகள் நிறைந்திருக்கும் முருகன் கோயிலுக்கு போகும் போது அதை கண் குளிரப் பார்த்திருக்கிறான். நாளுக்கு நாள் காலம் மாறுவதால் இப்போ எப்படி இருக்கோ?,ஊரில் தண்ணீ இல்லாமல் முத்தாம் தோட்டத்துக்காரர்களின் தென்னை யெல்லாம் பட்டுப் போச்சே அப்படி எதும் ஆகி இருக்குமா? என்று யோசனை செய்து கொண்டு இருந்தவனை



உச்சி மண்டையைப் பிளக்கும் வெயிலின் சூடு பேருந்து நிலையத்திற்கு அவனைத் திரும்ப வைத்தது.

எங்கும் சின்னது பெரியதுமாய் திருப்பூர் மாதிரி தேனீர் கடைகளே ஒட்டன் சத்திரத்தை நிறைத்திருந்தது. அந்த சின்ன நகரத்திற்கு வந்து போவோர்களுக்கு அது களைப்பு போகவும், கொஞ்சம் உட்கார்ந்து பேசவும் அவசியமானதாக இருக்கலாம். மத்தபடி அடையாளமாகச் சொல்ல இங்கு காய்கறி மார்க்கெட்டை விட்டால் வேறு எதுவுமில்லை. ஊர் ஊருக்கு ஒரு சிறப்பு. ஒட்டன் சத்திரத்திற்கு காய்கறி மார்க்கெட் சிறப்பு அவ்வளவு தான் என்று நினைத்துக் கொண்டான்.

பிறந்து வளர்ந்தவூர் பக்கத்தில் என்றாலும் அவன் இப்படி அங்கு வருவது குறைவு. மற்றவர்களைப் போல எதற்கெடுத்தாலும் பொசுக்கென்று வண்டி ஏறி விட மாட்டான். அப்படி ஏறினாலும் அவனின் உடம்பிலிருந்து வர்ர இச்ச நாத்தம் அருகில் யாரையும் அண்ட விடுவதில்லை. ஒரே சண்டையாத் தான் இருக்கும். ஒரு நாள் பக்கத்தில் உட்கார்ந்தவரோட பெரிய சண்டையாகி இடையில இறக்கியும் விடப்பட்டு இருக்கிறான். அன்னைக்கு அவன் பல்லு கூட விலக்காமல் இருந்தான். அவன் மனசில் ஓடுகிற ஏதோவொரு காரணம் பேருந்தில் ஏறுவதைத் தடுத்துக் கொண்டே இருக்கும். அவன் முன்பு நகரத்திற்கு வந்த சமயத்தில் பார்த்திருந்த கடைகளையும்,புதிய தாய் முளைத்திருந்த கடைகளையும் ஒரு சுற்று பார்த்து வந்தவனை சட்டென பேருந்து நிலையத்திற்குள் உள் நுழைய முடியாமல் பெருத்துப் போன வாகனப் வரத்துகள் தடுத்தது. மேலே மோதி விடும் வேகத்தில் பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் திரும்பும் போது காவல்காரரின் விசில் சத்தம் சற்று மட்டுப்படுத்தும். போதாக் குறைக்கு ஓட்டுனர்கள் அவரிடம் வசுவுகளை வாங்கிக் கட்டிக் கொள்வார்கள். தென் பகுதிலிருந்து பழனிக்கும்,திருப்பூருக்கும், கோவைக்கும் அஞ்சு நிமிசத்தில் அஞ்சாரு பேருந்து பூய்பூய்யென்று வந்து போவதும்,பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே காய்கறி மொத்த வியாபாரமும் இருப்பதால் வண்டிகளின் சல...சலப்பிற்குப் பஞ்சமில்லாமல் இருப்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தாலும் வண்டிகளின் வேகமான ஓட்டங்களை கவனித்து கண்களை இமைக்காமல் இருக்க நேருவது அவனுக்கு சிரமாக இருந்தது. இரவு ஒன்பது,பத்தானால் போதும் பேருந்துகளுக்கு பதிலாக பேருந்து நிலைய ஒரு பகுதியை காய்கறிகளை வெளியூர்களுக்கு ஏற்றிச் செல்லும் லாரிகள் வந்து நிறைத்துக் கொள்ளும் அது வேறு விசியம். உயிரை கையில் பிடித்த படி பேருந்து நிலையத்திற்குள் வந்த போது தான் அவனுக்கு “அப்பாடா” என்று இருந்தது.

“ச்சீ... இதுயென்ன பொழப்பு... நகரம்னாலே

**நெட்டகாளைக்கும் மூக்கனைப் போலவே தெக்காலூரிள்ள அந்த ஆலமரம் பிடிக்கும். கொஞ்ச காலமாவே அவன் மூக்கனுடன் சேர்ந்து அங்கு அமர்ந்து தொழிலும் செய்யத் தொடங்கி இருந்தான். ஊரில் இருப்பவர்களின் முகத்தில் அவன் மூச்சும், சவரக்கத்தியும் படாதவர்கள் குறைவுதான்.**

மேல் ஜாதினு நாம் நெனச்சது சரியாத் தான் இருக்கு. பண்ணாடிகளாட்டம் பகட்டும்,பரபரப்பும். நமக்கு இதெல்லாம் ஒத்து வராது. நம்மவூர்தா நமக்கு சரிபடும்,சுப்பம்மா எப்பையோ வந்து தொலைட்டும்,ரெண்டு சேலை எடுக்கறது அம்பது கலைச்சிப் போட்ருவா என்று நினைத்துக் கொண்டே பேருந்து நிலைய கட்டிடத் தூணில் சாய்ந்து உட்கார்ந்தான். புழுதியைப் பரப்பிக் கொண்டு பேருந்துகள் வந்து நிற்பதும்,சனங்கள் அதில் ஓடோடிப் போய் வாண்டிகளை நிறைத்து விடுவதையும் ஆச்சரியமாகப் பார்த்தான். இவ்வளவு சனங்கள் எங்கு போகுதோ என்ன காலமோ என்று அவனுள் ஒரு சலிப்பு எழுந்தது. ஒரு முகர்த்த நாளில் கொடுமுடி கோயில் விசேத்திற்கு போன போது கூட சனக் கூட்டத்தில் சிக்கி அவன் சலித்துக் கொண்டது அவன் நினைவுக்கு வந்தது.

ஊரில் இலவசமாய் கிடைக்கும் தேனீரை மனதில் நினைத்துக் கொண்டே அருகிலிருக்கும் தேனீர்க் கடையில் "காசு"கொடுத்து குடித்தான். அது அவனுக்கொரு நிறைவாக இருந்தது. மடியில் வைத்திருந்த வெத்தலையை எடுத்து வாயில் போட்டு மென்று கொண்டே பேருந்து நிலையத்தின் தெற்குப் புறமாய் உள்ள பாச்சலூர் மலையைப் பார்த்தான். அடர்ந்த மரங்களோடு ஒரு பெரும் பச்சையம் அவனை குளிர வைத்தது. கண்களை அகல விரித்து அந்த பச்சையத்தை விழுங்கி விடுபவனாகத் தொடர்ந்து பார்த்தான். எறும்பு இரையை மேலடக்காக உந்தி தள்ளிக் கொண்டு போவது போல் சிறு பேருந்து ஒன்று மலை ஏறிக் கொண்டு இருந்தது. தெக்காலூரில் இருந்த ஆலமரம் மாதிரி இந்த பாச்சலூர் மலையிலும் ஆலமரம் இருக்குமா? என்று அந்த மலையையேப் பார்த்துக் கொண்டு ஒரு பரவசத்தில் இருந்தவனை திடீரென்று பாலக்காட்டிலிருந்து மதுரை போகும் புகைவண்டி மலையை மறைத்தபடிப் போனது. அந்த புகை வண்டியைத் தொடர்ந்து சரக்கு புகை வண்டியும் வர அவன் மனசு பொசுக்கென சுருண்டன.மலை ஏறும் சிறு பேருந்தின் அழகைப் பார்க்க முடியாமல் போன ஏமாற்றத்தை முகத்தில் பதித்துக் கொண்டான்.

நெட்டகாளைக்கும் மூக்கனைப் போலவே தெக்காலூரிள்ள அந்த ஆலமரம் பிடிக்கும். கொஞ்ச காலமாவே அவன் மூக்கனுடன் சேர்ந்து அங்கு அமர்ந்து தொழிலும் செய்யத் தொடங்கி இருந்தான். ஊரில் இருப்பவர்களின் முகத்தில் அவன் மூச்சும்,சவரக்கத்தியும் படாதவர்கள் குறைவு தான். அந்தளவு அவன் பேர் வாங்கி இருந்தான். வீடு... வீடாய்ப் போய் தொழில் செய்து கொண்டு இருந்தவன் ஒரு கட்டடத்தில் ஒரே இடத்தில் உட்கார ஆசைப் பட்டு மூக்கனோடு சோடி போட்டுக் கொண்டான்.

அதுவும் வெள்ளிக் கிழமையென்றால் விடிந்து விடியாமல் தெக்காலூருக்கு வந்து விடுவான். ஊர் முச்சந்தியில் எல்லோர் பார்வையில் படுவது போல் நின்று விட்டு மெல்ல அந்த ஆலமரத்திற்கு நகர்ந்து விடுவான்.

சாயிபுமார்கள் பெரும் பாலும் தாடி மழிப்பதும்,ஒதுக்கிக் கொள்வதும் வெள்ளிக் கிழமை தான். அன்று அவர்களுக்கு ஒரு நோன்பு நாளாக ஒவ்வொருவரின் மனசுக்குள் சந்தோசமிருக்கும். அவர்களை மனதில் வைத்துக் கொண்டே நேரத்தோடு வருவதை வழக்கப் படுத்திக் கொண்டான். யாரும் கணேஷ் கடைக்கோ,நகரத்திற்கோ முடி வெட்ட போய்விடக் கூடாது என்று பிராத்தனை அவனுக்குள் எப்போதுமிருக்கும்.அவனின் பிராத்தனைகள் எல்லாம் கொஞ்ச நாளாகவே சாம்பலாகப் போய்க் கொண்டு இருந்தது. இளவட்டங்கள் நல்ல கிராப் வெட்டிக் கொள்ள கணேஷ் கடைக்கும் நகரத்திற்கும் போகத் தொடங்கினார்கள். அவர்களைப் பார்க்க அவனுக்கு எரிச்சலாக இருக்கும். "என்னத்தெ இருந்தாலும் என்னைய மாதிரி பொறுமையா, கணக்கா யார் வெட்டப் போறா? எல்லாம் வேசத்துக்காக ஓடுதுக" என்று அவனின் சவரக்கத்தியுடன் இணைபவர்களிடம் தன் மனகுறையைக் கொட்டிக் கொள்வான். வெள்ளிக் கிழமை அதுவுமா சோடாப் புட்டி இப்ராகிம் முதல் போனியாக வந்து விட்டால் அவனுக்கு சந்தோசம் தாளாது. அன்று மடி நிறைந்து விடும். அவர் கஞ்சன் தான். காசு கொடுக்கும் போது சண்டைப் போட்டு சில்லறையாகத் தான் எண்ணிக் கொடுப்பார். அதுவே அவனுக்கு லட்சுமி கரமாக இருக்கும்.

மூக்கனுக்கும்,நெட்டகாளனுக்கும் அந்த ஆலமரம் உள்ளவரை சவுரியமாக இருந்தது. இரண்டு காசும் ஒரே இடத்தில் கண்ணில் கண்டார்கள். எந்த பேய் கண்ணுப் பட்டுச்சோ ஒரு பக்கமாய் ஆலமரம் பட்டுப் போகத் தொடங்கியது. அனேகமாய் சக்கரையம்மாவின் வசவுகளை கேட்க முடியாமல் தான் ஆலமரம் அப்படி ஆகிறதென்று மூக்கனுக்கு ஒரு எண்ணம். ஆலமரக் கிளை சக்கரையம்மா வீடு வரை வளர்ந்து இருந்தது. மத்தியான நேரத்தில் ஊர் சனமே கூடினாலும் அத்தனைப் பேருக்கும் நிழல் தரும். அப்படியொரு அடர்த்தி. இலையுதிர் காலம் வந்து விட்டால் சக்கரையம்மா வீட்டு வாசலை மரத்திலிருந்து உதிரும் இலைகள் நிறைத்து விடும். அவளால் சுத்தம் பண்ண முடியாமல்,தண்ணீரில் போட்ட சுண்ணாம்புக் கல் மாதிரி ஒரு சலிப்பில் கொதித்துப் போவாள். ஆடி மாதமானாலும் அதே கதை தான்.அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் காத்தாட உட்கார்ந்து ஊர் கதைப் பேசி வம்பிழுத்துக்கிறதும் அவளுக்கு பிடிக்காமலிருந்தது.

இதுல ராத்திரி பகலுக்கும் ஓயாத குருவிகளின் சத்தம் வேற. எப்போதாவது குரங்கு வந்துட்டாப் போதும் ஊருக்கே கேட்கற அளவுக்கு குருவிகளின் ஓலம் அவளுக்கு தலைவலியைக் கொடுத்து விடும். போனா போகுதுனு இத்தனையும் சமாளித்து இருந்தவள், இந்த வெள்ளிக் கிழமை வந்துட்டா முடி வெட்டறச் சாக்குல ஆம்பளைக வந்து உட்கார்வது சுத்தமாய் பிடிக்காமல் முகத்தைத் தூக்கி வெச்சுக்கிட்டு யாரையோ திட்டுவது போல் திட்டிக் கொண்டு இருப்பாள். மூக்கனுக்கும், நெட்டகாளனுக்கும் நம்மைத் தான் திட்டுகிறாள் என்று தெரிந்தும் எதும் பேசாமல் ஊமையாக இருந்து விடுவார்கள். பொழப்பும் நடக்கனும், தாகத்துக்கு அவகிட்ட தண்ணீ வாங்கி குடிக்கனுமே என்ற எண்ணம் அவர்களை வாயடைக்க வைத்திருந்தது. சில நேரம்... மூக்கன் "தாய் ... பசியா இருக்குது, எதாவது கொடுங்க" என்பான்.

அவளும் வீட்டிலுள்ளதை மறுக்காமல் தருவாள்.சில நேரம் கறிச் சோறு கொடுத்து கூட அவனை ஆச்சரியப் படுத்தி இருக்கிறாள்.எவ்வளவு தான் அவளிடம் கனிவு இருந்தாலும் அவள் "கரிச்சு"கொட்றனதால தான் ஆலமரம் பட்டுப் போச்சுனு முழுமையாக நம்பினான். இல்லே ஏதாவது மந்திரிச்சு போட்டு இருப்பாள் என்று கூட நினைத்தான். அம்மாவாசை நாளில் மார்க்கப் பட்டி முனியப்பன் கோயிலுக்கு போனால் வேண்டுதல் நடக்கும். அங்க எதும் போயிருப்பாளோ என்றும் அவனுள் எண்ணம் எழுந்தது.

வேர் பிடிப்பின்றி ஆலமரம் சாய்ந்து உயிர் பலி உண்டாக்கி விடுமோ என்று பயந்து ஊர்க்காரர்கள் ஒன்று கூடி வெட்டும் போது அவனும் அருகில் தான் இருந்தான்.மரத்தின் மீது அமர்ந்து பழக்கப்பட்ட குருவிகள் மரம் வெட்டுப் படுவதைக் கண்டு சுற்றிச்... சுற்றிப் பறந்தன. அதன் சத்தங்கள் சாவுக்கு ஓலமிடுவது போல இருந்தது.மூக்கனும் உள்ளுக்குள் பறவையாக அழுதான்.ஆலமரத்தின் வேர் பிடிப்புக்காக வட்டமாய் கட்டி இருந்த திட்டிலிருந்து மேலடிக்கும் ஒரு ஏழெடி உயரத்திற்கு ஆலமரத்தை ஒரு அடையாளத்திற்கு மொட்டையாக வைத்து விட்டு மொத்தக் கிளைகளையும் வெட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டு போகும் போது சில குருவிகள் அந்த வெட்டப் பட்ட கிளைகளில் அமர்ந்து போனதைக் கண்டு அவனுக்கு கண்களில் நீர் கட்டியது.

இந்த ஆலமரத்தின் வயதைப் பற்றி யாரிடம் கேட்டாலும் "அட...நா விபரம் தெரிஞ்சுப் பார்த்ததிலிருந்தே இப்படி தான் இருக்கு"என்பார்கள். நூத்திமூணு வயசு வரை வாழ்ந்த நூர்தீன் சாயிபும் அதே பேச்சைத்தான் சொல்லி இருக்கிறார். அப்போ மூணு தலைமுறைக்கு மேல் வாழ்ந்த மரம் தான். நல்லாத்தா வாழ்ந்திருக்கு நமக்கு தான் குடுப்பின இல்ல. அவனுக்கும் அறுபது வயது தாண்டி இருந்தது. வைரப்பனோ,கோபால் நாயக்கரோ இப்படி யாராவது சுதந்திரப் போராட்டத் தியாகிகளும் ,பிரித்தானிய எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களும் இந்த மரத்தடியில் அமர்ந்து ஆலோசனை செய்து இருக்கலாம்.இல்ல, இடைய கோட்டை ஜமீன் அய்யாவோ,பெரிய பண்ணையாளர்களோ இங்க உட்கார்ந்து பஞ்சாயத்து பண்ணி இருக்கலாம். அப்படிப் பட்ட புண்ணியமான இடத்தில் இனி நமக்கு இங்க வேலையில்ல என்று பெரு வருத்தத்துடன் போனவன் மூன்று மாதமாய் அந்த இடத்திற்கு ஒரு நாள் கூட வரவில்லை.அதன் வலி ஆழமாய் அவன் மனசில் தேங்கி இருந்தது. நெட்டகாளன் மரம் சின்னதாய் கிளை விட்டு இருக்குதுனு சொன்னவுடன் அவனுக்கு போன உயிர் வந்ததாக சந்தோசப்பட்டான்.

**தாய் வயிற்றிலிருந்து கைகளை நீட்டி வெளி வரும் குழந்தையாக சின்னதாய் நாலு இலை விட்டு சிறு கிளையாக வளர்ந்திருக்கும் அந்த மொட்டையாக வெட்டப்பட்ட ஆலமரத்தின் கிளையை மூக்கன் அதிசயமாய் கண் கொட்டாமல் பார்த்தான். அவனுக்குள் ஏற்பட்ட சந்தோசம் பிடிபடாமலிருந்தது.**

"ரேய்..மூக்கா ஏமி யோசன"

"நுவ்வு செப்பிந்தி சந்தோசமா உன்திரா.ரா... போலாம்"

"இல்ல, நீ போய் சூசிரா"

நெட்டகாளன் "நீ போய் வா" என்று சொன்னதும், நண்பர்களோடு கோழிகுண்டு விளையாண்டு கொண்டு இருந்த தன் மகன் வழி பேரனை அழைத்தான்.

"ரே... அம்புளி...."

"ஏமி... தாத்தா"

"ரார தெக்காலூருப் போய் ஒசத்தாமு"

"நேனு ஆடிட்டு இருக்கேன்,நுவ்வு போய்ரா தாத்தா"

பேரனும் கூட வர மறுத்த பின் சங்கடப் படாமல் ஊருக்கு பின் வழியாக ஆற்று பாதையோரம் நடந்தான்.அந்த ஆற்றுப் பாதை சோளியப்பகவுண்டனூர் போவதற்கு முன்பாக பள்ளிக் கூடத்த ஒட்டி அப்படியேத் தெக்கால பிரியும்.அந்த பாதை தான் இப்போது அவனுக்கு சௌரியப் பட்டு இருந்தது. பேருந்து போகும் நேர் தடத்தில் கொஞ்ச காலமாய் அவன் போவதைத் தவிர்த்திருந்தான். அது ஊருக்கு நேராகப் போகும் வழி. தெக்காலுருக்கு நிழற்குடை வந்ததிலிருந்து ஆகாத போகாதவன் எல்லாம் அங்கு ஒன்று சேர்ந்து அந்த பக்கம் போவோர் வருவோர்களை வம்பும் இழுத்து பேசுவது அவனுக்கு பிடிக்கவில்லை.பால்

ஊத்தற செல்லப்பனிடம் அவர்கள் பேச்சுப் பழிப்பதில்லை. ஏதோவொன்றால் "வாங்கடானு"கைலியைத் தூக்கி காட்டி விடுவார். அதற்கு பயந்தே அவரிடம் யாரும் வம்பு செய்யாமல் ஒதுங்கி இருப்பார்கள்.சேலை கட்டிக் கொண்டு பேருந்து படியில் ஏறும் பெண்களுக்கு தான் பெரியப் பிரச்சனை. கெண்டைக் காலுக்கு மேல் சேலை சென்று விடுவதைக் கண்டு "கெண்டை செதில் இல்லாம தளதளனு இருக்குது"என்பார்கள். அவர்களின் வாயை அடைக்க ஊர் பெரியவர்களும் எவ்வளவோ முயன்றும் அவர்களால் எதும் செய்ய முடியவில்லை. மூக்கனை கண்டால் அவர்களுக்கு இன்னும் இளக்காரம் கூடிவிடும். மூக்கன் தன் கோபத்தை வெளிக்காட்ட முடியாமல் உள்ளுக்குள் மேல் கோபம் தீயாய் எரியும்.ஒரு முறை மூக்கனின் பின்புற கோமணக் கட்டுக்குள் மண் அள்ளிப் போட்டு விளையாண்டார்கள்.

"ஏஞ்ச் சாமி இப்படி செய்யறீங்க" கோபப் பட்டான். மூக்கனுக்காக கறிக் கடை வெள்ளையப்பா ராவுத்தர் அவர்களைப் பார்த்து சத்தம் போட்டும் அவர்கள் அடங்கவில்லை.இப்போது அவருமில்லை. அதனாலேயே அந்தப் பக்கம் போவதை விட்டு விட்டான். மல்லையாபுரம் போய் காட்டு வழியாக, பருமத்துப் பட்டி வந்து தெக்காலுருக்கு வரும்போது ஜோதித் தோட்டத்து வழியாக வருவதை வழக்கப்படுத்திக் கொண்டான்.

தாய் வயிற்றிலிருந்து கைகளை நீட்டி வெளி வரும் குழந்தையாக சின்னதாய் நாலு இலை விட்டு சிறு கிளையாக வளர்ந்திருக்கும் அந்த மொட்டையாக வெட்டப் பட்ட ஆலமரத்தின் கிளையை மூக்கன் அதிசயமாய் கண் கொட்டாமல் பார்த்தான். அவனுக்குள் ஏற்பட்ட சந்தோசம் பிடிபடாமலிருந்தது. எந்த அச்சுறுத்தலுக்கும் பின் வாங்காமல் ஒரு வீரத்துடன் போராடி நின்று வாங்கப் பட்ட சுதந்திரம் போல் அந்த கிளை வளர்ந்து இருப்பதைப் பார்க்கும் போது அவனுக்கு ஒரு குளிர் தேசத்தில் இருப்பது போல ஆனது. அந்தளவு அவனுள் சந்தோசம் ஏற்பட்டது. அந்த சிறு கிளையும் அவனூர் வடக்கு நோக்கி நீண்டு இருப்பதை ஒரு கணக்கிட்டு செய்து இன்னும் மகிழ்ச்சியை கூட்டிக் கொண்டான். இது வளர்ந்து பெரிய கிளையாகற வரைக்கும் நாம இருப்பமா? என்ற ஒரு கவலை சட்டென்று அவனுள் எழுந்து அவனை வாட்டியது. முத்தம்மா ஆசி இருந்தா எது நடக்கனுமோ அது நடக்கட்டும் என்று ஒரு மாதிரி தன்னை சமதானப் படுத்திக் கொண்டான்.

"இந்த கிளெ பெரிசா ஆயி முன்ன இருந்த கணக்கா நாலப் புறமும் கிளெ விட்டு காக்கா குருவிக குடும்பம் நடத்த ஒரு சோலையா ஆச்சுனா நல்லா இருக்கு"மென்று அப்போது மனசார நினைத்துக் கொண்டவனின் பார்வை அவன் வழக்கமாய் அமரும் இடம் நிழலில்லாத ஒரு வெறுமை படர்ந்திருப்பதைக் கண்டு வலியாய் உணர்ந்தான்.

மரத்தின் கீழ் வட்டத் திட்டுக்குள் இன்னும் சிறு செடிகள் முளைந்திருந்து.அத்தனையும் அந்த மொட்டையான ஆலமர வேரிலிருந்து முளைத்தாக காட்சித் தந்தன.யாரோ வீட்டு சாம்பலும்,சானியோடு ஆட்டுப் புழுக்கையும் கரைத்து மரத்தைச் சுற்றி ஊற்றி இருந்தார்கள். அந்த ஈரம் இன்னும் காயாமல் இருந்தது.

"டேய்...மூக்கா என்னடா ஆளையேக் காணோம். நல்லா இருக்கியா. ரெண்டு செருப்பும் பிஞ்சு கெடக்குது. பத்து நாளா உன்னத்தான் எதிர் பார்த்துக்கிட்டு இருந்தேன்"

சக்கரையம்மா அவனைப் பார்த்து பேச்சு கொடுத்துக் கொண்டே அவனருகில் வந்தாள்.

அவனுக்கு அவளிடம் பேசப் பிடிக்காமல் மரத்தையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

"என்னடா...பெரிய ஆள ஆயிட்டீயா, பதில் பேச்சக் காணோம். சாமான் எதும் கொண்டு வரலையா"

"இல்ல தாயி... முன்ன மாதிரி நா வேலெ செய்யறதில்லெ, இந்த மரம் இருக்க வரையிக்கும் ஏதோ கொஞ்சம் பொழப்பும், ஒரு சாய்வான நிம்மதியும் இருந்துச்சு. சுப்பம்மாவும் நீ வூட்டோட கெடன்னு சொல்லிட்டா. எனக்கு தான் மனசு தாளாம கிடக்கு. பொழங்கின இடமெல்லாம் மனசுல அப்படியே படமா நிக்கது தாயி.

நெட்டகாளன் சொன்னான். மரம் தளைஞ்சு இருக்குனு. அதான் ஒரு எட்டு வந்து பார்த்துட்டுப் போலாமுனு வந்தேன்"

"அட.... எனக்கும் மரமில்லாத இந்த இடத்தப் பார்க்க பொசுக்குனுதா இருக்கு. மரம் இருக்கற வரைக்கும் வானத்திற்கு திரைத் துணி போட்டமாதிரி இருந்துச்சு.ஊர் கூடி மரத்தெ வெட்டும் போதே எனக்கு மனசு சரியில்ல.எந்த கிளை காஞ்சு போச்சே அதை மட்டும் நறுக்கி விடாம,சுத்தமா எல்லாத்தையும் வெட்டிட்டாங்க. இப்படியொரு மரத்த இனி கண்ணுலப் பார்க்க முடியுமா? இல்ல வளர்த்த முடியுமா? நல்ல நாளுக்கும் கெட்ட நாளுக்கும் நாலு ஊர் சனம் கூடும், பள்ளிக்கூடப் புள்ளைகளும் ஓடிப் புடிச்சு மரத்தச் சுத்தி விளையாடுங்க, இப்போ... காக்கா குருவிகளோட ஒரு துளி சத்தமில்ல. எல்லாம் ஆகாரமில்லாத கணக்கா ஆகிப் போச்சு. மரமில்லாம மொட்டையாத் தெரியற வானத்தப் பார்க்கவே புடிக்கலடா. ஏதோ நோவு வந்த மாதிரி இருக்கு. மெட்ராஸ் டவுன்ல இருந்து வந்த எம் மகனும் மொட்டையான மரத்தெப் பார்த்து மொகத்த சின்னதா வெச்சுக்கிட்டான். அதுதா நம்ம காலத்திலேயே கொஞ்சமாவது வளரட்டும்னு நாந்தாண்டா வயசானவங்களுக்கு கஞ்சி ஊத்தற மாதிரி சாம்பலும், சாணியும் கரைச்சு ஊத்திட்டு இருக்கேன்"

அவள் சொன்னதைக் கேட்டு அவன் முகம் ஆச்சரியத்தால் விரிந்தது. தான் வணங்கும் முத்தம்மாள் சாமி முன் தலையைத் தாழ்த்தி நிற்பது போல் நின்றான்.அவன் கை நரம்புகள் ஒரு மரத்தின் வேராக மண்ணுக்குள் உயிர்ப்பாக இருப்பது போல் காட்சியளித்த நேரத்தில் தான் நாலைந்து மைனாக்கள் ஒன்றுக்கொன்று சண்டைப் போட்ட படி மொட்டை மரத்திலிருந்து சரிந்து அந்த சிறு கிளை மீது உட்கார அப்படியே அந்த கிளை ஒடிந்து மரத்தோட ஒட்டி நின்றது. •

கட்டுரை | டாக்டர் புதேரி தானப்பன்

# குறளும் பொருளும்

## 'அகரமுதல...' எனத் தொடங்கும் முதற் குறளை முன்வைத்து...



யாப்பிலக்கணம் என்றால் செய்யுள் இயற்றுவதற்குரிய இலக்கணம் என்று பொருள்.

யாப்புஎன்னும்சொல்லைஅடிப்படையாகக்கொண்டு யாத்தல் என்னும் சொல் பிறந்தது.

யாத்தல் என்றால் அமைத்தல், இயற்றுதல், செய்தல், கட்டுதல், பிணித்தல், உறுதி செய்தல், பொருத்துதல், உருவாக்குதல், படைத்தல், ஆக்குதல் இப்படிப் இது பல பொருள் குறித்த ஒரு சொல்லாகும்.

இலக்கணம் என்றால் வரையறை, எல்லை, அளவு, அழகு, கட்டுப்பாடு என்றெல்லாம் பொருள்படும்.

1330 திருக்குறளும் யாப்பு என்னும் இலக்கணத்திற்கு உட்பட்டுத்தான் இயற்றப்பட்டுள்ளன என்பதில் யாருக்கும் எவ்வித ஐயமும் இருக்க முடியாது.

இலக்கண வரம்பைத் தன் இயல்பாகப் பெற்றது தமிழ். அதனால், "அகர முதல...." என்று தொடங்கும் முதலாவது திருக்குறளை எடுத்துக்கொண்டு அதன் சிறப்புகளை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**குறளின் இலக்கணம்**

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இது புரியும் தமிழ்.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

இது, புலவர் தமிழ்.

வெண்பா ஐந்து வகைப்படும். அவை,

1) இரண்டடி வெண்பா.

2) மூன்றடி வெண்பா.

3) நான்கடி வெண்பா.

4) பஃறொடை வெண்பா.

5) கலி வெண்பா.

இவை தவிர, சில வெண்பாவும் உள்ளன.

**வெண்பாவுக்குப் பொதுவான இலக்கணம்** :

வெண்பாவில்,

1) தேமா, புளிமா என்னும் மாச் சீர்கள் வரலாம்;

2) கூவிளம் என்னும் விளச் சீர் வரலாம்;

3) தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காயய், கூவிளங்காய் ஆகிய காய்ச் சீர்கள் வரலாம்;

4) இவைதவிர வேறு சீர்கள் வரக்கூடாது;

5) வெண்டளையன்றி பிற தளைகள் வாரா;

6) அடிகள், அளவடி என்னும் நாற்சீரடியாக வரும்;

7) ஈற்றடி முச்சீரடியாக வரும்;

8) ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்;

9) அடிதோறும் எதுகை வரவேண்டும்;

10) பொழிப்பு மோனை வருவது சிறப்பு;

11) செப்பலோசை உடையதாக இருக்க வேண்டும்.

இந்தச் செப்பலோசை மூன்று வகைப்படும்.

1) ஏந்திசைச் செப்பலோசை.

2) தூங்கிசைச் செப்பலோசை.

3) ஒழுகிசைச் செப்பலோசை.

ஈற்றுச் சீரைத் தவிர்த்து மற்ற சீர்கள் முழுவதும் காய்ச் சீர்களாலான வெண்சீர் வெண்டளை வந்தால் அது ஏந்திசைச் செப்பலோசை எனப்படும்.

வெண்பா முழுவதும் ஈரசைச் சீர்களால் ஆன இயற்சீர் வந்தால் அது தூங்கிசைச் செப்பலோசை யாகும்.

வெண்சீரும் இயற்சீரும் கலந்து வந்தால் அது ஒழுகிசைச் செப்பலோசை யாகும்.

12) குறள் வெண்பா இரண்டடிக்குமேல் வராது.

இந்தப் பன்னிரண்டு இலக்கணங்களும் பொருந்தியதாக இந்த முதற் குறள் இருக்க வேண்டும்; இருக்கிறதா என்று பார்ப்போமா?

**முதற்குறளில் அடங்கியுள்ள இலக்கணம்**

அகர, முதல, ஆதி, பகவன், முதற்றே ஆகிய சீர்கள் மாச்சீர்களாக வந்துள்ளன.

கூவிளம் என்னும் விளச்சீர் வரலாம். விளச்சீர் எதுவும் இக் குறளில் வரவில்லை.

'எழுத்தெல்லாம்' என்பது புளிமாங்காய் என்னும் காய்ச்சீர் ஆகும்.

தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் ஆகிய காய்ச் சீர்கள் முன் நேர்வருவது வெண்சீர் வெண்டளை ஆகும். மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளையாகும். 'எழுத்தெல்லா' 'மாதி' -- என்பது புளிமாங்காய், தேமா என்னும் சீர்களாகும். எனவே இங்கே காய்முன் நேர் வந்திருப்பதால் இது வெண்சீர் வெண்டளை யாகிறது.

முதலடி, அளவடி என்னும் நாற்சீரடியாக வந்துள்ளது.

ஈற்றடி, முச்சீரடியாக வந்துள்ளது.

'உலகு' என்னும் ஈற்றுச் சீர் 'பிறப்பு' என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

இரண்டு அடிகளிலும் 'க' என்னும் எதுகை வந்துள்ளது. முதலடியின் முதற்சீராகிய 'அகர' என்பதில் இரண்டாம் எழுத்து 'க' வந்துள்ளது; அதேபோல இரண்டாம் அடியின் முதற்சீராகிய 'பகவன்' என்பதிலும் 'க' என்னும் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்துள்ளது. அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.

இதில் பொழிப்பு மோனை வரவில்லை; அதற்கு மாறாக, ஒரூஉ மோனை வந்துள்ளது.பொழிப்பு மோனை என்பது முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும் வருவது ஆகும். முதற் சீரிலும் நான்காம் சீரிலும் மோனை வருவது 'ஒரூஉ மோனை' எனப்படும். சீர்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.

வெண்பா செப்பலோசையில் இருக்க வேண்டும். இக் குறள் வெண்பாவில் வெண்சீரும் இயற்சீரும் கலந்து வருவதால் இது ஒழுகிசைச் செப்பலோசையாகும். மாச் சீர்களும் விளச் சீர்களும் இயற்சீர் வெண்டளைகளாகும்; காய்ச் சீர்கள் நான்கும் வெண்சீர் வெண்டளைகளாகும்.

குறள் வெண்பா இரண்டடிக்குமேல் வராது. ஆம். 1330 அருங் குறளும் இரண்டடியில் மட்டுமே பாடப்பட்டுள்ளன.

'முதல' என்னும் சொல் வழக்கில் இல்லை. முதல் என்னும் சொல்லுடன் 'அ' இணைந்து, முதல் + அ = முதல என்று ஆயிற்று. 'அகரம்' + முதல என்னும் இரண்டு சொற்களும் சொற் புணர்ச்சியின் காரணமாக, "அகர முதல" என்று ஆயிற்று. தொல்காப்பியர் இதனை,

**"மென்மையும் இன்மையும் வரூஉங் காலை**
**இன்மை வேண்டும் என்மனார் புலவர்"**

தொல். 130

என்னும் நூற்பா மூலம் எடுத்துச் சொல்லுகிறார். அதாவது, நிலை மொழி, 'அம்' சாரியையாக இருந்து, வருமொழியில் மெல்லினமோ இடையினமோ வந்தால் மகரம் கெடும் என்பது இதன் பொருள்.


பொதுவும் சிறப்பும் ஆகிய இரண்டு பெயர்கள் "அகரமுதல" என்னும் சொல்லில் தொக்கி நிற்கிறன. எனவே நமது இலக்கணத்தில் அகரமுதல என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படுகிறது.

முதல + எழுத்தெல்லாம் என்பது புணர்ச்சியின் காரணமாக, "முதல வெழுத்தெல்லாம்" என்று ஆயிற்று.

**"எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே**
**உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்"**

என்பது தொல்காப்பிய நூற்பா 141 ஆகும்.

உயிரீற்று நிலைமொழியும் வருமொழி உயிரெழுத்துமாயின் இந்த இரு உயிரெழுத்துகளையும் புணரும் வகையில் 'யகர' 'வகரங்கள்' தோன்றும் என்பது இதன் பொருள்.



எழுத்து + எல்லாம் என்பது புணர்ச்சி விதியின்படி எழுத்தெல்லாம் என்றாகிறது. இதற்குத் தொல்காப்பிய நூற்பா,

**"எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி**
**அக்கின் இறுதி மெய்ம்மிசையொடும் கெடுமே**
**குற்றியலுகரம் முற்றத் தோன்றாது".**

தொல் - 128

என்பதாகும். எத்தகைய பெயர் முன்பும் வல்லெழுத்து வருமானால் இடையில் இருக்கும் அக்குச் சாரியையின் கடைசியில் இருக்கும் குற்றியலுகர வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்றிலும் தோன்றாது என்பது இதன் பொருள்.

அதாவது, 'எழுத்து' என்னும் சொல்லின் 'து' வின்மீது ஏறி நிற்கும் உகரம் கெட்டு 'எழுத்(த்) எல்லாம் என்று ஆகியது. ஈற்றெழுத்து முன் உயிர் தனித்து இயங்காது. எனவே "எழுத்தெல்லாம்" என்று ஆனது.

"எழுத்தெல்லாம் + ஆதி என்பது புணர்ந்து "எழுத்தெல்லா மாதி" என்றானது. பின்வரும் நூற்பாக்கள் இதனைச் சொல்லுகின்றன. இங்கு மகர மெய்யின்மீது ஆகார உயிர் வந்து ஏறி நிற்கிறது.

**"புள்ளி ஈற்றின்முன் உயிர்தனித்து இயலாது**
**மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே".**

தொல் 138

**" உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"**

**நன்னூல் நூற்பா 204.**

"முதற்றே உலகு" என்பது புணர்ந்து, " முதற்றே யுலகு" என்று ஆயிற்று. இதற்கும் மேலேயுள்ள தொல்காப்பிய நூற்பா 141 பொருந்துகிறது.

இதுபோலவே முதல் + து = முதற்று என்றும் முதற்று + ஏ = முதற்றே என்றும் ஆயிற்று.

எனவே இங்கெல்லாம் சொற் புணர்ச்சியின் இலக்கணம் வெளிப்படுவதைப் பார்க்கிறோம்.

முதற்றே என்பதில் உள்ள ஏகாரம், ஏகாரத்தின் ஒரு வகையான தேற்றேகாரம் ஆகும் என்று பரிமேலழகர் கூறுகிறார். இங்கே ஏகாரத்தின் இலக்கணம் வெளிப்படுகிறது.

முதல என்றால் முதலை உடையன என்று பொருள்; ' முதற்று என்றால் முதலை உடையது என்று பொருள். எனவே 'முதல' என்பது பன்மை; 'முதற்று' என்பது ஒருமை. இங்கே ஒருமை, பன்மை இலக்கணம் வெளிப்படுகிறது.

இக் குறளில் அகரம் என்பது ஆதிபகவனுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது. ஏனெனில் அகரம் என்னும் சொல் 'அ' என்னும் எழுத்தைக் குறிக்கும் சொல்லாகும். இந்த 'அ'என்னும் எழுத்துதான் எழுத்துகளுக் கெல்லாம் முதன்மையான எழுத்தாக இருக்கிறது. அதுபோல ஆதிபகவன் இந்த உலகுக் கெல்லாம் முதன்மையானவராக இருக்கிறார் என்பதாகும்.

"உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" - (1229) என்பது தொல்காப்பிய நூற்பா. இந் நூற்பாவின்படி உவமையும் பொருளும் ஒத்துப் போகின்ற சிறப்பு இந்த முதற் குறளுக்கு உண்டு. இங்கே உவமை இலக்கணம் வெளிப்படுகிறது.

"அகர முதல' என்பதற்கு, 'அகரமாகிய எழுத்தை முதலாக உடைய' என்று மணக்குடவர் விரித்துரைக்கிறார். இதனை இவர் இரண்டாம் வேற்றுமைத் தொகையாகப் பொருள் கொண்டார்.

'அகரமாகிய முதலை உடைய' என விரித்துப் பரிமேலழகர், அதனைப் பண்புத் தொகையாகப் பொருள் கொண்டார்.

'முதல' என்பது அஃறிணைக் குறிப்பு வினைமுற்று என்பாரும் உளர். மணக்குடவரும் பரிமேலழகரும் குறிப்பு வினைமுற்றாகவே கொண்டனர். ஆக, இங்கே இரண்டாம் வேற்றுமைத் தொகை, பண்புத் தொகை, அஃறிணைக் குறிப்பு வினைமுற்று ஆகிய இலக்கணங்கள் வெளிப்படுகின்றன.

மேற்கூறியவற்றிலிருந்து முதல் திருக்குறளில் அடங்கியிருக்கும் இலக்கணங்களைப் பார்த்தோம்.

## முதற் குறளின் சிறப்பு

இனி இந்த முதற் குறளின் சிறப்புகள் சிலவற்றைப் பார்ப்போம்: எழுத்துகளுக்கெல்லாம் முதன்மையாக இருப்பதுமட்டுமின்றி எல்லா எழுத்துகளிலும் 'அ' என்னும் ஒலி கலந்தே உள்ளது.

"அகர முதல எழுத்தெல்லாம்" என்று வள்ளுவர் சொல்லுகிறார். அதாவது, " எழுத்துகள் எல்லாம் அகரத்தை முதலாவதாகக் கொண்டிருக்கின்றன என்று இதற்குப் பொருள்.

"எழுத்துகள் எல்லாம்" என்றால் என்ன பொருள்? "தமிழில் உள்ள 247 எழுத்துகள் எல்லாம்" என்று பொருளா? அல்லது "உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் உள்ள எழுத்துகள் எல்லாம்" என்று பொருளா? என்னும் ஒரு வினா எழுகிறது. "தமிழ் மொழியில் மட்டுமின்றி உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் உள்ள எழுத்துகளில் எல்லாம்" என்பதும் இங்கே விடையாக அமைகிறது.

பரிமேலழகரும், "தமிழ் எழுத்துக்கேயன்றி வட எழுத்திற்கும் 'முதல்' ஆதல் பற்றி 'எழுத்தெல்லாம்' என்றார்" என்று கூறுகிறார்.

"எல்லாம்' என்பது பெய்யப்பட்டிருத்தல் வெறுஞ் செய்யுளோசை நிரப்பலுக்கு மட்டுமன்று; எழுத்தெனக் கூறின், தாம் தமிழில் நூல் யாக்கப் போந்தமையான் மக்கள் 'எழுத்து' என்பதைத் தமிழ் எழுத்தென்று கொள்ளுதற்கு இடமுண்டாகுமென்று கருதி அதைத் தகையவும் உலகிலுள்ள மொழிகளின்

எழுத்துக்களை எல்லாம் குறிக்க வேண்டியும் ஆசிரியர் (திருவள்ளுவர்) ‘எழுத்தெல்லாம்’ என்று விளக்கமாகக் கூறினார்” என்று திரு வி க அவர்கள் விளக்குகிறார்.

தமிழ் மொழியில் ‘அ’ என்னும் எழுத்துதான் முதல் எழுத்து என்பது நமக்குத் தெரியும்.

இவ் வுலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளோ இருக்கின்றன. மொழி இல்லாத மக்களே இருக்க முடியாது. வள்ளுவர் காலத்தில் அவர் இருந்த நிலப்பகுதியில் தமிழ் மொழியுடன் வடமொழி, பிராகிருதம், பாலி மொழி போன்றவையும் மக்களது புழக்கத்தில். இருந்திருக்கலாம். தவிர ஒருசில அயல் நாட்டவர் வணிகத்தின் பொருட்டும் வேறு சில காரணங்களுக்காகவும் வந்திருப்பார்கள். அவர்கள் மூலமாகச் சில மொழிகள் உலகில் நிலவுவதை வள்ளுவர் அறிந்திருக்கலாம். அதனால் ஒருசில மொழிகளைத் தெரிந்து கொண்டு, வள்ளுவர் ‘எழுத்தெல்லாம்’ என்று உலகத்திலுள்ள அனைத்து மொழிகளையும் பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்க முடியாது. ஆனால் வள்ளுவர் தமது அறிவின் ஆற்றலாலும் தொலைநோக்குப் பார்வையாலும் “ உலகில் உள்ள மொழிகளின் எழுத்துகள் எல்லாம் அகரத்தை முதலாவதாகக் கொண்டிருக்கின்றன” என்று கூறாமல் கூறுகிறார். இது எப்படிச் சாத்தியமாயிற்று என்பது நமக்கு உள்ளுந்தோறும் உள்ளுந்தோறும் வியப்பை அளிக்கிறது.

உலகில் உள்ள எந்த ஒரு மொழியை எடுத்துக் கொண்டாலும் அதன் முதல் எழுத்து ‘அ’ என்னும் எழுத்தைத்தான் முதலாவதாகக் கொண்டிருக்கிறது. எடுத்துக் காட்டாகக் கீழ்க்காணும் அனைத்து மொழிகளும் அகரத்திலேயே தொடங்குவதைக் காணலாம்.



தமிழ்..........................................அ
தெலுங்கு...............................அ
மலையாளம்........................அ
கன்னடம் ..............................அ
துளு ..........................................அ
இந்தி..........................................அ
வங்காள மொழி ..............அ
சமக்கிருதம் ..........................அ
ஆங்கிலம்..............................அ (A)
சீன மொழி ..........................அ
கிரேக்க மொழி .................அல்ஃபா
இலத்தீன் மொழி.............அ (A)
ஹீப்ரு மொழி ....................அலீஃப்
பிரஞ்சு மொழி..................அ
ஜெர்மன் மொழி .............அ
உருது மொழி.......................அலீஃப்
பார்ஸி மொழி ..................அ (A)
பெர்ஷியன் மொழி ........அலீஃப்
ஜப்பான் மொழி..............அ (A)
துருக்கி மொழி ..................அ (A)
சிங்கள மொழி ..................அ (A) - 60

‘எழுத்தெல்லாம்’ என்பதற்கு, “ஒலி வடிவம், வரி வடிவம் ஆகிய உலக மொழிகளில் உள்ள எழுத்துகள் எல்லாம்” என்று திரு வி க அவர்கள் பொருள் கொள்கிறார். மேலும், “பல்வேறு நாகரிகம் உடைய மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் அகர ஒலியை முதலாவதாகக் கொண்டிருத்தல் வியப்பே ஆகும்” என்றும் அவர் கூறுகிறார்.

தொல்காப்பியம், “எழுத்தெனப் படுப அகர முதல” என்று தொடங்குகிறது. இத் தொடக்கத்தையே வள்ளுவர் தமது முதற் குறளின் தொடக்கமாக வைத்துள்ளார்.

திரு வி க அவர்கள் கூறுவதுபோல,“வள்ளுவப் பெருமானின் உவமைத் திறன் வியக்க வைப்பதாக உள்ளது; அவர் பாட்டின் திறம் வியக்க வைப்பதாக உள்ளது; அவரது சிறு சிறு சொற்கள் வியக்க வைப்பதாக உள்ளன; இச் சொற்களின் ஆழம் வியக்க வைப்பதாக உள்ளது; சொற்களின் அமைப்பு வியக்க வைப்பதாக உள்ளது; அவற்றின் அழுத்தம் வியக்க வைப்பதாக உள்ளது; அவற்றின் ஆற்றல் வியக்க வைப்பதாக உள்ளது; அவற்றின் நுட்பம்,

அவர் உணர்த்திய உடைமைப் பொருள், ஒருமையாய் முடித்த முடிவு, இவை யாவுமே வியக்க வைப்பதாய் உள்ளது!”

**கட்டுரையாளர்: செயலாளர்,**
**டெல்லி தமிழ் வளர்ச்சிக் கழகம், புது டெல்லி**

நேர்கண்டவர்: க. சந்திரசேகரன்
muhilnilavu@gmail.com

# ஓலைச்சுவடிகளாய் இருக்கும் 6000 சித்தமருத்துவ நூல்களையும் அச்சில் கொண்டுவர வேண்டும்

## மருத்துவர், டாக்டர் அருள்அமுதன் | நேர்காணல்

சித்தமருத்துவர், டாக்டர் அருள்அமுதன், குமரி மாவட்டம் மணவாளக்குறிச்சிக்கு அருகிலுள்ள தட்டான்விளை என்கிற கிராமத்தில் சித்தமருத்துவப் பரம்பரையில் பிறந்து வளர்ந்தவர். 12 ஆண்டுகள் பள்ளியிலும் 12 ஆண்டுகள் கல்லூரியிலும் படித்தவர். சித்த மருத்துவத்தில் பட்டம் (BSMS) பெற்றதற்குப் பிறகு எம்.டி.(MD) பட்டமும் பெற்றவர். அதனைத் தொடர்ந்து மருந்தியலில் M.Sc Pharmacology முதுநிலைப் பட்டமும் புற்றுநோயாளிகளுக்கு ஏற்படும் பக்கவிளைவுகளைக் குணப்படுத்தும் நெய்ச்சட்டிக் கீரை என்னும் பொருளில் பி. எச். டி. படித்து டாக்டர் பட்டமும் பெற்றவர். கர்நாடக மாநிலம் மணிப்பாலில் உள்ள மணிப்பால் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராய்ப் பணிசெய்கிறவர். தனி ஒரு சித்தமருத்துவராய் மட்டும் இல்லாமல் தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதியாய் நின்று வலிமையான சட்டப் போராட்டத்தை முன்னெடுத்து மணிப்பால் பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவச் சிகிச்சைப் பிரிவு தொடங்கக் காரணமானவர். தற்போது மணிப்பால் பல்கலைக் கழகத்தில் தொடங்கப்பட்டுள்ள சித்த மருத்துவப் பிரிவுக்கு பொறுப்பு மருத்துவராய் நியமிக்கப்பட்டுள்ளார். அவரைச் சந்தித்து உரையாடியதிலிருந்து....

**பள்ளியில் படிக்கிறபோதே சித்த மருத்துவராக வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டதா?**

*இல்லை. நான் பொறியியல் கல்வி படிக்கத்தான் விரும்பினேன். அதன்படி சென்னையிலுள்ள SSN கல்லூரியில் சேர்ந்து ஒருமாதம் வகுப்புக்கும் போய்க்கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் கடுமையான டைபாய்டு காய்ச்சல் வந்துவிட்டது. அதனால் தொடர்ந்து சென்னையிலேயே தாக்குப்பிடிக்க முடியாமல் கிராமத்துக்கே வந்துவிட்டேன். பின்னர் சென்னைக்குப் போய் தனிமையில் இருக்க விருப்பமில்லை. அப்போது பொறியியல் கலந்தாய்வு காலமும் முடிந்துவிட்டதால் ஊருக்குப் பக்கத்தில் மாற்றிக்கொண்டு வருவதற்கான சூழலும் இல்லாமல் போய்விட்டது. அந்த நிலையில் தமிழாசிரியரான எனது தந்தையார் சித்த மருத்துவம் படிக்கவும் எனக்காக விண்ணப்பித்திருந்தார். பாளையங்கோட்டை சித்தமருத்துவக் கல்லூரியில் அப்போது இடம் கிடைத்தது. 'பக்கத்து மாவட்டம். அடிக்கடி வீட்டுக்குச் சென்றுவரலாம்' என்ற கணக்கில் சித்த மருத்துவப் படிப்புக்கு வந்தேன். இப்படித்தான் எனது சித்தமருத்துவ வாழ்க்கைத் தொடங்கியது.*

**உங்கள் குடும்பத்தைப் பற்றிச் சொல்லுங்கள்?**

*சிறுவயதில் கைவிரலை பிளேடால் அறுத்துக்கொண்டபோது காயத்திருமேனி தைலத்தை எனது விரலில் சுற்றிக் கட்டி இருக்கிறார் எனது பாட்டி. வெட்டுப்பட்ட சதை ஒட்டிக்கொண்டதோடு விரைந்து குணமாகியும்விட்டது. அந்த அளவுக்கு எனது குடும்பம், என்னுடைய கொள்ளுத்தாத்தா, காலத்திலேயே இரண்டு தலைமுறையாய் சித்தமருத்துவக் குடும்பம்.*

*அவர்களில் பாக்கியநாதன் மற்றும் கண்ணையா இருவரும் மிக முக்கியமானவர்கள். இந்த இருவரில் பாக்கியநாதன் தாத்தா சித்த மருத்துவத்தில் மட்டுமல்லாது மாந்தரீகத்திலும் கெட்டிக்காரராய் இருந்தாராம். ஒருமுறை நாயர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் நாடார் சமூகத்துக்குப் பெண் ஒருவரை மிகக் கேவலமாகப் பொதுவெளியில் திட்டிப் பேசி இருக்கிறார். இந்த*




**சித்த மருத்துவர், டாக்டர் அருள்அமுதன்**

நிலையில் தனது மந்திர சக்தியாலேயே அவருக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்று முடிவெடுத்தவர் வீட்டுக்கு வந்தவுடன் வாசலில் ஒரு வட்டம் வரைந்து அதன்முன்னால் அமர்ந்துகொண்டு மந்திரம்சொல்ல ஆரம்பித்தாராம். சிறிது நேரத்துக்கெல்லாம் பக்கத்து ஊரிலிருந்த அந்த நாயரின் மனைவி மனம் பேதலித்தது மாதிரி வழியோடு நடந்துவந்து வீட்டுவாசலில் வரைந்துவைத்துள்ள வட்டத்துக்குள் வந்து உட்கார்ந்துவிட்டாராம். தகவல் அறிந்து கிராமமே கூடி நின்று வேடிக்கை பார்த்திருக்கிறது. நடந்த நிகழ்வுக்கு நாயர் மன்னிப்புக்கேட்டிருக்கிறார். அதன்பின்னர் அவரது மனைவிக்கு சுயநினைவு வரவைத்திருக்கிறார். எப்படி நான் இங்குவந்தேன் என்றுசொல்லிக்கொண்டே அந்தப் பெண் கணவருடன் வீட்டுக்குத் திரும்பிப்போனாராம்.

அடுத்த தலைமுறையைச் சேர்ந்த கண்ணையா, சித்த மருத்துவத்தில் குழந்தைகள் சிறப்பு மருத்துவராகச் சேவை செய்திருக்கிறார். அவருக்கு அடுத்த தலைமுறையில் வந்த எனது பாட்டியார் மருத்துவத்தைத் தொழிலாகச் செய்யவில்லை. அவ்வப்பொழுது சிறுசிறு மருத்துவமுறைகளை மக்களுக்குச் சொல்லித் தந்திருக்கிறார். அவர்களின் வரிசையில் விட்டகுறைதொட்ட குறைதான் நான். 'நீபெரிய ஆளாகி நமது சித்த மருத்துவப் பரம்பரையை உலகறியச் செய்யவேண்டும்' என்று எனது பாட்டி அடிக்கடி எனக்கு சொல்லிக்கொண்டே இருப்பார்.

எனது குடும்பப் பின்புலம் இன்னதென அறிந்து கொண்டபோது நான் எனது கொள்ளுத்தாத்தா பிறந்து வாழ்ந்த ஊரான முரசங்கோடு என்னும் கிராமத்துக்குப் போய் அங்குள்ள எனது உறவினர்களையெல்லாம் சந்தித்துப் பேசினேன். கொள்ளுத்தாத்தா குழந்தை மருத்துவம் குறித்து அவர் கைப்பட எழுதிவைத்திருந்த குறிப்புகளையெல்லாம் திரட்டினேன். எனினும் இன்னும் பல ஓலைச்சுவடிகள் கைமாறிப்போய்விட்டன என்பதையும் அப்போது அறிந்து பின்னாளில் வருந்தினேன்.

**தமிழ்நாட்டில் சித்தமருத்துவம் படித்துவிட்டு மணிப்பால் பல்கலைக்கழகத்துக்கு எப்படி வந்துசேர்ந்தீர்கள்?**

சித்த மருத்துவத்தில் MD படித்துக் கொண்டிருக்கும்போது எனக்குத் திருமணம் உறுதியாகிவிட்டது. வாழ்க்கைத் துணையாக வந்தவர் பல் மருத்துவர். நான் சித்தமருத்துவம் படிப்பதால் உள்ளூரிலேயே மருத்துவத் தொழிலைச் செய்வேன் என்ற நம்பிக்கையில்தான் மாமனார் எனக்குப் பெண் கொடுத்தார். ஆனால் திருமணம் உறுதியானவுடன் வருங்கால மனைவியிடம் ஒரு கோரிக்கை வைத்தேன். மருந்தியல் துறையில் MSc மேற்படிப்புப் படிக்க வேண்டும். அதையெல்லாம் படித்தால்தான் சித்த மருத்துவத்தை உலகறியச் செய்ய ஏதாவது முயற்சிக்க முடியும். எனவே, அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டேன். அவர் மனப்பூர்வமாய்ச் சம்மதித்தார்.

MD முடித்தபிறகு தமிழ்நாடு உட்பட நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் MSc Pharmacology படிக்க விண்ணப்பித்தேன். BSMS படித்தவர் அதைப் படிக்கத் தகுதியானவர் இல்லை என்று எனது விண்ணப்பத்தை நிராகரித்தனர். இதைப் படித்துவிட்டால் அலோபதி ஊசி, மருந்துகளைப் பயன்படுத்தச் சட்டபூர்வ அங்கீகாரம் கிடைத்துவிடும் என்றும் அது புதிய பிரச்னையைக் கிளப்பிவிடும் என்றும் மறுத்தார்கள். மணிப்பால் பல்கலைக்கழகம் மட்டும்தான் MSc Pharmacology படிக்க இடம் கொடுத்தது. படிப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணத்துக்காக கல்விக்கடன் வாங்கிக்கொண்டேன். அந்த மூன்று ஆண்டுகளும்

என் மனைவியின் வருமானத்தில்தான் வாழ்ந்துவந்தோம்.

கல்வியில் பத்தாம் வகுப்புவரை மட்டுமே படித்திருக்கிற எனது தாயார் கல்வியில் நான் நல்ல உயரத்துக்கு வரவேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருப்பார். எனவே, குடும்பத்தினர் மகிழ்ச்சியடையும் வகையில் பல்கலைக்கழகத்தில் மட்டுமல்ல இந்திய அளவிலும் முதலிடம் பெற்றேன். எனக்குள் ஒளிந்திருந்த ஆற்றலையும் திறமையும் வெளியே கொண்டுவந்த மணிப்பால் பல்கலைக்கழகம், மணிப்பால் மருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளர் பணியும் கொடுத்து என்னை கௌரவித்தது. இப்படித்தான் தமிழ்நாட்டிலிருந்து இங்குவந்து மணிப்பாலில் வேரூன்றினேன்.

**தற்போது மணிப்பால் பல்கலைக்கழகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள சித்தமருத்துவச் சிகிச்சைப் பிரிவுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள். மணிப்பால் பல்கலைக் கழகத்தில் சித்த மருத்துவச் சிகிச்சை தொடங்குவது எப்படிச் சாத்தியமானது?**

அது ஒரு பெரிய போராட்டம். சட்டப் போராட்டம், உரிமைப்போராட்டம் என்றுகூடச் சொல்லலாம்.

2007இல் இந்தப் பல்கலைக்கழகத்துக்குப் படிக்கவந்த நாளிலிருந்தே எனக்கு வகுப்பெடுக்கும் ஆசிரியர்களிடம் சித்த மருத்துவத்தின் சிறப்புகள் குறித்து சொல்லிக்கொண்டே இருப்பேன். சித்த மருத்துவப் படிப்பு, ஆராய்ச்சி பற்றிய எனது ஆசைகளையும் அவ்வப்போது சொல்வேன். அப்படியான நேர்வுகளில் வகுப்பில் என்னை அடையாளம் கண்டு கொண்டவர்தான் பேராசிரியர் டாக்டர் தாரா ஷண்பக். ஒருநாள் என்னைத் தனியாக அழைத்து நீண்டநேரம் பேசினார். ஆராய்ச்சி என்றால் என்ன? எப்படி ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும்; ஆராய்ச்சிக் கட்டுரை எப்படி எழுத வேண்டும் என்பதையெல்லாம் விரல்பிடித்து ஆனா, ஆவன்னா எழுதக் கற்றுத் தருவதுபோல எனக்குச் சொல்லித் தந்தார்.



டாக்டர் வசுதாதேவி



டாக்டர் தாரா ஷண்பக்

தாரா ஷண்பக், சாதாரண ஆள் இல்லை. மருத்துவம் படிக்கும் மாணவர்களுக்காக இதுவரை மூன்று புத்தகங்களை எழுதியுள்ளார். ஆசியாவிலேயே மருத்துவம் பயிலும் மாணவர்கள் அதிகம் வாங்கிப் படிக்கும் நூல்கள் அவருடைய நூல்களாகும். மதுமேக புண்களை சோதனை எலிகளுக்கு உருவாக்கி கீழாநெல்லியைக் கொடுத்து குணப்படுத்தும் எனது முதல் ஆராய்ச்சியை அவரின் வழிகாட்டுதலில்தான் செய்தேன். அது அறிவியல் இதழிலும் வெளியானது. இப்படி ஒவ்வொரு ஆசிரியரிடமும் ஒவ்வொரு ஆராய்ச்சிகளைச் செய்துகாட்டி அவர்தம் அன்பையும் மதிப்பையும் பெற்றேன். அதன்மூலம் அவர்களுக்கு என்மீதும் சித்த மருத்துவத்தின்மீதும் நம்பிக்கை பிறந்தது. மாணவனாய் இருந்த அந்த மூன்று ஆண்டுகளிலேயே பொறியியல், மருத்துவம், பல்மருத்துவம், உயிரிதொழில்நுட்பம், நர்சிங், பார்மசி என அனைத்துக் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்களிடமும் சித்தமருத்துவம் குறித்துப் பேசிக்கொண்டே இருப்பேன்.

2010இல் விரிவுரையாளர் வேலை கிடைத்தவுடன், சித்த மருத்துவத்துக்காக இன்னும் அதிகமாக உழைக்கும் வாய்ப்பு எனக்குக் கைமேல் கிடைத்ததாகவே மகிழ்ந்தேன். நாள் முழுவதும் MBBS, BDS, நர்சிங் மற்றும் துணை மருத்துவப் படிப்புகளைப் படிக்கும் மாணவர்களுக்கு Phormacology பாடம் நடத்தி கேள்வித்தாள் எடுத்து, தேர்வுவைத்து அதை மதிப்பீடு செய்யும் பணிகளுக்காகத்தான் எனக்குச் சம்பளம் வழங்கப்பட்டது. எனினும், நான் தொடர்ந்து சித்த மருத்துவம் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபடவும், அந்த ஆராய்ச்சி முடிவுகளை மருத்துவ மாநாடுகளில் சென்று வெளியிடவும் பல்கலைக் கழகம் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பல்கலைக் கழகத்தின் செலவிலேயே உலகின் பலநாடுகளுக்கும் சென்றுவந்தேன். ஆராய்ச்சி செய்யவேண்டுமானால் அருள் அமுதனிடம் ஆலோசனை கேளுங்கள் என்கிற அளவுக்கு பல்கலைக் கழகத்தில் நான் பேசப்பட்டேன். பி.எச்.டி, படிக்கும் மாணவர்களுக்கு சித்த மருத்துவம் பற்றிய பல ஆராய்ச்சிகளுக்கு ஆலோசனை கூறினேன். இதனால் பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பேராசிரியர்களுக்கும் நெருக்கமானேன். எனது துறைத்தலைவரும் பிஎச்டி வழிகாட்டியும் நவீன மருத்துவருமாகிய டாக்டர் வசுதாதேவி அவர்கள், "Siddha is your passion, Siddha has potential drugs. You should prove it scientifically" என்று அடிக்கடி என்னிடம் சொல்வார். இன்று வரையில் அவர் அளிக்கும் ஊக்கம் பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு முக்கியமானதாகவே கருதுகிறேன்.

இந்தச் சூழலில்தான் அப்போதைய துணைவேந்தரிடம் போய், சித்த மருத்துவத்துறையை இங்கே ஆரம்பிக்க ஆலோசனைகள் சொன்னதோடு, அந்தத் துறையை நான் ஊதியம் இல்லாமல் கூடுதல் பொறுப்பில் பார்த்துக்கொள்கிறேன் என்றும் சொன்னேன். எனது ஆலோசனைகள் அவருக்கு உவப்பானதாய் இல்லை என்று நினைக்கிறேன். உடனே, "உங்களை மாணவர்களுக்கு Pharmacology வகுப்பு எடுக்கத்தான் வேலைக்கு வைத்திருக்கிறோம். சித்தமருத்துவம் முக்கியமென்று நீங்கள் கருதினால் தாராளமாக தமிழ்நாட்டுக்குப் போய் வளர்க்கலாமே"




**கூட்டு மருத்துவ ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை மையத்தின் முகப்பில் மருத்துவர்கள்**

என்று முகத்திலடித்ததுமாதிரி சொல்லிவிட்டார். அதைக் கேட்டவுடன் நடுங்கி, வெலவெலத்துப்போய், வியர்த்துப்போய் அவர் அறையைவிட்டு வெளியே வந்தேன். ஒருவாரம் சரியான உறக்கம் கூட இல்லை. ஆனாலும் வாய்ப்புக்காகக் காத்திருந்தேன். சில வருடங்களில் வினோத்பட் என்கிற புதிய துணைவேந்தர் ஒருவர் வந்தார். சித்தமருத்துவத்தை இணைத்துக்கொண்டு கூட்டு மருத்துவச் சிகிச்சைக்கு என்னால் பங்களிப்புச் செய்ய முடியும், அதற்கான அறிவும் திட்டமும் என்னிடம் இருக்கிறது என்று சொன்னேன். ஏற்கனவே 35 வருடங்களாக ஆயுர்வேதமும், யோகாவும் இங்கே இருக்கின்றன. எனவே சித்த மருத்துவத்தையும் அதனுடன் இணைத்துக்கொண்டு செயல்படுவதில் என்ன தவறு என்று கருதி 2015இல் கூட்டு மருத்துவச் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் (Centre for Integrative Medicine and Research) என்கிற மையத்தை திறந்து வைத்தார். ஆனால் சித்தமருத்துவச் சிகிச்சை அளிக்க கர்நாடகத்தில் அனுமதி இல்லாததால் எங்களால் சித்தமருத்துவச் சிகிச்சைப் பிரிவைக் திறக்க முடியவில்லை.

**அப்புறம்....**

பிறகு, Karnataka Private Medical Essablishment Act-இன் கீழ், சித்தமருத்துவச் சிகிச்சைப் பிரிவைப் பதிவு செய்வதற்கான முயற்சியைத் தொடங்கியபோதுதான் அந்த அதிர்ச்சி காத்திருந்தது. “கர்நாடக மாநிலத்தில் சித்த மருத்துவக் கல்லூரிகள் எதுவும் இல்லை. கர்நாடக மாநிலத்தில் உள்ள எந்த கன்னடரும் BSMS படிக்கவில்லை. இந்த மாநிலத்தின் குடிமக்கள் எவரும் சித்தமருத்துவச் சிகிச்சை வேண்டும் என்றும் கேட்கவில்லை. எனவே, இந்த மருத்துவமுறைக்கு இங்கு அங்கீகாரம் தரமுடியாது என்றும் இதுஒரு போலியான (Fake) மருத்துவமுறை என்றும் அந்த மாநிலத்து அரசு அதிகாரிகள் எச்சரித்து தொடக்க நிலையிலேயே நிராகரித்துவிட்டார்கள்.

ஆனாலும் எனது வேண்டுகோளுக்கு மதிப்பளித்து பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை அலுவலர்கள் மீண்டும் மீண்டும் அரசின் கதவுகளைத் தட்டினார்கள். இந்தமுறை அவர்களிடமிருந்து கடுமையான பதில் வந்தது. “ஒரு புகழ்பெற்ற பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நீங்களே இப்படி ஒரு போலி மருத்துவமுறைக்கு ஆதரவாக வந்து நிற்கலாமா? முதலில் நீங்கள் சொல்கிற மருத்துவர் அருள் அமுதனின் BSMS படிப்புச் சான்றிதழை சரிபாருங்கள். அது உண்மையா? போலியா? என்பது தெரிந்துவிடும்” என்று அரசு அதிகாரிகள் கூறியதை என்னிடம் தெரிவித்து வருத்தப்பட்ட பல்கலைக்கழக சட்டத்துறை அலுவலர்கள், “இதில் இனிமேல் நாங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை. தமிழ்நாட்டு அரசும் ஒன்றிய அரசும் நினைத்தால்தான் முடியும்” என்று கூறிவிட்டார்கள்.

**பெரும் போராட்டமல்லவா நடத்தியிருக்கிறீர்கள்?**

ஆமாம். அடுத்த கட்டமாக, கோரிக்கையை பல்கலைக்கழகப் பதிவாளர் வழியாக கர்நாடக சுகாதாரத் துறைக்கு அனுப்ப வைத்தேன். தொடர்ந்து 5 ஆண்டுகாலம் மங்களூரிலும் பெங்களூரிலும் ஒவ்வொரு அதிகாரியாய்ச் சந்தித்து விளக்கமளிப்பேன். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு கடைசியில் கைவிரித்து விடுவார்கள். பல நேரங்களில் சோர்ந்தும் போனேன். ஆனாலும் நானும் விடுவதாயில்லை. ஒருநாள் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை அலுவலரை அழைத்துக்கொண்டு உடுப்பி மாவட்ட ஆயுர்வேதத் துறையின் தலைமை அதிகாரியைச் சந்தித்தேன். அப்போது அந்த அதிகாரி, “ஆயுர்வேதத்தில் இல்லாதது உங்கள் சித்தமருத்துவத்தில் என்ன இருக்கிறது; எதற்காக புதிதாக ஒரு மருத்துவத்தை இந்த மாநிலத்தில் நாங்கள் தேவையின்றி அறிமுகப்படுத்தவேண்டும்” என்று கேட்டார்.

அவரிடம் நான் கன்னடமொழியில் பதிலளித்தேன். சற்றே நெகிழ்ந்துபோய் கொஞ்சம் மகிழ்வை முகத்தில் வெளிப்படுத்தினார். அப்போது நான் அவரிடம், தமிழ்நாட்டில் அனைத்து மருத்துவமுறைகளுக்கும் தமிழ்நாட்டு அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. ஆனால் தமிழர் மருத்துவமாம் சித்த மருத்துவத்துக்கு தமிழ்நாடு தவிர பிற

> தமிழர் விழாக்களில் சித்த மருத்துவ அமர்வு இருக்கவேண்டும். தமிழ்ச் சங்கத்தில், சித்த மருத்துவ முகாம்கள் நடக்க வேண்டும். அந்தந்த நாட்டு அரசின் உதவியுடன், அங்கு சித்த மருத்துவத்துக்கான அங்கீகாரம் கிடைக்க அவர்கள் முயற்சி செய்ய வேண்டும்.



மாநிலங்களில் இடம்தரப்படுவதில்லை” என்பதைக் கவலையோடு அவருக்கு விவரித்தேன். கொஞ்சம் இறங்கிவந்தவர், “ஆயுர்வேதம் சித்தமருத்துவம் இரண்டும் ஒன்றுதானே! ஆயுர்வேதத்தின் கீழ் உரிமம் வழங்கலாம். தனியாக வழங்க முடியாது” என்றார். “இரண்டும் ஒன்றல்ல. வெவ்வேறானவை. எனவே, சித்தமருத்துவம் என்ற பெயரில்தான் எனக்கு அனுமதி வேண்டும்” என்றேன். ஒன்றும் நடக்கவில்லை.

பின்னர், கர்நாடக முதலமைச்சரின் தனிப்பிரிவு, ஒன்றியஅரசின் பிரதமர்அலுவலகத்தின் தனிப்பிரிவு என எங்கெல்லாம் மனு அனுப்பமுடியுமோ அங்கெல்லாம் அனுப்பிக்கொண்டே இருந்தேன். எந்த முன்னேற்றமும் இல்லை. கடைசி ஆயுதமாக தகவல்பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் ஒட்டுமொத்த கர்நாடக அமைச்சகங்கள், அதிகாரிகள், ஒன்றிய அமைச்சகங்கள் அதிகாரிகள் என ஒருவர் விடாமல் எழுதி, கர்நாடக மாநிலத்தில் சித்த மருத்துவத்துக்கு அங்கீகாரம் அளிக்க எது அல்லது யார் தடையாக இருக்கிறார்கள் என்பதுபோன்று விதவிதமான மனுக்களை எழுதி அனுப்பியும் எந்தப் பயனும் விளையவில்லை. ஆனால், சுகாதாரம் என்பது, மாநில அரசின் அதிகாரத்தின்கீழ் வருகிறது;l எனவே, இதில் ஒன்றிய அரசு தலையிட முடியாது என ஒரு பதில் வந்தது. அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். அதையே ஆயுதமாக வைத்துக்கொண்டு கர்நாடகத்தில் உள்ள அனைத்து சித்த மருத்துவர்களையும் திரட்டிக்கொண்டுபோய் கர்நாடக அரசின் ஆயுஷ் இயக்குநரைச் சந்தித்தேன். கர்நாடகத்திலும் புதுதில்லியிலும் இருந்த “சித்தமருத்துவர்கள் இதில் எனக்கு மிகுந்த பக்கபலமாக இருந்தனர்.

ஒரு வழியாக இடைவிடாத தொடர் போராட்டத்தின் விளைவாக, 2020இல் கர்நாடக அரசு சித்தமருத்துவத்தை அங்கீகரித்து karnataka private Medical Establishment Actஇல் சேர்த்து, அறிவிக்கை வெளியிட்டது. அதன்மூலம், தமிழ்நாட்டில் BSMS படித்த மருத்துவர்களும்கூட கர்நாடகத்தில் சித்த மருத்துவச் சிகிச்சையை அளிக்க வாய்ப்புக் கிடைத்தது. அந்த வகையில், மணிப்பால் பல்கலைக் கழகத்தின் சித்தமருத்துவச் சிகிச்சைப் பிரிவுதான் கர்நாடக அரசின் அங்கீகாரம் பெற்ற முதல் தனியார் மருத்துவமனை. இதை என் வாழ்வின் மிகப்பெரிய சாதனையாகக் கருதுகிறேன்.

**இவ்வளவு போராடி அங்கீகாரம் பெற்ற சித்தமருத்துவச் சிகிச்சைப் பிரிவுக்கு வெளிநாட்டுத் தமிழர்களின் நிதியுதவி எப்படி உங்களுக்குக் கைகூடி வந்தது?**

2015ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சிகாகோவில் நடைபெற்ற மருத்துவ மாநாட்டுக்கு பல்கலைக் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி சென்றிருந்தேன். அங்கு செல்வதற்கு முன்னதாக, “அங்குநான் வருகிறேன். நீங்கள் விருப்பப்பட்டால், உங்கள் இடத்தில் சித்தமருத்துவம் குறித்து கலந்துரையாடலாம்” என்கிற தகவலை அங்குள்ள அனைத்துத் தமிழ்ச் சங்கங்களுக்கும் மின்னஞ்சல் மூலம் தகவல் அனுப்பி இருந்தேன். எந்த நாட்டுக்குச் சென்றாலும் நான் இந்த நடைமுறையைக் கடைப்பிடிப்பது வழக்கம். அதுபோன்ற நேர்வுகளில் மற்ற எந்த நாட்டில் உள்ளவர்களும் பதில் சொன்னதில்லை. ஆனால், சிகாகோவில் உள்ள தமிழ்ச்சங்கத்தினர் எனக்குப் பதில் தந்தனர். அதன்படி மாநாடு முடிந்தபின்னர், சிகாகோவைச் சேர்ந்த ஆனந்தன் அவர்கள், அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார். அங்குள்ள பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சியாளர்களாக இருக்கும் தமிழர்கள் பலரையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து வாஷிங்டன் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்த திரு. பார்த்தசாரதியின் தொடர்பும் நட்பும் கிடைத்தது.

அந்த நேரத்தில் சித்தமருத்துவத்துடன் இணைந்த கூட்டு மருத்துவச் சிகிச்சையின்மூலம் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற மருத்துவராக எழுச்சிபெற்ற ஐயா தெய்வநாயகம் அவர்களின் மருத்துவ வாரிசாக சென்னையில் சித்தமருத்துவச் சிகிச்சை அளித்துக்கொண்டிருக்கும் சித்த மருத்துவர் செல்வசண்முகம் அவர்கள், அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து சித்தமருத்துவப் பரப்புரையை மேற்கொண்டு வந்தார். அவருடனான நட்பும் அன்பும் பின்னால் எனது ஒவ்வொரு முயற்சியிலும் வளர்ச்சியிலும் தொடர்ந்துகொண்டே இருந்தது.

ஒருமுறை வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கக் கூட்டமைப்புகள் அனைத்தும் இணைந்து மினிசாட்டோ நகரில் FETNA விழாவில் கூடியிருந்த சமயம், சித்தமருத்துவம் குறித்த கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. அந்த நிகழ்வில் நான் முன்வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில், அங்குள்ள மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பொறியாளர்கள், தமிழறிஞர்கள் என எண்ணற்ற தமிழன்பர்கள் ஒன்று திரண்டு அங்கு அமெரிக்கப்

பல்கலைக் கழகங்களை அணுகினர்.

அப்போது அவர்களுக்குப் பதில் அளித்த அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள், "தமிழர் மருத்துவம் என்கிற சித்த மருத்துவத்தை முதலில் தமிழ்நாட்டைவிட்டு வெளியே கொண்டுவாருங்கள். இந்திய அரசுதான் இதை வெளிநாட்டுக்குக் கொண்டுவரச் செய்ய முடியும். தமிழ்நாட்டுக்கு வெளியே இருக்கிற தலைசிறந்த மருத்துவ ஆராய்ச்சிப் பல்கலைக் கழகம் ஒன்றில் இதைத் தொடங்க ஆவன செய்யுங்கள் என்றும் வெளிநாட்டு மருத்துவ ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து சித்தமருத்துவ ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்ற வகையில் அந்தத் தெரிவு இருக்க வேண்டும் என்றும் வழிகாட்டுதல் அளித்தார்கள். அதன்படிதான் மணிப்பால் பல்கலைக்கழகம் தேர்வு செய்யப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ் அன்பர்கள் குழுவில் இருந்த ஆறுபேர் எப்போதெல்லாம் இந்தியா வருகிறார்களோ அப்போதெல்லாம் மணிப்பாலுக்கும் வந்து செல்வார்கள். மணிப்பால் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகளிடம் தொடர்ந்து கலந்துரையாடுவார்கள். அதன் விளைவாக, மணிப்பால் மருத்துவப் பல்கலைக் கழகத்தில் சித்த மருத்துவச் சிகிச்சைப் பிரிவைத் தொடங்க பல்கலைக்கழக நிர்வாகம் இசைவு அளித்தது. அதையொட்டி அமெரிக்காவிலுள்ள டாக்டர் சிவசைலம் மற்றும் செந்தாமரை ஆகியோர் நண்பர்களுடன் இணைந்து *Global Centre for Siddha Medicine land Research (GCSMR)* என்ற அமைப்பை வடக்கு அமெரிக்காவிலுள்ள கரோலினாவில் பதிவு செய்தார்கள். சென்னையிலும் அதே பெயரில் ஆராய்ச்சிமையம் ஒன்று பதிவு சய்யப்பட்டது. அதன் தலைவராக மருத்துவர் செல்வசண்முகம் அவர்கள் பொறுப்பேற்றார். இந்தக் கரங்களும் மனங்களும் இணைந்ததன் விளைவாகத்தான் '2020 ஜனவரியில்' மணிப்பால் பல்கலைக்கழகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) ஒன்று செய்யப்பட்டது. அதன்படி GCSMR அமைப்பு, மணிப்பாலில் சித்தமருத்துவ இருக்கை அமைக்க ரூ.2.2 கோடி கொடுக்க முன்வந்தது. அதே அளவு தொகையை பல்கலைக்கழகமும் கொடுத்து கூட்டு மருத்துவச் சிகிச்சைக்குரிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதென முடிவெடுக்கப்பட்டது. இந்த முன்னெடுப்புக்கு உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் உதவ முன்வரவேண்டும்.



டாக்டர் சிவசைலம்



டாக்டர் செந்தாமரை

வலைதமிழ் இணையப் பக்கங்களில் சித்த மருத்துவம் குறித்து நான் எழுதியிருந்த கட்டுரைகளைப் படித்து மிகவும் அகமகிழ்வை வெளிப்படுத்திய கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முன்னாள் விஞ்ஞானி டாக்டர் நடராசன் அவர்கள் 'காக்கைச் சிறகினிலே' இதழில் எழுதும் வாய்ப்பை உருவாக்கித் தந்தார். ஆசிரியர்குழு தாராளமான வாய்ப்பை எனக்கு அள்ளித்தந்தது. அதன் தொடர்ச்சியாக தனிநபர்கள் சிலர் சில லட்சங்களை மணிப்பால் பல்கலைக் கழகத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். மேலும், சித்தமருந்து செயல்நிலையங்கள், தொழில்முனைவோர், தன்னார்வ அமைப்புகள் மற்றும் தமிழ்நாட்டு அரசு இவைகளின் உதவிகள் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது. ஆனால் இதுகுறித்து யாரை அணுகுவது? எப்படி அணுகுவது என்பதுதான் ஒன்றும் தெரியவில்லை.

## சரி, சித்த மருத்துவத்தால் என்னென்ன நோய்களைத் தீர்க்க முடியும், என்னென்ன நோய்களைத் தீர்க்க முடியாது?

சித்த மருத்துவம் மனிதர்களுக்கு வரும் நோய்களை 4448 வகைகளாகப் பிரித்து வைத்திருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மருந்தைப் பரிந்துரைக்கிறது. ஏற்கனவே இருக்கும் நோய்களானாலும் சரி, புதியதாக வரும் நோய்களானாலும் சரி, அதை சித்த மருத்துவத்தின் அடிப்படையில் அணுக முடியும் என்பது மிக முக்கியமானது. ஆனால், அன்றைய கால மனிதனின் உடலும் இன்றைய கால மனித உடலும் ஒன்றல்ல. அதைப்போலவே நோய்களும் தீவிரத்தன்மைகளில் மாற்றங்கள் இருக்கும். மூலிகைகளும், உணவுப் பொருட்களும் தட்பவெப்ப நிலைகளாலும் மரபணுமாற்றத்தாலும் பல மாற்றங்களை அடைந்திருக்கின்றன. எனவே, எல்லாவற்றையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். குறிப்பாக, சித்த மருத்துவத்தில் உள்ள நாடி பார்க்கும் முறையை கருவிகளால் நவீனப்படுத்தினால், நவீன மருத்துவர்களுக்குக் கூட பயன்படும் விதமாக, MRI ஸ்கேனிங்களுக்கு மாற்றாக நாடிபார்க்கும் முறையையே கொண்டுவந்துவிட முடியும் என்பது என் கருத்து.

உணவே மருந்து என்ற அடிப்படையில், நவீன மருந்துகளுடன் இணைந்து நமது பாரம்பரிய உணவுகளும் பத்திய உணவுகளும் நடைபோட முடியும். சிறுநீரக கல்லடைப்பு, சோரியாசிஸ் என்ற தோல்நோய், குழந்தைப் பேறின்மை, பெண்களுக்கான நோய்கள், சைனஸ் எனப்படும் பீனிச நோய் என பல நோய்களுக்கு சித்த மருத்துவம் மட்டுமே போதுமானது. நீரிழிவு நோயில் ஆரம்ப கட்டத்தில் முதல் 10 வருடங்களுக்குள் சித்த மருந்துகள் மட்டுமே போதுமானது. அதன் பின்னர், குணப்படுத்த முடியாத நிலையில் இருந்தால்தான் நவீன மருந்துகளின் துணை தேவைப்படுகிறது. புற்றுநோயைப் பொறுத்தவரை, நவீன மருந்துகளுடன், சித்த மருந்துகளை இணைத்துப் பயன்படுத்த

வேண்டியுள்ளது. டெங்கு, சிக்கங்குனியா, மலேரியா, விஷக்காய்ச்சல்கள், கொரோனா போன்ற நோய்களில், 80% நோயாளிகளை சித்த மருந்துகளை மட்டுமே வைத்து குணப்படுத்தலாம். மீதி நோயாளிகளுக்கு நவீன மருந்துகள் தேவைப்படுகிறது. இருந்தாலும், சித்த மருந்துகளைத் தீவிரமான ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதே எனது கருத்து. இதை தமிழர்கள் தான் செய்ய வேண்டும். உலகின், ஒவ்வொரு இனமும் தனது பாரம்பரிய மருத்துவ அறிவை முன்னிறுத்தித்தான் இன்று தன் பலத்தை காட்டுகிறது. அமெரிக்கா, ஐரோப்பா போன்ற முன்னேறிய நாடுகளில், அவர்களது பாரம்பரிய மருத்துவமுறைகளை அழித்துவிட்ட காரணத்தால், அவர்கள் இன்று சீனாவிடம் இருந்தும் இந்தியாவிடம் இருந்தும் மூலிகை மருத்துவ அறிவை வாங்க வேண்டியிருக்கிறது. எனவே தமிழர்கள் தமிழ் மருத்துவத்தைப் பாதுகாத்து உலகுக்குச் சொல்லவேண்டும். அதன்மூலமே தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெருமை சேரும்.

**கூட்டு மருத்துவச் சிகிச்சை என்றால் என்னென்ன மருத்துவ முறைகளை இணைத்துக்கொண்டு மருத்துவம் செய்யப் போகிறீர்கள்? இப்படி சாதித்துக் காட்டியதற்கு ஆராய்ச்சிகள், ஆதாரங்கள் இருக்கின்றனவா?**

நீரிழிவு நோயாளி அலோபதி மாத்திரை சாப்பிடுகிறார். அலோபதி டாக்டருக்கு தெரியாமலேயே மூலிகை கஷாயமும் குடிக்கிறார். இப்போது இரத்தத்திலுள்ள இனிப்பின் அளவு நன்றாகக் கட்டுப்பட்டால், நவீன மருத்துவர் தனது மாத்திரையால்தான் என்று நினைத்து, அதன் அளவைக் குறைக்கிறார். ஒருவேளை நோய் கட்டுப்படாவிட்டால் தனது மருந்து வேலை செய்யவில்லை என்று நினைத்து, அளவை அதிகப்படுத்துவார் அல்லது மருந்தை மாற்றுவார். ஆனால், நோயாளி தான்தோன்றித்தனமாக தனக்குத் தெரிந்த அனைத்து மருத்துவமுறைகளையும் தானாகவே எடுத்துக்கொள்வார். ஆனால், சித்த மருத்துவரிடம் சென்றால், உடனே அனைத்து அலோபதி மாத்திரைகளையும் நிறுத்துங்கள் என்பார். அல்லது இரண்டையும் சேர்த்து சாப்பிடுங்கள் என்பார். இங்கு நோயாளிக்கு எது தேவையென்பதை எவரும் முடிவு செய்யும் நிலையில் இல்லை. இது மிகவும் ஆபத்தானது. ஒரு மருத்துவர்தான் ஒரு நோயாளிக்கு என்னென்ன தேவையென்பதை முடிவு செய்யவேண்டும். ஆனால், இன்றைய மருத்துவர்கள், அவர் சார்ந்த மருத்துவத்தைத் தவிர மற்ற மருத்துவமுறைகளைப் பற்றி தெரியாமல் இருப்பதால், அவரால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை. எந்த இரண்டு அல்லது மூன்று மருந்துகளைச் சேர்த்துகொடுத்தால், நல்ல விளைவு கிடைக்குமோ, அதை எப்படி கண்டுபிடிப்பது? எதையெல்லாம் சேர்த்துக்கொடுத்தால் ஆபத்து என்பதை எப்படி கண்டுபிடிப்பது? இதற்கான ஆராய்ச்சிகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. இந்த ஆராய்ச்சியைத்தான் கூட்டு மருத்துவ ஆராய்ச்சி என்கிறோம். இப்படி ஒவ்வொரு நோயாளியின் தேவைக்கேற்ப பலவகையான மருத்துவ முறைகளில் இருந்து தேவையானவற்றை எடுத்து, ஒரே நோயாளிக்குக் கொடுப்பதுதான் கூட்டு மருத்துவமுறை ஆகும். இதற்கு அறிவியல் பின்னணி தேவைப்படுகிறது.

உதாரணமாக, இருவேறு சமுதாயத்தைச் சார்ந்த மக்களை நாளை முதல் ஒருங்கிணைந்து கூட்டாக இருக்க வேண்டும் என்று சட்டம் போட்டால் அது நடக்காது. அதே நேரம், இரு குழுவிலிருந்தும் தனித்தனி மனிதர்கள் (ஆணோ, பெண்ணோ), ஒருவருக்கொருவர் பேசி, பழகி, பிடித்துப்போய் நண்பராக, காதலர்களாக, கணவன் மனைவியாக ஆகமுடியும். இதைப்போலத்தான், ஒட்டுமொத்த



சித்த மருத்துவத்தையும், உடனடியாக நவீன மருத்துவத்துடன் ஒட்டவைக்க முடியாது. எங்கு எது தேவையோ, அதை அங்கு ஒட்ட வைப்பதுதான் கூட்டு மருத்துவமுறை, இதற்கு ஆராய்ச்சி தேவைப்படுகிறது. நவீன மருத்துவம்தான் இப்போது *mainstream* மருத்துவமாக இருக்கிறது. இதனுடன், எந்த மருத்துவமுறை கலக்க விரும்பினாலும், அறிவியல் பின்னணி இல்லாமல் கலக்க முடியாது. அந்த அறிவியல் போட்டிதான் இப்போது உலகம் முழுதும் நடக்கிறது. இந்தப் போட்டியைக்கூட தமிழர்கள் இன்னமும் புரிந்துகொள்ளாதது வருத்தம் அளிக்கிறது. ஆயுர்வேதத்தின் பஞ்சகர்மா மற்றும் மசாஜ் வகைகள் இன்று *mainstream* உடன் கலந்துவிட்டார்கள். சித்தாவின் யோகாவை பிரித்து, கலந்துவிட்டார்கள். சீன மருத்துவமான அக்குபஞ்சரை கலந்துவிட்டார்கள். இந்தப்

போட்டியில் தமிழன் சித்த மருத்துவத்தைக் கலக்க வைக்க வேண்டும்.

சென்னையைச் சேர்ந்த மறைந்த நவீன மருத்துவர் தெய்வநாயகம் அவர்கள், எயிட்ஸ் என்ற நோய் இந்தியாவுக்கு வந்தபோது, சித்தாவில் உள்ள ரசகந்தி மெழுகு, அமுக்கரா சூரணம் மற்றும் நெல்லிக்காய் லேகியம், என்கிற மூன்று மருந்துக் கலவைகளையும் *RAN therapy* என்ற பெயரில் நவீன மருந்துகளுடன் இணைத்துப் பயன்படுத்தி வெற்றி கண்டார். இதைப்போல, கோட்டயத்தைச் சேர்ந்த புற்றுநோய் மருத்துவர் சி.பி.மேத்யூ அவர்கள், வெறும் ஆறு சித்த மருந்துகளை மட்டும் நவீன மருந்துகளுடன் கலந்து 34 ஆண்டுகள் பல புற்றுநோயாளிகளைப் பரிகரித்துள்ளார். இந்த இருவரும் மறைந்துவிட்டார்கள். மேற்படி ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்திருந்தால், இந்த 9 சித்த மருந்துகளுக்குமாவது உலக அங்கீகாரம் கிடைத்திருக்கும். இவைகளை உலக அளவில், தமிழர்கள் வியாபாரம் செய்வதற்கான வாய்ப்பும் கிடைத்திருக்கும்.

ஆனால், கூட்டு மருத்துவமுறையில், எந்தெந்த பாரம்பரிய மருந்துகளுக்கு ஆராய்ச்சித் தரவுகள் இருக்கிறதோ, அவைகள் மட்டும் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து செல்லும். மற்றவை மூடநம்பிக்கைகள் என்ற அடிப்படையில், வழக்கொழிந்து போகும் என்பதுதான் உண்மை.

**சித்த மருத்துவம் உலக மக்களிடையே பரவச் செய்ய வேண்டுமென்றால் தமிழ்நாடும் தமிழர்களும் என்ன செய்ய வேண்டும்?**

முதலில் தமிழ்நாட்டுத் தமிழர்களிடம் சித்த மருத்துவம் குறித்த, விழிப்புணர்வு பெருக வேண்டும்.

ஓலைச் சுவடியில் இருக்கும் 6000 சித்த மருத்துவ நூல்களையும் அச்சில் கொண்டுவரவேண்டும். உலகின் பல மொழிகளிலும் சித்த மருத்துவ நூல்கள் மொழிபெயர்த்து வெளியிடப்பட வேண்டும்.

வெறும் 30 சித்த மருத்துவ நூல்களே ஒன்றிய அரசின் *Drug and Cosmetic Act*-ன் கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த 30 புத்தகங்களில் சொல்லப்பட்ட மருந்துகளை மட்டும்தான் தயாரித்து விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. தமிழக அரசு, 6000 புத்தகங்களுக்கும் அங்கீகாரம் கொடுத்து, குறைந்தபட்சம் தமிழகத்துக்குள் தயாரித்து விற்பனை செய்யவாவது அனுமதி கொடுக்க வேண்டும்.

ஆயுர்வேதம் இந்தியா மற்றும் உலகம் முழுதும் பரப்ப என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவோ, அத்தனை முயற்சிகளும் சித்த மருத்துவத்துக்கும் தேவை என்று ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்.

கேரளாவில் ஆயுர்வேதம் அரசின் துணையோடு, சுற்றுலா மற்றும் உலக வணிகச் சந்தையில் கோலோச்சுகிறது. அதைப்போல, தமிழகத்திலும் சித்த மருத்துவச் சந்தையில் இடம்பிடிக்க திட்டங்கள் தீட்ட வேண்டும்.

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ்வொரு சித்த மருத்துவக் கல்லூரி அமைக்க ஒன்றிய அரசுக்கு தமிழ் மக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

உலகில் எங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் சித்த மருத்துவம் இருக்க வேண்டும். தமிழர் விழாக்களில் சித்த மருத்துவ அமர்வு இருக்கவேண்டும். தமிழ்ச் சங்கத்தில், சித்த மருத்துவ முகாம்கள் நடக்க வேண்டும். அந்தந்த நாட்டு அரசின் உதவியுடன், அங்கு சித்த மருத்துவத்துக்கான அங்கீகாரம் கிடைக்க அவர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

நவீன மருத்துவப் பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் சித்த மருத்துவத்துறை கண்டிப்பாக ஆரம்பிக்கப்பட வேண்டும். அங்கு கூட்டு மருத்துவ ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**உங்களது முன்னத்தி ஏர்களைப் பற்றி...**

பாளையில், சித்த மருத்துவம் படிக்கும்போதே, உண்மையான சித்த மருத்துவம் அத்தனையும் கல்லூரிப் பாடத்திட்டத்தில் வந்து சேரவில்லை என்பதையும், அனைத்து BSMS டாக்டர்களும் திறம்பட உருவாக்கப்படவில்லை என்பதையும், ஆராய்ச்சிகள்தான் சித்த மருத்துவத்தை உலகறியச் செய்ய வேண்டியவை என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டேன். அதனால், மூலிகைகள் அடையாளம் காணுதல், மருந்து செய்தல், வர்மம், நாடி பார்த்தல், சிலம்பம், எலும்பு முறிவு கட்டுதல் என பலவற்றில் தேர்ந்த வைத்தியர்களிடம் தேடி அலைந்து, கற்றேன். மூலச்சல் இராஜேந்திரன் ஆசான், பேராசிரியர் சொரணமாரியம்மாள், பேராசிரியர் தேவராஜன், பாபநாசம் சித்தா டாக்டர் மைக்கேல் ஜெயராஜ், பள்ளவிளை வேலப்பன் ஆசான், மூத்தாருண்ணி செல்லத்துரை ஆசான், கன்னியாகுமரி அர்சுனன் ஆசான், முஞ்சிறை சித்தா டாக்டர் மோகன் ராஜ், மணவாளக்குறிச்சி விஷவைத்தியர் கிருஷ்ணன் நாயர், சென்னை செங்குன்றம் ஷண்முகம் வைத்தியர், கோட்டயம் புற்றுநோய் நிபுணர் டாக்டர் சி. பி.மேத்யூ என, எண்ணற்ற, குருமார்களிடம் பழகி கற்றிருக்கிறேன். சித்த மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராக இருந்த சொர்ண மாரியம்மாள், தேவராஜன் மற்றும் மரியஜோசப் ஆகியோர் என்மீது மிகுந்த கவனமெடுத்தார்கள். தமிழ்வழிக் கல்வி கற்ற நான், உலகத்தொடர்புகளுக்காக கல்லூரி காலத்தில் 3 வருடம் தொடர்ந்து *Spoken English* வகுப்புக்களுக்குச் சென்று என்னை தயார்படுத்திக்கொண்டேன். கடல் போன்ற சித்த மருத்துவத்தை எப்படி உலகறியச் செய்வது, எப்படி பாதுகாப்பது, என்னுடைய பங்கு என்ன, உலகில் சித்த மருத்துவம் ஒரு தனி மருத்துவம் என்ற அங்கீகாரத்தை எப்படி வாங்கிக்கொடுப்பது என பல சிந்தனைகளுடன் வாழ்ந்து வருகிறேன். இதெல்லாம் செய்து முடிக்க என் ஆயுள் பத்தாது. ஆனால், ஆரம்பித்துவிட்டால், அடுத்த தலைமுறை அதைப் பார்த்துக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ●

**சிறுகதை** | **மொஹ்சின் ஹமித்**

# தலை கொய்தல்

**தமிழில் : அப்பணசாமி**

[Moth Smoke (Granta/FSG) and The Reluctant Fundamentalist (Penguin/ Harcourt) ஆகிய நூல்களின் ஆசிரியரான மொஹ்சின் ஹமித் (Mohsin Hamid) லாகூரில் வாழ்கிறார். 2007 புக்கர் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டவர். இக் கதை A Beheading எனும் தலைப்பில் கிராண்டா இதழ் 112இல் வெளியானது.]

ஜன்னல்கள் நொறுங்கும் சத்தம் என்னால் கேட்க முடிந்தது. இந்த சத்தங்களை மட்டுப்படுத்த, குளிரூட்டும் சாதன வசதி என் வீட்டில் கிடையாது. நான் படுக்கையில் இருந்து எழுந்து விட்டேன். இன்றிருக்கும் எனது வயதை நான் இன்னமும் எட்டவில்லை என நம்ப விரும்புகிறேன். அல்லது என் பெற்றோரின் வயதை எட்டிவிட விரும்புகிறேன். அல்லது எனது மகனின் வயதுக்கு இறங்கிவிட விரும்புகிறேன். தங்குமிடத்தை தெரிவித்துவிடக் கூடாது என்றும் நானும் அவளும்கூட நம்ப இயலாத ஒரு குரலில் அனைத்தும் நல்லபடியாகவே உள்ளன என்றே அனைவரிடமும் கூறவேண்டும் என்றும் என் மனைவியிடம் கூறிவிட்டதைக் கூற விரும்புகிறேன். கீழே சத்தம் அதிகமாவதை இருவரும் கேட்டோம். “ஏதாவது துணி வைத்து மூடு” என்று நான் அவளிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். ”அதை விட நீங்களே உங்களை துணியால் மூடிக்கொள்வது நல்லது” என்றாள் அவள்.

மின்சாரம் இல்லாததால் எனது அலைபேசி வெளிச்சத்தைப் பயன்படுத்தினேன். ஆட்கள் மரப்படிகளில் தடதடவென ஏறிவரும் சத்தம் ஏற்கனவே கேட்கத் தொடங்கிவிட்டது. உடனடியாகப் படுக்கையறைக் கதவைச் சாத்தித் தாழ்ப்பாளிட்டேன். பல டார்ச் விளக்குகளின் ஒளிக்கற்றைகளில் நிழல்கள் அங்கும் இங்கும் துள்ளிக்கொண்டிருந்தன. ”நான் தான்” என்றேன். உரக்கக் கூறத்தான் விரும்பினேன். ஆனால் குழந்தையின் விசும்பலைப் போலத்தான் வெளிப்பட்டது. ”தயை கூறுங்கள். எல்லாமும் சரியாகத்தான் நடக்கிறது.”

நான் தரைத்தளத்தில் இருக்கிறேன். யாரோ என்னை உதைக்கிறார்கள். கையால் அடிக்கிறார்களா, பிரம்பால் அடிக்கிறார்களா என்ற உணர்ச்சி இல்லை. என் வாய் முழுவதும் ரணத் திரவம் வழிந்தது. என்னால் ஒரு வார்த்தைகூட பேச முடியவில்லை. குமட்டியது. நான்றாக மூச்சுவிட தாடைகளை அகலத் திறந்திருந்தேன். முதுகுக்குப் பின் என் கைகள் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன. மின்சார வயர்களை இணைக்கும் பசை நாடாவால் கைகள் பிணைக்கப்படுவதை உணர்ந்தேன். நீங்கள் சிறுவனாக இருக்கும் போது இதைப்போன்ற பசை நாடாவால் டென்னிஸ் பந்தின்மீது சுற்றிச் சுற்றி அதை இறுக்கமாக்கி கிரிக்கெட் பந்தாக மாற்றிப் பயன்படுத்தியிருப்பீர்கள். என்னைக் குப்புறப் படுக்க வைத்திருக்கிறார்கள். முகம் நொறுங்குவது போன்ற வலி. மயங்குவதற்கு முன் எப்படியோ கத்திவிட்டேன்.

இரண்டு நபர்களுக்கு நடுவில் இருந்தேன். எனது இரண்டு கக்கங்களிலும் தங்களது கைகளைச் செலுத்தி முன் வாசல் வழியாக இழுத்துச் சென்றனர். எவ்வளவு நேரம் கடந்திருக்கிறது என்பது தெரியவில்லை. இன்னமும் இருளாகத்தான் இருந்தது. தெரு விளக்குகள் எரிந்ததன் மூலம் மினசாரம் வந்துவிட்டதை அறிய முடிந்தது. வாசல் காவலாளி இறந்து கிடந்தான். கிழவன், குறுகலாக உடல் மடங்கிக் கிடந்தான். அவன் முகம் மெலிந்து



காணப்பட்டது. நாங்கள் தான் அவன் பட்டினிக்குக் காரணம் என்பது போல கிடந்தான். அவனையும் ஏன் கொன்றார்கள் என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் உடலில் இருந்து ரத்தம் வழிந்துள்ளதா என்பதைத் தேடினேன். ஆனால், அதற்கான அவகாசம் இல்லை.

அவர்கள் நான்கு பேர் என்று நினைக்கிறேன். அவர்கள் 81ஆம்ஆண்டு மாடல் தாமிர வண்ண கொரொல்லா வாகனம் வைத்திருந்தனர். நான் சிறுவனாக இருந்த போது இதுபோன்ற ஒரு மகிழுந்தை நாங்களும் வைத்திருந்தோம். ஆனால், இது மோசமான நிலையிலிருந்தது. அதன் பின்பக்கத்தைத் திறந்து என்னை அதற்குள் திணித்தனர். என்னால் எதையும் பார்க்கமுடியாமல் இருந்தது. எனது முகம் ஒரு பாதி சொரசொரப்பான கார் விரிப்பிலும் மறு பாதி ஸ்டெப்பினி டயரிலும் உரசிக்கொண்டிருந்தது. அதன் ரப்பர் என் மீது ஒட்டிக்கொண்டது. அல்லது அதன் மீது நான் ஒட்டிக்கொண்டிருந்தேன். வாகனத்தை இயக்கும் முயற்சி பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் அதிர்வுகள் நான் பல் மருத்துவர் சிகிச்சையில் இருப்பதைப் போல் உணர்த்தியது. அந்த அதிர்வுகள் என்னைத் துன்புறுத்தின. அது மேலும் அதிகமாகப் போகிறது என்பதை உணர்ந்து அதற்கேற்ப மனதைச் சரிப்படுத்திக் கொண்டு அதனைக் குறைப்பதற்கேற்ற தந்திரங்களை மனதளவில் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

காய்ச்சல் அடிப்பதாக உணர்கிறேன். அதிக வெப்பத்துடனான மலேரியா காய்ச்சல் காய்வதுபோல உடல் தூக்கித்தூக்கிப் போட்டது. இதனால் தூக்கத்தில் இருந்து விழித்துக்கொண்டேன். அவர்கள் என் மகனைக் கொன்றுவிடவில்லை என்று நம்புகிறேன். எனது மனைவி மற்றும் எனது பெற்றோரையும் கொன்றுவிடவில்லை என்று நம்புகிறேன். அவர்கள் என் மனைவியை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி இருக்கமாட்டார்கள் என்றும் நம்புகிறேன். அவர்கள் எனக்கு என்னதான் வதைகளை நிகழ்த்தியிருந்தாலும் இன்னமும் என் முகத்தில் திராவகம் தெளிக்கவில்லை என்றும் நம்புகிறேன். நான் சாக விரும்பவில்லை என்றாலும் சாவதைப் பற்றி பயம் கிடையாது. சித்ரவதைக்கு உள்ளாக்கப்படுவதைத்தான் விரும்பவில்லை. இரு கட்டைகளைக் கொண்டு என் விரைப்பைகள் நசுக்கப்படுவதையோ சிகரட் கங்கினால் என் கண் இமைகள் கருக்கப்படுவதையோ நான் விரும்பவில்லை. இந்த வாகனப் பயணமே இறுதிப் பயணமாக அமைவதை விரும்பவில்லை. ஆனால், இப்போது இதுதான் சாசுவதம் ஆக உள்ளது.

அவர்கள் என்னை பகல் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார்கள். அவர்கள் நன்றாக பருத்திருந்தனர். என்னைவிடப் பருமனாக. சுவரில் இருந்து வண்ணங்கள் உதிரத்தொடங்கிய ஒரு வீட்டுக்குள் என்னைக் கொண்டு சென்றனர். அங்குள்ள கழிவறையில் அடைத்தனர். அங்கு ஜன்னல்கள் இல்லை. ஆனால் சூரிய ஒளி உள்ளே வர ஒரு சிறிய துவாரம் இருந்தது. ஏற்கனவே கட்டுப்படுத்த முடியால் சிறுநீர் கழிந்ததால் எனது கால்களில் வழிந்த சிறுநீர் காய்ந்து இப்போது அரிக்கத் தொடங்கி இருந்தது. நான் எந்த சத்தமும் எழுப்பவில்லை. நான் அங்கு அமைதியாக அமர்ந்து அவர்களுக்கு ஒத்துழைக்கத் தொடங்கினேன். எனது தொழுகையை நினைவுக்குக் கொண்டுவர

**நான் சாக விரும்பவில்லை என்றாலும் சாவதைப் பற்றி பயம் கிடையாது. சித்ரவதைக்கு உள்ளாக்கப்படுவதைத்தான் விரும்பவில்லை. இரு கட்டைகளைக் கொண்டு என் விரைப்பைகள் நசுக்கப்படுவதையோ சிகரட் கங்கினால் என் கண் இமைகள் கருக்கப்படுவதையோ நான் விரும்பவில்லை. இந்த வாகனப் பயணமே இறுதிப் பயணமாக அமைவதை விரும்பவில்லை.**

விரும்பினேன். நாம் அனைவரும் ஒன்றுதான் என்பதை அவர்களுக்குக் காட்ட விரும்பினேன். ஆனால், மீண்டும் ஆபத்தில் சிக்க விரும்பவில்லை. அவர்கள் பார்த்துவிட்டால் தவறு செய்தவனாவேன். நிலைமை இன்னமும் மோசமாகி விடும். நான் எனக்குள் தொழுகையை முணு முணுத்தல் மட்டும் போதும். நான் இறைப்பற்றாளன் என்பதை அவர்கள் எண்ணத் தொடங்கிவிடுவார்கள்.

இருட்டத் தொடங்கியதும் அவர்கள் மீண்டும் வந்தார்கள். என்னால் புரிந்து கொள்ள இயலாத ஒரு மொழியில் அவர்கள் பேசினர். அது அரபு மொழியோ அல்லது பாஷ்தோ மொழியோ இல்லை. என்னவாக இருக்கும்? செச்சென்யா? ங்கோத்தா என்ன மொழிதான் அது? ங்கோத்தா ... அவங்கெல்லாம் யாரு? என் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டியது. அது நல்லது. மிகவும் பரிதாபகரமாகப் பார்வையில் படுவது நல்லதுதான். ”ஐயா!” என்னால் எந்த அளவுக்கு பணிவாகப் பேச முடியுமோ அந்த அளவுக்கு மிகுந்த பணிவுடன் பேசினேன். “நான் செய்த தவறுதான் என்ன? மன்றாடிக் கேட்கிறேன்.” ஆனால் என்னால் உரிய முறையில் எனது வாயைத் திறந்து பேச முடியவில்லை. மிக, மிக மெதுவாகப் பேசினேன். குடிகாரன் பேச்சுப்போலகூட ஒலித்தது. அல்லது யாரோ எனது நாக்கை வெட்டி விட்டார்களோ...?

அவர்கள் என்னைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. ஒருவன் முக்காலி மீது வீடியோ காமராவைப் பொருத்திக் கொண்டிருந்தான். மற்றொருவன், கார் பேட்டரி அளவில் இருந்த ஒரு யுபிஎஸ் சாதனத்தில் விளக்குக்கான பிளக்கை பொருத்திக் கொண்டிருந்தான். எனக்குத் தெரிந்து விட்டது. ஆனால், எனக்கு இது வேண்டாம். நான் இதை விரும்பவில்லை. ஒரு வெட்டப்படும் ஆடாக இருக்க நான் விரும்பவில்லை. ஒரு நல்ல பெரிய ஆடு ஒன்றை ஈத் பெருநாளுக்காக வாங்கி இருந்தோம். அப்போது நான் சிறுவன். பள்ளி முடிந்து வந்த பின்னர் நான் தான் அதற்கு இரை கொடுப்பேன். ஒரு வாரம் அது எங்கள் வீட்டில் கட்டப்பட்டிருந்தது. இலை, தழைகளைப் பறித்துப் போட வேண்டும். அப்போது என் கைகள் கண்ணிப்போய் விடும். அது ஒரு நல்ல ஆடு. ஆனால் அதன் கண்களில் களை இருக்காது. அக் கண்கள் எனக்கு ரெம்பப் பிடித்தது. அது தனது தாடைகளை பக்க வாட்டில் அசைத்து அசைத்து இலை, தழைகளை மெல்லுவதும் பிடித்தது. அது ஒரு வீட்டு வளர்ப்புப் பிராணி போல பழகியது. அது வளர்ப்புப் பிராணி இல்லை. அதன் கால்கள் சிறியதாக இருந்தது. செங்கலின் மீது ஏறி நின்றுதான் இலைகளைத் தின்ன முடிந்தது. என் பெற்றோர் கூறியபடி ஒரு மனிதன் அதைத் திடலுக்கு அழைத்துச் சென்று ஓதி, ஆண்டவருக்கு பலி கொடுத்தான்.

”இதப் பாருங்க. அவ்வாறு செய்யாதீர்கள்.” நான் இப்போது ஆங்கிலத்தில் பேசினேன். ஆனால், அதற்கு ஒரு பொருளும் இல்லை. வார்த்தைகள் எப்படியோ தற்செயலாக வந்து விழுந்து விட்டன. என்னால் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது. கண்ணீரைப் போன்றவர்கள். நான் என்னை நானே தணிக்கை செய்து கொள்கிறேன். நான் மதம் குறித்து எழுதவில்லை. நான் எப்போதுமே மதத்துக்கு மதிப்பளித்து வந்திருக்கிறேன். நான் ஏதாவது தவறிழைத்திருந்தால் சொல்லுங்கள். என்ன எழுதலாம் என்பதைச் சொல்லுங்கள். நான் மீண்டும் எழுத மாட்டேன். நான் எழுதுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால் இனி மீண்டும் எழுதவே மாட்டேன். அது எனக்குப் பிரச்சனையே கிடையாது. அது எனக்கு முக்கியமில்லை. நாம் அனைவரும் ஒன்றுதான். நாம் அனைவரும். உறுதியாக!

நான் வாய் திறக்காதவாறு எனது வாயை ஒட்டினர். வயிறு நன்றாகத் தரையில் படும்படி என்னைக் குப்புறப் படுக்க வைத்தனர். பின்னால் நின்றவன் என் தலை மயிரைப் பிடித்து தலையை உயர்த்தினான். அவன் செய்த செய்கை எனக்கு உடலுறவுச் செய்கைபோல இருந்தது. என் மனைவி இன்னமும் உயிரோடுதான் இருக்கிறாளா? நான் வந்தபிறகு அவளுடன் யார் படுக்கையைப் பகிர்ந்திருப்பார்? ஒருவரா? பல நபர்களா? அவள் அப்படி இல்லை என்று நம்புகிறேன். அவள் இன்னமும் வாழ்கிறாள் என்று நம்புகிறேன். அவன் கையில் இப்போது நீளமான வெட்டுக்கத்தி இருப்பதைப் பார்க்க முடிந்தது. அவன் காமிராவை நோக்கி பேசிக் கொண்டிருந்தான். நான் அதைப் பார்க்க விரும்பவில்லை. கண்களை மூடினேன். நான் எதையாவது செய்து அப்போதே எனது இதயம் வெடித்து விட வேண்டும் என விரும்பினேன். நான் இப்போதே போக வேண்டும். நான் இருக்க விரும்பவில்லை.

இப்போது அது எனக்குக் கேட்டது. எனது ரத்தம் பீறிட்டுக் கொட்டும் சத்தம். அது தரையில் பேனா மை போல சிந்திக் கிடப்பதைப் பார்க்க கண்களைத் திறக்கிறேன். நான் காலியாவதற்கு முன் நான் முடிவதைப் பார்க்கிறேன். •



**Printed by D. Vasanthkumar and Owned, published by V. Muthaiah and Printed at Sekar Offset Printers, New No. 50 (Old No. 168/1) Big Street, Chepauk, Chennai - 600 005 and Published at 22MJB street.Triplicane.Chennai 600005. Editor: V. Muthaiah**

கவிதை

ஆனந்த குமார்
vidaniru@gmail.com



## அழைப்பு

எதிர்பாராமல் தொடுதிரையில் ஒளிர்ந்த எண் மின்னழுத்தம் கூட்டியது..
காலாதீதமானது உயிர்த்தெழுந்த அதிசயம்...
சிறு புன்னகையோடும் அழுத்தமான
முத்தத்தோடும் ஒருவேளை முடிந்திருக்கலாம்..
தன்முனைப்பை நீரூற்றி வளர்த்து
மரமாக்கியதில் பிரியங்கள் எரியூட்டப்பட்டு
நாம் பொசுங்கி நான் நீயென
உருமாறிபோனோம்..
நிகழ்வுகள் தொலைவினில் நகர
காலம் பழுது பார்க்குமென்கிற வெற்று
நம்பிக்கையும் கடந்து போனது
எதற்கு அழைத்திருப்பாயென தெரியவில்லை..
கைதவறுதல் எனலாம்.. திரும்ப அழைக்க தைரியம் வரவில்லை..
இருவருக்குமிடையே வளர்ந்திருக்கிற
மௌன பனிமலை இறுகி நிற்கிறது..
சிறு புன்னகையும் அழுத்தமான முத்தமும்
உபயோகிக்கபடாமல் துருப்பிடித்து
அப்படியே தானிருக்கிறது..
தமயந்தியாய் காத்திருக்கேன்..
அடையாளம் தொலைந்த நளனுக்காய்..

## வலி

கதவிடுக்கில் சிக்கி பதறுகிற சுண்டுவிரல்..
கண்வலி உறுத்தலில் கைதான இமைகள்..
கேள்விசாதனம் பொருத்திய காதுகளின் வலி..
முழங்காலில் முளைத்த கட்டிபுண் ரணம்..
சந்தனம் தடவா மொட்டை மண்டையின் எரிச்சல்..
அறுவை சிகிச்சை பொருட்டு வயிறு அறுத்த வடு..
மூன்று நாட்கள் வயிறு பிடித்திழுத்து செய்கிற அழிச்சாட்டியம்..
விபத்தின் சிராய்ப்பில் அடுக்குகள் தொலைந்த தோல்சேதம்..
தண்டுவடம் சுருக்கென்று பிடித்திழுக்கிற அதிர்வு..
அத்தனை உணர்வுகளும் மொத்தமாய்
மொழிபெயர்க்கப்பட்டது
நீ சிநேகமற்ற வெற்று பார்வையில் முகம் திருப்பி
பிரியங்களை கழுவிலேற்றியபோது..



Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 / 43921
Postal Registration No. TN / CCN / 588 / 2019-2021 WPP No. TN/PMG (CCR) / WPP-354/2019-2021.
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel,Egmore. between 29th-4th of every month

கவிதை

ஈழபாரதி
jcinixon@gmail.com



# பெண்பிள்ளைகளின் கழிப்பறை

முற்செடிகளும்
முற்புதர்களும் பார்த்து ஒதுங்குகின்றோம்

வாளியோடு
சாலையைக்கடக்கின்றபோது
உடல்மேயும் கண்கள்
ஒதுங்கப்போனால்
ஒவ்வொரு கிளைகளாய்
பரவிக்கிடக்கின்றது

நான்கு திசையும்
பார்த்பின்பும்
அவரசகெதியில் உட்கார்ந்து
கழிக்கவேண்டியிருக்கிறது
ஒவ்வொரு நாளும்

இப்போதெல்லாம் அந்த கண்கள்
உறங்கிய பின்னர்தான்
புறப்படுகின்றோம்
மலம்கழிக்க.

(கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழக முகாம்களில் வசிக்கும் பெண்கள் கழிப்பறை வசதிகள் இல்லாத காரணத்தால் திறந்தவெளி காடுகளைப்பயன்படுத்திவரும் இவர்கள் சூழல் காரணமாக இரவுநேரங்களில் இயற்கை உபாதைகளுக்காக ஒதுங்குவது வேதனைக்குரியது.)